# பெரியார் தொலைநிலைக் கல்வி நிறுவனம்

# (PRIDE)

## பெரியார் பல்கலைக்கழகம்

**சேலம் – 636 011.**

**இளங்கலை ஜோதிடவியல்**

**இரண்டாமாண்டு**

**தாள் – 5 : யோகங்கள்**

**புத்தகம் எழுதியவர்**

தி . வித்யாசாகரமூர்த்தி, BA, MA, M.Sc. (Astrology)

ஜலகண்டபுரம்

சேலம்.

**இளங்கலை ஜோதிடவியல்**

**இரண்டாமாண்டு**

**தாள் – 5 : யோகங்கள்**

**கூறு – 1**

**சந்திர, சூரியனால் ஏற்படும் யோகங்கள்**

1. சந்திரனால் ஏற்படும் யோகம்
2. சூரியனால் ஏற்படும் யோகம்

**கூறு – 2**

**பஞ்சமகா புருசயோகம்**

1. செவ்வாயின் யோகங்கள்
2. புதனின் யோகங்கள்
3. குருவின் யோகங்கள்
4. சுக்ரனின் யோகங்கள்
5. சனியின் யோகங்கள்

**கூறு – 3**

**கிரக இணைவு யோகங்கள்**

1. இரு கிரக இணைவு
2. மூன்று கிரக இணைவு
3. நான்கு கிரக இணைவு

**கூறு – 4**

**பாவகத்தால் ஏற்படும் யோகம்**

1. பாவக இணைவுகள்
2. தர்ம கர்மாதிபதி யோக விளக்கம்
3. பாவகாதிபதிகள் மாறிநின்ற யோகங்கள்

**கூறு – 5**

**பலவிதமான யோகங்கள்**

1. யோகங்கள் செயல்படும்விதம்
2. அவ யோகங்கள்
3. நோய்க்கான யோகங்கள்

**பார்வை நூல்கள் :–**

| | | |
|---|---|---|
| ஜாதக பாரிஜாதம் | – | வேதலிங்கப்பட்டர் |
| பலதீபிகை | – | மந்திரேஸ்வரமுனிவர் |
| ஜாத அலங்காரம் | – | கீரனூர் நடராசர் |
| வீமேசுர உள்ளமுடையான் | – | திருமயிலை குழந்தையானந்த சுவாமி |
| குமாரசாமியம் | – | வீரவநல்லூர் குமாரசுவாமி தேசிகர் |

## யோகங்கள்

யோகம் என்ற சொல்லுக்கு ஒன்றுபடுதல் என்று பொருள். இரண்டு கிரகங்கள் ஒன்றுடன் ஒன்று சேர்வதாலோ, பார்த்துக் கொள்வதாலோ, பரிவர்த்தனை பெறுவதாலோ, ஒருவர் சாரத்தில் ஒருவர் அமர்ந்தாலோ, ராசி வீட்டின் அடிப்படையில் தொடர்பு கொண்டாலோ அதை யோகம் என்கிறோம்.

ஜோதிட சாஸ்திரத்தில் சுமார் 3600க்கும் மேற்பட்ட யோகங்கள் இருக்கின்றன. இந்த யோகங்களை அனுகூல யோகங்கள் என்றும் அபவாத யோகங்கள் என்றும் கூறுகின்றோம்.

பல யோகங்கள் இருந்தாலும், அவை அளிக்கும் சுப, அசுப பலன்களை அனுபவிக்கும் வாய்ப்பு அந்த ஜாதகருக்கு இருந்தால் அனுகூல யோகங்கள் என்கிறோம்.

யோகங்கள் இருந்தும் அனுபவிக்கும் வாய்ப்பு ஜாதகருக்கு இல்லாவிட்டால் அவற்றை அபவாத யோகங்கள் என்கிறோம்.

யோகங்கள் சிறப்பாகச் செயல்பட வேண்டுமானால் கீழ்க்கண்ட அமைப்புகள் இருக்க வேண்டும்.

1. யோகம் தரும் கிரகங்கள் ஆட்சி, உச்சம், நட்பு, பரிவர்த்தனை, வர்க்கோத்தமம் போன்ற நல்ல நிலைகளில் இருக்க வேண்டும்.
2. யோகம் தரும் கிரகங்கள் மறைவு, பகை, நீசம், அஸ்தமனம் பெற்றிருக்கக் கூடாது.
3. யோகம் தரும் கிரகங்கள் ஆதிபத்திய தோஷங்கள் கூடாது.
4. யோகம் தரும் கிரகங்கள் கிரக யுத்தத்தில் தோல்விகள் கூடாது.
5. யோகம் தரும் கிரகங்கள் நல்ல சுப சாரம் பெற்றிருக்க வேண்டும்.
6. லக்கினம், சூரியன், சந்திரன் இவற்றிற்கு கேந்திர, திரிகோண ஸ்தானங்களில் யோகங்கள் அமைவது சிறப்பு ஆகும்.
7. யோகம் தரும் கிரகங்கள் அமர்ந்த வீட்டுக்குறிய கிரகங்கள் வலுவோடு இருக்க வேண்டும்.

**கூறு – 1**

## சந்திர சூரியனால் ஏற்படும் யோகங்கள்

சூரியன் மற்றும் சந்திரன் பிற கிரகங்களின் சேர்க்கையால் அல்லது அவை நிற்கும் ஸ்தானத்திற்கு தக்கவாறு சில யோகங்கள் ஏற்படும்.

## சந்திரனால் ஏற்படும் யோகங்கள்

### சுனப யோகம்

| | | | |
|---|---|---|---|
| சுக் | | | சந் |
| சந் | சுனப யோகம் | | குரு |
| செவ் | | | சந் |
| சந் | | சனி | சந் புதன் |

சந்திரனுக்கு இரண்டாமிடத்தில் ஏதேனும் ஒரு கிரஹம் (சூரியன், ராகு , கேது தவிர) இருக்குமானால் சுனப யோகம் உண்டாகும்.

சுனப யோகம் உள்ள ஜாதகர்கள் செல்வந்தர்களாகவும் புத்திசாலியாகவும், அரசு ஆதரவு பெற்றவர்களாகவும் பேரும் புகழும் உடையவர்களாகவும், அதிகமான சொத்துக்கள் உடையவர்களாகவும் இருப்பார்கள்.

சுனப யோகமானது பெரும்பாலும் ஜாதகர்களுக்கு ஏற்படும் வாய்ப்புகள் உள்ளது. ஆகையால் இந்த யோகம் அனைவருக்கும் பலன் தரும் என்பது இக்காலகட்டத்திற்கு ஏற்றவாறு இல்லை. எனவே, இதை சந்திரனுக்கு இரண்டில் குஜாதி ஐவரில் யாராவது உச்சம் பெற்று அமர்ந்திருப்பின் அது சுனப யோகம் எனலாம். அவ்வாறு ஏற்படும் வாய்ப்புகள் மிதுன ராசி, சிம்மராசி, கன்னிராசி, தனுசு ராசி, கும்ப ராசி ஆகிய ஐந்து ராசி அமைப்புக்கு ஒத்துவரும்.

**அனபயோகம்**

<table>
<tr><td>சுக்ரன்</td><td>சந்</td><td></td><td></td></tr>
<tr><td>சந்</td><td colspan="2" rowspan="2">அனப யோகம்</td><td>குரு</td></tr>
<tr><td>செவ்</td><td>சந்</td></tr>
<tr><td></td><td>சந்</td><td>சனி<br>சந்</td><td>புதன்</td></tr>
</table>

சந்திரனுக்கு பன்னிரெண்டாமிடத்தில் செவ்வாய், புதன், குரு சுக்கிரன், சனி இவர்களில் ஒருவர் இருப்பாரானால் அனப யோகம் ஏற்படும்.

அனபயோகம் உடைய ஜாதகர்கள் நல்ல உடல் கட்டு, கம்பீரமான தோற்றம், பெருந்தன்மை உடையவர்களாகவும், அழகான உடைகளை உடுத்துபவர்களாகவும் மகிழ்ச்சி மிக்கவர்களாகவும் இருப்பார்கள்.

அனப யோகமானது மேற்கண்ட சுனப யோக போன்று அனைவருக்கும் ஏற்படும். எனவே, இந்த யோகத்தை சந்திரனுக்கு 12ல் குஜாதி ஐவரில் யாராவது உச்சம் பெற்று அமர்ந்தால் எனக் கொள்ளலாம். அவ்வாறு எனில் மேஷராசி, சிம்மராசி, துலாராசி, விருச்சிகராசி, கும்பராசி ஆகிய ஐந்து ராசிக்கு ஏற்படும். இதில் சிம்மம் மற்றும் கும்பத்திற்கு இரண்டு யோகங்களும் அதீதமாக செயல்படும்.

**துருதுரா யோகம்**

<table>
<tr><td>சந்<br>குரு<br>சுக்</td><td>சந்<br>செவ்</td><td>சுக்<br>சந்</td><td>சந்<br>புத</td></tr>
<tr><td>சனி<br>சந்</td><td colspan="2" rowspan="2">துருதுரா யோகம்</td><td>சந்<br>குரு</td></tr>
<tr><td>சந்<br>சனி<br>செவ்</td><td>சந்</td></tr>
<tr><td>குரு<br>சந்</td><td>செவ்</td><td>சுக்ரன்<br>சந்<br>சனி</td><td>புதன்</td></tr>
</table>

சந்திரனுக்கு இரு புறங்களிலும் குஜாதி ஐவரில் ஒருவர் இருந்தால் துருதுரா யோகம் ஏற்படும்.

துருதுரா யோகம் உள்ளவர்கள் அதிகமான சொத்துக்கள், வாகனங்கள் உள்ளவர்களாகவும் நாளை நடக்கப் போவதை இன்றே அறிபவர்களாகவும், முன் கோபிகளாகவும், மனதில் விகல்பம் இல்லாதவர்களாகவும் மகிழ்ச்சி மிக்கவர்களாகவும் இருப்பார்கள்.

இந்த யோகமானது சந்திரனுக்கு இரு புறங்களிலும் குஜாதி ஐவரில் யாராவது ஆட்சி பெற்று அமர்ந்தால் துருதுரா யோகம் எனக் கொள்ளுதல் வேண்டும். அவ்வகையில் சிம்மம், விருச்சிகம் தவிர பத்து ராசிகளுக்கு அமையும் வாய்ப்புகள் உள்ளன. என்றாலும் முன் பின் இரண்டு கோள்கள் ஆட்சியில் அமரும் வாய்ப்புகள் இலட்சத்தில் ஒருவருக்குதான் கிடைக்கும் அரிதான ஒன்று எனவே இந்த யோகம் மிகவும் அதிகமான நன்மை பலனை செய்யும்.

**கஜகேசரி யோகம்**

<table>
<tr><td>குரு சந்<br>ஆட்சி</td><td>சந்</td><td></td><td>சந்</td></tr>
<tr><td></td><td colspan="2" rowspan="2">கஜகேசரி<br>யோகம்</td><td>சந்<br>குரு<br>உச்சம்</td></tr>
<tr><td>சந்</td><td></td></tr>
<tr><td>குரு<br>சந்<br>ஆட்சி</td><td></td><td>சந்</td><td>சந்</td></tr>
</table>

சந்திரனுக்கு கேந்திரத்தில் குரு இருப்பது கஜகேசரி யோகமாகும். கஜகேசரி யோகம் உடையவர்கள் புத்தி கூர்மை உடையவர்களாகவும், பலசாலிகளாகவும், செல்வந்தர்களாகவும், பிறரால் மதிக்கப்படக் கூடியவர்களாகவும், அரசாங்க ஆதரவு பெற்றவர்களாகவும், ஊர் தலைவர்களாகவும் நீண்ட ஆயுள் உடையவர்களாகவும் இருப்பார்கள்.

கஜம் என்றால் குரு, கேசரி என்றால் சந்திரன் ஆகவே இந்த இருவரையும் கொண்டு அமையும் யோகம். எனப் பொருள்படும் இதில் சந்திரனுக்கு கேந்திரங்களில் குரு, ஆட்சி அல்லது உச்சம் எனக் கொண்டால் இவ்யோகம் மிகச்சரியாக செயல்படும். இவ்வகையில் 8 ராசிகளுக்கு ஏற்படும் இதில் கடகம், தனுசு, மீனம் ஆகிய ராசிகளுக்கு மிகவும் பிரபலமான யோகத்தை ஏற்படுத்தும்.

**சந்திரமங்கள யோகம்**


<table>
<tr><td></td><td>செவ்வாய்<br>சந்திரன்</td><td></td><td></td></tr>
<tr><td></td><td colspan="2" rowspan="2">சந்திரமங்கள<br>யோகம்</td><td>செவ்வாய்<br>சந்திரன்</td></tr>
<tr><td>செவ்வாய்<br>சந்திரன்</td><td></td></tr>
<tr><td></td><td>செவ்வாய்<br>சந்திரன்</td><td></td><td></td></tr>
</table>

சந்திரனும், செவ்வாயும் சேர்ந்து இருப்பது சந்திர மங்கள யோகம் ஆகும்.

சந்திர மங்கள யோகம் உள்ளவர்கள் கம்பீரமான தோற்றம் உடையவர்களாகயும், அதிர்ஷ்டசாலிகளாகவும், கல்வியில் தேர்ச்சியுடையவர்களாகவும், நினைத்ததை செய்து முடிப்பவர்களாகவும், எந்த முயற்சியிலும் சுலபமான வெற்றி பெறுபவர்களாகவும் இருப்பார்கள்.

மங்களன் எனில் செவ்வாய். எனவே சந்திர, செவ்வாயின் இணைவு என பொருள்படும் இந்த அமைப்பு மேற்கண்ட படத்தில் உள்ளவாறு மேஷராசி, விருச்சிகராசி, கடகராசி, மகரராசி ஆகிய நான்கு ராசிகளில் ஏற்பட்டாலும், கடகத்தில் செவ்வாய் நீசம், விருச்சிகத்தில் சந்திரன் நீசம். எனவே இந்த இரண்டு ராசிக்கு எதிர்மறையான பலன்களும், மேஷம், மகரம், ராசிகளுக்கு நல்ல யோகத்தையும் ஏற்படுத்தும்.

**சந்திர அதியோகம்**




சந்திரனுக்கு 6, 7, 8ல் புதன், குரு, சுக்கிரன் ஆகியோர் இருப்பது சந்திர அதியோகம் ஆகும்.

சந்திர அதியோகம் உள்ளவர்கள் எதிரிகளை வெல்பவர்களாகவும், நல்ல படிப்பு நீண்ட ஆயுள் உள்ளவர்களாகவும் அழகான மனைவியை பெற்றிருப்பவர்களாகவும் செல்வந்தர்களாகவும் ஆரோக்கியத்துடனும், சுகபோகத்துடனும் மகிழ்ச்சியுடன் இருப்பார்கள்.

சந்திர அதியோகம் ஏற்படும் அமைப்பு பார்த்தோமானால் தனுசு ராசிக்கு மட்டும் அமையும் வாய்ப்பு உள்ளது. இது ஏற்படுவது மிகவும் அரிதானதாகும். இவ்வாறு அமைந்தால் அது மிகவும் அதீத ராஜயோகத்தை செயல்படுத்தும்.

**வசுமதி யோகம்**

| | | | |
|---|---|---|---|
| **குரு சுக்ரன்** | | **சுக்ரன்** | **புதன்** |
| | **வசுமதி யோகம்** | | **குரு** |
| | | | |
| **குரு** | | **சுக்** | **புதன்** |

இலக்கினம் அல்லது சந்திரனுக்கு 3, 6, 10, 11ல் குரு, சுக்கிரன், புதன் (சுபர்கள்) இருந்தால் வசுமதி யோகம் ஏற்படும்.

வசுமதி யோகம் உள்ளவர்கள் பிறரை அண்டி வாழாதவர்களாகவும் செல்வந்தர்களாகவும், சுகஜீவனம் நடதுதுபவர்களாகவும் இருப்பார்கள்.

வசுமதி யோகம் மேற்கண்ட படத்தின்படி எந்த ராசி, லக்னத்திற்கும் ஏற்படும் வாய்ப்புகள் இல்லை. அதாவது, உப ஜெயஸ்தானங்களான 3, 6, 10, 11 ல் சுபக் கோள்கள் அமர்ந்தால் என்பது லக்னத்திற்கு என்ற அமைப்பே ஏற்படுத்தும். இதில், வளர்பிறை சந்திரன், குரு, சுக்ரன், தனித்தபுதன், ஆகியவர்கள் முறையே 3, 6, 10, 11ல் அமரும் வாய்ப்பு ஏற்படலாம். ஆனாலும் அது மிகவும் அரிதாகவே ஏற்படும். ஆகையால் இந்த யோகம் யாரோ ஒன்று, இரண்டு, நபர்களுக்கு மட்டும் பொருந்தும் அதிதயோகமாகும்.

**ராஜ லட்சண யோகம்**

| | | | |
|---|---|---|---|
| | புத, குரு<br>சுக், சந் | புத, குரு<br>சுக், சந் | |
| புத, குரு<br>சுக், சந் | ராஜலட்சண<br>யோகம் | | |
| | | | |
| குரு, சந்<br>புத, சுக் | | | |

சந்திரன், புதன், குரு, சுக்கிரன் ஆகிய நான்கு சுபர்களும் சேர்ந்து இலக்கினத்திலோ இலக்கினத்திற்கு கேந்திரத்திலோ இருந்தால் ராஜ லட்சண யோகம் உருவாகும்.

ராஜலட்சண யோகம் உடையவர்கள் வசீகரமான தோற்றம் உடையவர்களாகவும் அரசனைப் போல் வாழ்பவர்களாகவும் அரசனுக்குரிய எல்லா குணங்களையும் உடையவர்களாகவும் இருப்பார்கள்.

வளர்பிறை சந்திரன் தனித்த புதன், குரு, சுக்ரன் ஆகிய நான்கு சுபக்கோள்களும் இணைவு என்பதால் மிகவும் அரிதான யோகம், இது சரியான ராஜயோகத்தை தகும், மேற்கண்ட படத்தில் உள்ளவாறு மேச, ரிஷப, கும்ப, தனுசு ராசியாகும். இணைந்து அமர்ந்தால் மிகச்சரியாக இந்த யோகம் செயல்படும். மற்ற ராசிகளில் மீனம், கன்னி, விருச்சிகம், மகரம் ஆகிய ராசியில் முறையே புதன், சுக்ரன், சந்திரன், குரு ஆகியோர் நீசம் அடைந்த நிலையில் இருப்பதனால் பலன்கள் செயல்படாது. மற்ற ராசிகளில் பகை அமைப்பு ஏற்படும் வாய்ப்பு உள்ளதால் அவையும் சிறப்பில்லை.

**அமலாயோகம்**

| | | | |
|---|---|---|---|
| குரு<br>சுக் | | சந், சுக் | புதன் |
| | **அமலா யோகம்** | | குரு<br>சந் |
| | | | |
| குரு | | சுக் | புதன் |

சந்திரனுக்கு அல்லது இலக்கினத்திற்கு பத்தாமிடத்தில் ஒரு சுபகிரகம் இருந்தால் அமலாயோகம் உண்டாகும்.

அமலா யோகம் உடையவர்கள் சுத்தமான மனம் உள்ளவர்களாகவும், தன்னடக்கம் உள்ளவர்களாகவும், தெய்வானு கூலம் பெற்றவர்களாகவும் அனைவராலும் விரும்பப்படக் கூடியவர்களாகவும் பெயர், புகழுடன் இருப்பார்கள்.

மேற்கண்ட படத்தில் உள்ளவாறு சுபர்கள் ஆட்சி அல்லது உச்சத்தில் அமரும் நிலையில் அது சந்திரனுக்கோ, லக்னத்திற்கோ 10ஆம் இடமாக அமையும் வாய்ப்புகள், மிதுனம், சிம்மம், கன்னி, துலாம், தனுசு, மகரம், மீனம் ஆகிய 7 ராசிகளுக்கு மட்டும் பொருந்தும்.

**சகடை யோகம்**


<table>
<tr><td></td><td></td><td>குரு</td><td>குரு</td></tr>
<tr><td></td><td colspan="2" rowspan="2">சகட யோகம்</td><td></td></tr>
<tr><td>குரு</td><td></td></tr>
<tr><td></td><td></td><td>குரு</td><td>குரு</td></tr>
</table>

குருவுக்கு 6, 8, 12 ஆகிய ஸ்தானங்களில் சந்திரன் இருந்தால் சகடை யோகம் ஏற்படும்.

சகடை யோகம் உடையவர்களின் வாழ்க்கை, சக்கரம் சுழல்வது போல் ஏற்றம், இறக்கம் நிறைந்ததாக, நிலையற்று இருக்கும். ஏழ்மை, கவலை மிக்கவர்களாகவும் உறவினர்களால் வெறுக்ககப்படுபவர்களாகவும் இருப்பார்கள்.

படத்தில் உள்ளவாறு குரு பகை நீசம் பெறும் ராசிகளான ரிஷபம், மிதுனம், கன்னி, துலாம், மகரம் ஆகிய ராசியில் குரு இருக்கும் போது அதற்கு 6, 8, 12ல் சந்திரன் வரும் போது பிறந்த ஜாதகருக்கு சகடை தோஷம் உண்டு. இது குழந்தைக்கு 1 வருட காலம் வரை நோய் கொடுக்கும். பின்னர் வளந்த பின் தொழிலை பாதிக்கும்.

**கேம துருமயோகம்**




சந்திரனுக்கு இருபுறமும் கிரகங்கள் இல்லாவிட்டால் கேம துரும யோகம் ஏற்படும். கேமதுரும யோகம் உடையவர்கள் முன் கோபிகளாகவும், எப்பொழுதும் தவறான முடிவுகளையே எடுப்பவர்களாகவும் இருப்பார்கள். மனைவி, மக்கள், உற்றார் உறவினர்கள் இவர்களை மதிக்க மாட்டார்கள். ஏழையாகவும், கவலை மிக்கவர்களாகவும், பிறரை சார்ந்து இருப்பவர்களாகவும், வஞ்சகர்களாகவும் இருப்பார்கள்.

மேலே குறிப்பிட்டவாறு மூலநூல்களில் இருப்பினும் சந்திரனுக்கு முன்பின் பாவ கிரகங்களான செவ்வாய், சூரியன், ராகு, கேது பாவியோடு கூடிய புதன் ஆகியோரில் யாராவது சந்திரனுக்கு முன் பின் அமர்ந்தால் கேமதுரும யோகம் ஏற்படும். இது அதீதமான தீயபலன்களை செய்யும் யோகமாகும்.

## சூரியனால் ஏற்படும் யோகங்கள்

### வெஸியோகம்

| | | | |
|---|---|---|---|
| சுக் | | | சூரி |
| சூரி | | | குரு |
| செவ் | | | சூரி |
| சூரி | | சனி | சூரி புதன் |

சூரியனுக்கு இரண்டாமிடத்தில் (சந்திரன், ராகு, கேது தவிர) குஜாதி ஐவரில் ஒருவர் இருந்தால் வெஸியோகம் உண்டாகும்.

வெஸியோகம் உடையவர்கள் தைரியாசாலிகளாகவும் பிறருக்கு உதவுபவர்கள் ஆகவும், அதிர்ஷ்டசாலிகளாகவும் நற்குணங்கள் உடையவர்களாகவும், மகிழ்ச்சி மிக்கவர்களாகவும், புகழ் மிக்கவர்களாகவும் இருப்பார்கள்.

வெஸியோகமானது பெரும்பாலும் ஜாதகர்களுக்கு ஏற்படும் வாய்ப்புகள் உள்ளது. ஆகையால் இந்த யோகம் அனைவருக்கும் பலன் தரும் என்பது இக்காலகட்டத்திற்கு ஏற்றவாறு இல்லை. எனவே, இதை சூரியனுக்கு இரண்டில் குஜாதி ஐவரில் யாராவது உச்சம் பெற்று அமர்ந்திருப்பின் அது வெஸியோகம் எனலாம். அவ்வாறு ஏற்படும் வாய்ப்புகள் மிதுன ராசி, சிம்மராசி, கன்னிராசி, தனுசு ராசி, கும்ப ராசி ஆகிய ஐந்து ராசி அமைப்புக்கு ஒத்துவரும்.

**வஸி யோகம்**

| | | | |
|---|---|---|---|
| **சுக்ரன்** | **சூரி** | | |
| **சூரி** | **வஸி யோகம்** | | **குரு** |
| **செவ்** | | | **சூரி** |
| | **சூரி** | **சனி**<br>**சூரி** | **புதன்** |

சூரியனுக்கு பன்னிரெண்டாமிடத்தில் (சந்திரன், ராகு, கேது தவிர) இருந்தால் வஸியோகம் ஏற்படும். வஸியோகம் உள்ளவர்கள் மகிழ்ச்சி மிக்கவர்களாகவும், செழிப்பான வாழ்க்கை உள்ளவர்களாகவும் சுதந்திரமானவர்களாகவும், அரசால் விரும்பப்படுபவர்களாகவும் இருப்பார்கள்.

வஸியோகம் உடைய ஜாதகர்கள் நல்ல உடல் கட்டு, கம்பீரமான தோற்றம், பெருந்தன்மை உடையவர்களாகவும், அழகான உடைகளை உடுத்துபவர்களாகவும் மகிழ்ச்சி மிக்கவர்களாகவும் இருப்பார்கள்.

வஸியோகமானது மேற்கண்ட வெஸியோகம் போன்று அனைவருக்கும் ஏற்படும். எனவே, இந்த யோகத்தை சூரியனுக்கு 12ல் குஜாதி ஐவரில் யாராவது உச்சம் பெற்று அமர்ந்தால் எனக் கொள்ளலாம். அவ்வாறு எனில் மேஷராசி, சிம்மராசி, துலாராசி, விருச்சிகராசி, கும்பராசி ஆகிய ஐந்து ராசிக்கு ஏற்படும். இதில் சிம்மம் மற்றும் கும்பத்திற்கு இரண்டு யோகங்களும் அதீதமாக செயல்படும்.

**உபயசரி யோகம்**

| | | | |
|---|---|---|---|
| சந்<br>குரு<br>சுக் | சந்<br>செவ் | சுக்<br>சந் | சந்<br>புத |
| சனி<br>சந் | உபயசரி யோகம் | | சந்<br>குரு |
| சந்<br>சனி<br>செவ் | | | சந் |
| குரு<br>சந் | செவ் | சுக்ரன்<br>சந்<br>சனி | புதன் |

சூரியனுக்கும் இருபுறமும் குஜாதி ஐவர் நிற்பது உபயசரியோகம் ஆகும்.

உபயசரி யோகம் உடையவர்கள் கெட்டிக்காரர்களாகவும், பிறருக்கு உதவுபவர்களாகவும் தைரியசாலிகளாகவும் சரளமான பேச்சு உள்ளவர்களாகவும், செல்வந்தர்களாகவும், புகழ் மிக்கவர்களாகவும் எல்லோராலும் விரும்பப்படுபவர்களாகவும் சொத்துக்கள், வாகனங்கள் உள்ளவர்களாகவும், நாளை நடக்கப் போவதை இன்றே அறிபவர்களாகவும், முன் கோபிகளாகவும், மனதில் விகல்பம் இல்லாதவர்களாகவும் மகிழ்ச்சி மிக்கவர்களாகவும் இருப்பார்கள்.

இந்த யோகமானது சூரியனுக்கு இரு புறங்களிலும் குஜாதி ஐவரில் யாராவது ஆட்சி பெற்று அமர்ந்தால் உபயசரி யோகம் எனக் கொள்ளுதல் வேண்டும். அவ்வகையில் சிம்மம், விருச்சிகம் தவிர பத்து ராசிகளுக்கு அமையும் வாய்ப்புகள் உள்ளன. என்றாலும் முன் பின் இரண்டு கோள்கள் ஆட்சியில் அமரும் வாய்ப்புகள் இலட்சத்தில் ஒருவருக்குதான் கிடைக்கும் அரிதான ஒன்று எனவே இந்த யோகம் மிகவும் அதிகமான நன்மை பலனை செய்யும்.

**நிபுண யோகம் அல்லது புத ஆதித்ய யோகம்**

| | | | |
|---|---|---|---|
| | சூரி புத | | சூரி புத |
| | நிபுண யோகம் | | |
| | | | சூரி புத |
| சூரி புத | சூரி புத | | சூரி புத |

சூரியனும், புதனும் சேர்ந்து இருப்பது நிபுணயோகமாகும்.

நிபுண யோகம் உடையவர்கள் தைரிய சாலிகளாகவும், நல்ல படிப்பு உள்ளவர்களாகவும், வாழ்க்கையில் வெற்றி பெறுபவர்களாகவும் புத்திக் கூர்மை மிக்கவர்களாகவும், எல்லா வேலைகளிலும் திறமை மிக்கவர்களாகவும் மதிப்பு. மரியாதை உள்ளவர்களாகவும், எல்லா வசதிகளுடன் மகிழ்ச்சியுடன் இருப்பார்கள்.

வானிலையில் சூரியனுக்கு மிகவும் அருகில் இருக்கும் கோளான புதன் எப்போதும் சூரியனுடன் இணைந்தே காணப்படும். ஆகையால் இந்த யோகம் அனேகர்களுக்கு ஏற்படும் வாய்ப்பு உள்ளது. அவ்வாறு இருப்பினும், சூரியன், புதன் இருவரும் பகை அல்லது நீசம் பெறாமல் இணைந்து இருக்க கூடிய மேஷம், மிதுனம், சிம்மம், கன்னி, விருச்சிகம், தனுசு ஆகியவை சிறந்த பலன்களை தரும். அதில் விருச்சிகம், தனுசு மட்டும், மத்திம பலன் செய்யும்.

**திரிலோசன யோகம்**

| | | | |
|---|---|---|---|
| **சூரி** | | | |
| | **திரிலோசன யோகம்** | | **சந்** |
| | | | |
| | **செவ்** | | |

சூரியன், சந்திரன், செவ்வாய் ஒன்றுக்கொன்று திரிகோணத்தில் இருந்தால் திரிலோசன யோகம் உண்டாகும்.

திரிலோசன யோகம் உடையவர்கள் முக்காலமும் உணர்பவர்களாகவும், ஒருவரை பார்த்தவுடன் அவரது குணாதிசயங்களை கூறுபவர்களாகவும், உடன் பிறந்தவர்களுக்காக எந்தவித தியாகமும் செய்பவர்களாகவும், செல்வந்தர்களாகவும், புத்திசாலிகளாகவும் தீர்க்காயுள் உள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

**திரிகோண யோகம்**

| | | | |
|---|---|---|---|
| குரு | செவ் | சுக் | புத |
| சனி | திரிகோண | | சந் |
| சனி | யோகம் | | சூரி |
| குரு | செவ் | சுக் | புதன் |

இந்த யோகமானது திரிகோண யோகம் என்ற பொருளில் அமையும் அனைத்து லக்னங்களுக்கும் 1, 5, 9 ஆம் வீடுகள் திரிகோணம் அதே போல 1, 5, 9ம் அதிபதிகளும் தங்களுக்குள் மித்ரர்களாகவே அமைவார்கள். அவ்வகையில், சூரியன், குரு, செவ்வாய், சந்திரன் ஆகியோர் ஒரு அணியாகவும், சுக்ரன், புதன், சனி, ஆகியோர் இரண்டாவது அணியாகவும் செயல்படும் அமைப்பு உண்டு, அதில் முதல் அணியை சார்ந்து யோகம் ஏற்படில் அவர்கள் நியாயம், தர்மம், பாவ, புண்ணியம் இவற்றை அனுசரித்து வாழ்வார்கள். இரண்டாவது அணியை சார்ந்து திரிகோண யோகம் ஏற்படின் மேற்கூறிய நியாயம், தர்மம், பாவ, புண்ணியம், எவற்றைபற்றியும் கவலைபடாமல் பொருள் சேர்த்துக் கொண்டே இருப்பார்கள். இவர்களை அருள்அணி, பொருள்அணி, என்றும் அழைப்பது உண்டு.

ஆகவே திரிகோணயாகம் என்பது லக்னத்தில் அதன் அதிபதியும் 5ல் அதன் அதிபதியும், 9ல் அதிபதியும் வரிசையாக அமரலாம் அல்லது ஒருவருக்கு ஒருவர் மாறி பரிவர்த்தனையில் அமரலாம் அல்லது மூவரும் இணைந்து 1 அல்லது 5 அல்லது 9ல் அமரலாம். அவ்வாறு அமைவதே திரிகோண யோகமாகும்.

**பார்வை நூல்கள் :–**


ஜாதக பாரிஜாதம் – வேதலிங்கப்பட்டர்

பலதீபிகை – மந்திரேஸ்வரமுனிவர்

ஜாத அலங்காரம் – கீரனூர் நடராசர்

வீமேசுர உள்ளமுடையான் – திருமயிலை குழந்தையானந்த சுவாமி

குமாரசாமியம் – வீரவநல்லூர் குமாரசுவாமி தேசிகர்

குறிப்பு

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

## கூறு – 2

## பஞ்ச மஹா புருஷ யோகம்

குஜாதி ஐவரான செவ்வாய், புதன், குரு, சுக்ரன், சனி, ஆகியோர்களே பஞ்ச மஹா புருஷர்கள் ஆவர்.

லக்கினம் அல்லது சந்திரனுக்கு கேந்திரத்தில் அமர்ந்திருக்க அந்த ராசி, அந்த கிரகம் ஆட்சி அல்லது உச்சம் பெறும் ஸ்தானமாக இருந்தால் பஞ்சு மஹா புருஷ யோகம் ஏற்படுகிறது.

செவ்வாயினால் ருசக யோகமும், புதனால் பத்ர யோகமும், குருவால் அம்ச யோகமும், சுக்ரனால் மாளவ்ய யோகமும், சனியால் சச யோகமும் ஏற்படுகின்றன.

### 1. ருசக மஹா புருஷ யோகம்

லக்னம் அல்லது சந்திரனுக்கு கேந்திரத்தில் செவ்வாய் ஆட்சி உச்சம் பெற்றிருப்பது ருசக மஹா புருஷ யோகமாகும்.

| | | | |
|---|---|---|---|
| | ல செவ்வாய் ஆட்சி | ல | |
| ல | | | ல |
| ல செவ்வாய் உச்சம் | | | ல |
| | ல செவ்வாய் ஆட்சி | ல | |

ருசக யோகம் உடையவர்கள் நல்ல உடல்நிலை, நல்ல பலம் இளமையான தோற்றம் உடையவர்களாகவும், பழமையான பழக்க வழக்கங்களை மதிப்பவர்களாகவும், மந்திர சாஸ்திரம் அறிந்தவர்களாகவும், அரசராகவோ அல்லது அரசருக்கு நிகரானவராகவோ இருப்பார்கள். மேலும் செல்வந்தர்களாகவும், தர்மசிந்தனை உடையவர்களாகவும், தீர்காயுள் கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.


ருசக யோகமானது லக்ன அமைப்புபடி மேற்கண்ட 8 லக்னங்களுக்கு ஏற்படும். இதில் சந்திரனுக்கு கேந்திரத்தில் என எடுத்துக் கொண்டால்

அனைத்து லக்னங்களுக்கும் ஏற்படும். ஆகையால் சந்திரனை கொண்டு கணக்கிடுதல் கூடாது.

மேற்கண்ட அமைப்பில் ரிஷப, கடக, துலாம் லக்னங்களுக்கு 7ல் செவ்வாய் அமைந்தால் அது கணவன் அல்லது மனைவிக்குதான் யோகம் ஏற்படுத்தும். ஆகையால், மேஷம், சிம்மம், விருச்சிகம், மகரம், கும்பம் ஆகிய லக்னங்களுக்கு நற்பலன்கள் செய்யும்.

**2. பத்ர மஹா புருஷ யோகம்**

லக்னம் அல்லது சந்திரனுக்கு கேந்திரத்தில் புதன் ஆட்சி அல்லது உச்சம் பெற்றிருப்பது பத்ர மஹா புருஷ யோகம் ஆகும்.





பத்ர யோகம் உடையவர்கள் நீண்ட ஆயுளும் புத்திக்கூர்மையும், கற்றோறால் பாராட்டப்படுபவர்களாகவும், செல்வந்தர்களாகவும், தலைமை தாங்கும் தகுதி கொண்டவர்களாகவும், அனைவருக்கும் உதவுபவர்களாகவும் இருப்பார்கள்.

பத்ர யோகமானது மேற்கண்ட 4 லக்னங்களுக்கு மட்டும் ஏற்படும் அதில் தனுசு, மீனத்திற்கு, புதன் பாதகாதிபதி என்பதால் சுமாரான பலன்களையே செய்யும், எனவே மிதுன, கன்னி லக்னகாரர்களுக்கு புதன் ஆட்சி, உச்சம், மூலத்திரிகோணத்தில் அமைந்தால் மிகவும் அதிகமான யோகங்களை செய்யும்.

### 3. ஹம்ச மஹா புருஷ யோகம்

லக்கினம் அல்லது சந்திரனுக்கு கேந்திரத்தில் குரு ஆட்சி அல்லது உச்சம் பெற்றிருப்பது ஹம்ச மஹா புருஷ யோகம் ஆகும்.




ஹம்ச யோகம் உடையவர்கள் நல்ல குணமுடையவர்களாகவும், புத்திசாலிகளாகவும், பெருந்தன்மை, பிறருக்கு உபதேசிப்பது, தெய்வ நம்பிக்கை, குரு மற்றும் ஆசிரியர்களிடம் மரியாதை உடையவர்களாகவும் அழகிய தோற்றம் கொண்டவர்களாகவும், அனைவராலும் விரும்பப் படுபவர்களாகவும் இருப்பார்கள்.

ஹம்ச யோகமானது மேற்கண்ட 8 லக்னங்களுக்கு ஏற்படும். இதில் மிதுன, கன்னிக்கு பாதகாதிபதி என்பதால் மத்திமமான பலன்களும். மகர லக்னத்திற்கு 7ல் உச்சம் என்பதால் அது கணவன் (அ) மனைவிக்கு யோகத்தை ஏற்படுத்தும்.

**4. மாளவ்ய மஹா புருஷ யோகம்**

லக்கினம் அல்லது சந்திரனுக்கு கேந்திரத்தில் சுக்கிரன் ஆட்சி அல்லது உச்சம் பெற்றிருப்பது மாளவ்ய யோகம் ஆகும்.


| | | | |
|---|---|---|---|
| ல<br>சுக்ரன்<br>உச்சம் | ல | ல<br>சுக்ரன்<br>ஆட்சி | ல |
| ல | மாளவ்ய யோகம் | | ல |
| ல | | | ல |
| ல | ல | ல<br>சுக்ரன்<br>ஆட்சி | ல |

மாளவ்ய யோகம் உடையவர்கள். நல்ல உடல் பலம் உள்ளவர்களாகவும் நன்கு கற்றவர்களாகவும் அழகிய மனைவி மற்றம் நல்ல குழந்தைகள், வண்டி வாகன சுகம் உடையவர்களாகவும் இருப்பார்கள்.

மாளவ்ய யோகமானது சுக்ரன் ஆட்சியிலோ அல்லது உச்சத்திலோ இருந்தாலே போதுமானது அனைத்து லக்னங்களுக்குங்ம ஏற்படும். எனவே சுக்ரனை பொருத்தமட்டில் வாழ்க்கைக்கு தேவையான அனைத்து அத்தியாவசிய பொருட்களும் ஏற்படுத்துவதால் அனைவருக்கும் சுக்ரன் யோகமே. இருப்பினும் தனுசு, மீனம், லக்னத்திற்கு சுப பலன் மற்றும் தீயபலன் இரண்டையும் செய்யாது. எனவே மாளவ்ய யோகமானது மிக முக்கிய யோகம் இல்லை.

**5. சச மஹா புருஷ யோகம்**

லக்கினம் அல்லது சந்திரனுக்கு கேந்திரத்தில் சனி ஆட்சி அல்லது உச்சம் பெற்றிருப்பது சச யோகம் ஆகும்.





சசயோகம் உடையவர்கள் உண்மையான பணியாட்கள் உடையவர்களாகவும், பலசாலியாகவும், மக்கள் தலைவராகவோ அல்லது ஒரு ஊருக்கு தலைவராகவோ இருப்பார்கள். பிறர் சொத்துக்களை அடைய விரும்புபவர்களாகவும் இருப்பார்கள்.

சச யோகமானது மேற்கண்ட 8 லக்னத்திற்கு ஏற்படும். இவற்றில் கடகம், சிம்மம் ஆகியவை எதிர்பால் இனத்தவருக்கு ஏற்படுத்தும் யோகம். பெரும்பாலும் 7ல் சனி ஆட்சி, உச்சம் பெற்றால் விபரீதமான யோகங்களையே அதிகமாக தரும். எனவே மேஷ, ரிஷப, துலாம், லக்னங்களுக்கு சசயோகம் ஏற்பட்டால் மிகவும் நன்மையான யோகங்களை செய்யும்.

## மற்றும் பல வித யோகங்கள்

### விபரீத ராஜ யோகம்




6, 8, 12 ஸ்தான அதிபதிகள் 6, 8, 12 ஸ்தானங்களில் இருந்தாலும் அல்லது பரிவர்த்தனை பெற்றாலும் விபரீத ராஜயோகம் உண்டாகும்.

விபரீத ராஜயோகம் உள்ளவர்கள் செல்வந்தர்களாகவும், தான தர்மம் செய்பவர்களாகவும், திடீர் தனலாபம் உடையவர்களாகவும் இருப்பார்கள்.

எந்த ஒரு லக்னத்திற்கும் 6, 8, 12ம் அதிபதில் கெடுபலன்களை செய்யும் கெட்டவர்களே ஆகும். அதே போல் 6, 8, 12ல் அமரும் கோள்கள் தங்களின் சுபாவத்தின் நேர் எதிர்மறையான பலன்களை செய்யும், ஆகவே இந்த யோகத்தில் கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம் என்பதற்கு கிணங்க விபரீத ராஜயோகம் ஏற்படுத்தும்.

**அஷ்டலட்சுமி யோகம்**

| | | | |
|---|---|---|---|
| **குரு** | | | **லக் சந்** |
| | **அஷ்டலட்சுமி யோகம்** | | |
| | | | |
| | **ராகு** | | |

லக்கினம் அல்லது சந்திரனுக்கு கேந்திரத்தில் குருவும். ஆறாமிடத்தில் இராகுவும் நிற்பது அஷ்டலட்சுமி யோகம் ஆகும்.

அஷ்ட லட்சுமி யோகம் உடையவர்கள் வீடு, வாகனம், அன்பான மனைவி, நல்ல புத்திர பாக்கியத்துடன் இருப்பார்கள்.

இந்த யோக அமைப்பானது மேற்கண்ட படத்தில் உள்ளவாறு குருவும், ராகும் பலம் பெறுகின்றனர். அதில் லக்னத்திற்கு அல்லது சந்திரனுக்கு 10ல் குரு அமர்ந்துள்ளார். 6ல் ராகு உச்சம் பெறுகிறார். 6ல் ராகு மறைவதால் தன்னுடைய தீய குணத்தை மாற்றி நற்பலனாக செய்வார். இம்முறையில் கீழ்கண்ட லக்னங்களுக்கு அமையும் வாய்ப்புகள் உள்ளன.

1. மிதுன லக்னம் or ராசி, 6ல் ராகு உச்சம், 7 or 10ல் குரு ஆட்சி
2. மேஷ லக்னம் or ராசி, 4ல் குரு உச்சம், 6ல் ராகு நட்பு
3. துலாம் லக்னம் or ராசி, 10ல் குரு உச்சம், 6ல் ராகு நட்பு
4. மகர லக்னம் or ராசி, 7ல் குரு உச்சம், 6ல் ராகு நட்பு
5. கடக லக்னம் or ராசி, 1 ல் குரு உச்ச,சந் ஆட்சி 6ல் ராகு நட்பு
6. கன்னி லக்னம் or ராசி 4ல்or 7ல்குரு ஆட்சி 6ல் ராகு நட்பு

மேற்கண்ட 6 லக்ன அமைப்பில் மிதுன லக்ன அமைப்பே மிக சிறந்த அஷ்டலட்சுமி யோகம் அல்லது அஷ்டமகா யோகம் எனப்படும்.

**கிரக மாலிகா யோகம்**

| | | | |
|---|---|---|---|
| ல | ல | ல | ல |
| ல | | | ல<br>சந் |
| ல<br>சனி | | | ல<br>சூரி |
| ல<br>குரு | ல<br>செவ் | ல<br>சுக்ரன் | ல<br>புத |

ராகு கேது தவிர அனைத்து கிரகங்களும், வரிசையாக ஏழு ராசிகளில் அமர்ந்திருந்தால் கிரக மாலிகா யோகம் உருவாகும்.

கிரக மாலிக யோகம் எந்த பாவத்திலிருந்து ஆரம்பமாகிறதோ, அந்த பாவ பலன்கள் சிறப்பாக நடைபெறும்.

இந்த படத்தில் உள்ளவாறு அனைத்து கோள்களும் ஆட்சியில் அமரும் வாய்ப்பு இல்லை. இதுபோல் அல்லாமல் மாறி நின்றும் இருக்கலாம். இது எந்த பாவகத்தில் இருந்து ஆரம்பம் ஆகிறதோ அதன் காரகங்கள் மிகவும் சிறப்பான பலன்களை அந்த ஜாதகருக்கும் கொடுக்கும்.

1. லக்ன முதல் இருப்பின் அவரின் கௌரவம், பதவி, புகழ், கீர்த்தி ஆசைகள் நிறைவேறல், அதிகாரம், ஆளுமை, போன்றவைகள் சிறப்பு.
2. இரண்டாம் பாவகம் முதல் இருப்பின், பணம், சொத்து, வண்டிகள், கருவூலம், செல்வம் போன்றவைகள் வெகு சிறப்படையும்.
3. மூன்றாம் பாவகம் முதலாக இருப்பின் அரசருக்கு இணையான வீரம், தைரியம், வீரியம், ஆளுமை, உடல்நல அமைப்புகள் போன்றவை சிறப்பு.
4. நான்காம் பாவக முதலாக இருப்பின் நிலங்கள், வயல், தோப்பு, வாகனம், சிறந்ததாயார், ஆடம்பரம், அணிகலன் போன்ற அத்தியாவசிய பொருட்கள் மிகுதியாக கிடைக்கும்.
5. ஐந்தாம் பாவக முதலாக இருப்பின் சந்தோஷம், வாழ்கை நிறைவு, ஆசைகள் நிறைவேறல், அதீதகற்பனைதிறன், நிர்வாகி, கலைகள் கற்றல் போன்றவை சிறப்பு.

6. ஆறாம் பாவக முதலாக இருப்பின் எதிரிகளை வெற்றி கொள்ளல், நோயின்மை, திடீர் அதிர்ஷ்டம் போன்றவைகள் கிடைக்கும்.
7. ஏழாம் பாவக முதலாக இருப்பின், சிறந்த குணவதியான மனைவி, அதீத நண்பர்கள், வியாபாரத்துறையில் வெற்றிகள், போன்றவைகள்.
8. எட்டாம் பாவக முதலாக இருப்பின் புதையல் கிடைப்பது போன்ற அதிர்ஷ்டம், எங்கு சென்றாலும் முதலிடம், மனைவி வழி சொத்துகள், புறம்போக்கு இடங்கள் அடைதல் போன்றவைகள்.
9. ஒன்பதாம் பாவக முதலாக இருப்பின் முன்னோர் ஆசிகள், பிறக்கும் போதே மிகுந்த செல்வம், அதை கொண்டு பல செல்வங்களை அடைதல், குலதெய்வ அனுக்கிரகம், மந்திரங்கள் போன்றவைகள்.
10. பத்தாம் பாவக முதலாக இருப்பின் தொழில் புதிய உத்திகளை கையாளல் அதித சிந்தனைகள், எழுத்து திறமை, புத்தக வெளியீடு, நிறுவன மேலாண்மை தன் முயற்சியில் சொத்து சேர்க்கைகள் போன்றவைகள்.
11. பதினோராம் பாவக முதலாக இருப்பின் மேற்கூறிய 10 பாவக வாயிலாக கிடைக்கும் அனைத்து பலன்களையும் இவரே அனுபவித்தல் போன்றவையும்.
12. பனிரெண்டாம் பாவக முதலாக இருப்பின் வெளிநாடு வாழ்யோகம், உலகளாவிய புகழ், பதிப்பகம், பஞ்சபூதத்தால் ஏற்படும் அனைத்துவித நன்மைகள் போன்றவைகள் கிடைக்கும்.

**கால சர்ப்ப யோகம்**

| | | | |
|---|---|---|---|
| **லக்**<br>**சூரி, புத**<br>**குரு** | **சுக்** | **கேது** | |
| **சந்** | | **காலசர்ப்ப** | |
| **செவ்** | | | |
| **சனி** | **ராகு** | | |

அனைத்து கிரகங்களும், (லக்கினம் உட்பட) இராகு – கேதுகளுக்கு இடையே நிற்பது கால சர்ப்பயோகம் ஆகும்.

கால சர்ப்ப யோகம் உடையவர்கள் 32 வயதுக்கு பிறகு வாழ்க்கையில் சிறந்த நிலையை அடைவார்கள் இராகு முதல் கேதுவரை அனைத்து கிரகங்களும் நிற்பது பொருளாதார சிறப்பையும் கேது முதல் ராகு வரை நிற்பது ஆன்மீகத்தில் ஈடுபாடும் கொடுக்கும்.

**ஜெய யோகம்**

| | | | |
|---|---|---|---|
| | | | லக் |
| | | | குரு<br>செவ் |
| | | | |
| | | | |

ஆறாம் அதிபதி நீசம் பெற்றும், பத்தாம் அதிபதி, உச்சம் பெற்றும் இருப்பது கெஜயோகம் ஆகும். கெஜயோகம் உடையவர்கள் தாங்கள் செய்யும் அனைத்து முயற்சிகளிலும் வெற்றியடைவார்கள். அனைத்து எதிரிகளையும் வெற்றி கொள்வார்கள். மகழ்ச்சி மிக்கவர்களாகவும், தீர்க்காயுள் உள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

**சந்திர சண்டாள யோகம்**

| | | | |
|---|---|---|---|
| | | | லக் |
| | | | |
| | | | |
| | சந்,புத<br>சுக்<br>கேது | | |

சந்திரன், புதன், சுக்கிரன் சேர்ந்திருக்க இவர்களுடன் கேது சேர்ந்தால் சந்திர சண்டாளயோகம் ஏற்படும்.


இந்த யோகம் உடையவர்கள் அரசராக பிறந்தாலும் ஆண்டியாகி விடுவார்கள்.

மேற்கண்ட படத்தில் உள்ள வாறு மிதுன லக்னம் விருச்சிக ராசியாக அமைந்து அதில் புதன், சுக்ரன், கேது ஆகிய மூவரும் இணைந்தால் சந்திர சண்டாள யோகம் மிகசரியாக ஏற்படும்.

ஏன்னெில் லக்னாதிபதி 6ல், 2ம் அதிபதி 6ல் மற்றும் நீசம், 12ம் அதிபதி இணைவு, பாவியான கேது உச்சம் பெற்று இணைந்துள்ளார் இவர் அரசராக பிறந்தாலும் ஆண்டியாகி விடுவார்கள்.

மற்ற அமைப்புகளுக்கு இது பொருந்தாது.

**நீச பங்க ராஜயோகம்**




நீசம் பெற்ற ஒரு கிரகம் நீசபங்கம், அதாவது நீசம் நீங்குவதால் நீச பங்க ராஜயோகம் ஏற்படும்.

நீச பங்க ராஜ யோகம் உடையவர்கள் எதிர் பாராத தனலாபம் பெறுவார்கள்.

நீசம் பெற்ற கிரகம், நீச பங்கம் பெற விதிமுறைகள்

1. நீசம் பெற்ற கிரகம் நிற்கும் இராசிக்கு அதிபதி ஆட்சி அல்லது உச்சம் பெறுவது.
2. நீசம் பெற்ற கிரகம் லக்கினம் அல்லது சந்திரனுக்கு கேந்திரத்தில் நிற்பது
3. நீசம் பெற்ற கிரகம் உச்சம் பெற்ற கிரகத்துடன் சேர்ந்து அல்லது பார்க்கப்பட்டு நிற்பது.
4. நீசம் பெற்ற கிரகம் நிற்கும் இராசிக்கு அதிபதி உச்சம் பெற்ற கிரகத்துடன் சேர்ந்து நிற்பது.

5. நீசம் பெற்ற கிரகத்திற்கு, அந்த ராசியில் உச்சமாகும் கிரகம் கேந்திரத்தில் நிற்பது.

**சங்க யோகம்**

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | **குரு** |
| | | | |
| | | **லக்,சுக்**<br>**சனி** | |

இலக்கினாதிபதி பலம் பெற்று நிற்க, ஐந்தாம் அதிபதியும், ஆறாம் அதிபதியும் ஒன்றுக்கொன்று கேந்திரத்தில் நின்றிருந்தால் சங்க யோகம் உருவாகும். சங்க யோகம் உள்ள ஜாதகர்கள் மகிழ்ச்சி மிக்கவர்களாகவும், மனித நேயம் உள்ளவர்களாகவும், அன்பான மனைவி மற்றும் குழந்தைகள் பெற்றிருப்பவர்களாகவும், நற்காரியங்கள் செய்பவர்களாகவும், நன்கு கற்றவர்களாகவும் தீர்க்காயுள் உள்ளவர்களாகவும் இருப்பார்கள்.


**ஹர்ஷ யோகம்**

| | | | |
|---|---|---|---|
| **குரு** | | | |
| | | | |
| | | | |
| | | **லக்**<br>**சனி** | |

ஆறாம் அதிபதி ஆறாம் பாவத்திலேயே ஆட்சி பெற்றிருப்பது ஹர்ஷ யோகம் ஆகும்.

ஹர்ஷ யோகம் உள்ள ஜாதகர்கள் அதிர்ஷ்ட சாலிகளாகவும், மகிழ்ச்சி மிக்கவர்களாகவும், உடல் பலம் மிக்கவர்களாகவும், செல்வந்தர்களாகவும், புகழ் மிக்கவர்களாகவும், பாவச் செயலை செய்யத் தயங்குபவர்களாகவும், பகைவரால் வெல்ல முடியாத வீரம் மிக்கவர்களாகவும் இருப்பார்கள்.

**சரள யோகம்**




எட்டாம் அதிபதி எட்டாம் பாவத்திலேயே ஆட்சி பெற்று நிற்பது சரள யோகம் ஆகும்.

சரள யோகம் உள்ள ஜாதகர்கள் தீர்க்காயுள் உள்ளவர்களாகவும், பயமற்றவர்களாகவும், நன்கு கற்றவர்களாகவும், எதிரிகளை வெல்பவர்களாகவும், வாழ்க்கையுல் நன்கு வளர்ச்சி பெறுபவர்களாகவும் இருப்பார்கள்.

**விமல யோகம்**

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | **லக்** | புதன் |

பன்னிரெண்டாம் அதிபதி பன்னிரெண்டாம் பாவத்திலேயே ஆட்சி பெற்று நிற்பது விமலயோகம் ஆகும்.

விமல யோகம் உள்ள ஜாதகர்கள் மகிழ்ச்சி மிக்கவர்களாகவும், சுதந்திர எண்ணம் கொண்டவர்களாகவும், சிக்கனமானவர்களாகவும், கண்ணியம் மிக்கவர்களாகவும் அடிக்கடி வெளிநாடு செல்பவர்களாகவும் இருப்பார்கள்.

**பார்வை நூல்கள் :–**

| | | |
|---|---|---|
| ஜாதக பாரிஜாதம் | – | வேதலிங்கப்பட்டர் |
| பலதீபிகை | – | மந்திரேஸ்வரமுனிவர் |
| ஜாத அலங்காரம் | – | கீரனூர் நடராசர் |
| வீமேசுர உள்ளமுடையான் | – | திருமயிலை குழந்தையானந்த சுவாமி |
| குமாரசாமியம் | – | வீரவநல்லூர் குமாரசுவாமி தேசிகர் |

குறிப்பு

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

……………………………………………………………………………………


……………………………………………………………………………………

## கூறு – 3

## கிரக இணைவு யோகங்கள்


## இரு கிரக இணைவு

### சூரியனும் சந்திரனும்




சூரியனும் சந்திரனும் சேர்ந்திருந்தால், அது அமாவாசையாகும், எனவே ஜாதகர் ஸ்திரீகளுக்கு வசப்பட்டவராவர். அழகில்லாதவராவர், கபடகிருத்தியங்களைச் செய்கின்றவராவர், மிகவும் தனமுள்ளவராவர், சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்களை விற்பனை செய்பவராவர், காரியங்களில் நிபுணத் தன்மை உள்ளவராவர்.

### சூரியனும் செவ்வாயும்



சூரியனும் செவ்வாயும் சேர்ந்து இருந்தால், இடி செவ்வாய் கதிர் கூடி எவ்விடத்தில் அமர்ந்தாலும் இளமையில் அமங்கலி என பழைய மூல நூல்களில் கூறப்பட்டுள்ளது.

இது மேற்கண்ட அமைப்பில் உள்ள கன்னி லக்னத்திற்கு மட்டுமே பொருந்தும்.

**சூரியனும் புதனும்**

| | | | |
|---|---|---|---|
| | சூரி<br>புத | | சூரி<br>புத |
| | | | |
| | | | சூரி<br>புத |
| சூரி<br>புத | சூரி<br>புத | | சூரி<br>புத |

சூரியனும் புதனும் சேர்ந்திருந்தால் சேவகாவிருத்தியுள்ளவராகவும், ஸ்திரமில்லாத தனத்தோடு கூடியவராகவும், இஷ்டமாகிய வார்த்தைகளைப் பேசுகின்றவராகவும், புகழ் பெற்றவராகவும் ராஜாவிற்கும் சத்ஜனங்களுக்கும் இஷ்டனாகவும், பலம் சௌந்தர்யம் வித்தை இவைகளுடையவராகவும் இருப்பார்.

**சூரியனும் சனியும்**

| | | | |
|---|---|---|---|
| | சூரி<br>புத | | சூரி<br>புத |
| | | | |
| | | | சூரி<br>புத |
| சூரி<br>புத | சூரி<br>புத | | சூரி<br>புத |

சூரியனும் சனியும் சேர்ந்திருந்தால் பிதுர் தோசம் எனப்படும்.

அப்பா மகன் தாத்தா உறவுகளில் பிரிவினைகள் இருக்கும்,

தாது விஷயங்களாகிய கர்மங்களில் சாமர்த்திய முள்ளவராயும், தர்ம சுபாவமுடையவராயும், தன்னுடைய கர்மத்தில் பிரியமுள்ளவனாயும், பத்தினிக்கும் புத்திரர்களுக்கும் (நாசம்) சம்பவிக்குங்காலத்தில் நன்கு கவனிப்பவராகவும் தனது வம்சத்திற்குத் தக்க குணங்களினால் சுத்தவாராயும், அற்ப சீலராயும் இருப்பார்.

**சந்திரனும் செவ்வாயும்**

| | | | |
|---|---|---|---|
| சந்<br>செவ் | சந்<br>செவ் | சந்<br>செவ் | |
| சந்<br>செவ் | | | |
| சந்<br>செவ் | | | சந்<br>செவ் |
| சந்<br>செவ் | | சந்<br>செவ் | |

சந்திரனும் செவ்வாயும் சேர்ந்திருந்தால் சந்திர மங்கல யோகம் எனப்படும்.

சூரராகவும், யுத்தத்தில் பிரதாப சக்தியுள்ளவராகவும், மல்யுத்தத்தில் சமர்த்தவராகவும், இரத்த சம்பந்தமான வேதனையால் பீடிக்கப்பட்ட சரீரமுள்ளவராகவும், மண், தோல், தாதுக்கள் இவைகளினாலே சித்திரப் பணிகளைச் செய்கின்றவராகவும், மந்திர உச்சாடனம் முதலாகிய பிரயோகத்தில் சமர்த்தராகவும் இருப்பார்.

**சந்திரனும் குருவும்**

| | | | |
|---|---|---|---|
| **சந்<br>குரு** | **சந்<br>குரு** | | |
| **சந்<br>குரு** | | | **சந்<br>குரு** |
| | | | **சந்<br>குரு** |
| **சந்<br>குரு** | | | |

சந்திரனும் குருவும் சேர்ந்திருந்தால் குருச்சந்திர யோகம் எனப்படும்.

எல்லா இடங்களிலும் முதன்மை, அதிக உறவினர்களுடையவராகவும், தன்னுடைய சுற்றத்தாருக்கு சகாயத்தையும் சன்மானத்தையும் செய்கின்றவராகவும், மக்களுக்கு தலைவராகவும், தேவர்கள், பிராமணர்கள் இவர்களுடைய இஷ்டத்தை அநுசரிக்கின்றவராகவும் இருப்பார்.

**சந்திரனும் சுக்கிரனும்** சேர்ந்திருந்தால் நல்ல மாலைகள், வெண்மையான வஸ்திரங்கள், இவைகளைத் தரிக்கின்றவராகவும், கிரியைகளையும், விதிகளையும் அறிகின்றவராகவும், கவிகளில் பிரியமுள்ளவராகவும், மிகவும் சோம்பலுள்ளவராகவும், கிரய விக்கிரயங்களில் (கொடுக்கல் வாங்கல்) அல்லது வியாபாரத்தில் திறமையுள்ளவராகவும் இருப்பார்.

**சந்திரனும் சனியும்** சேர்ந்திருந்தால் வயோதிகம் வாய்ந்த மனைவியோடு கூடியவராகவும், யானைகளையும், குதிரைகளையும் காப்பாற்றுகின்றவராகவும், கெட்ட சுபாவமுள்ளவராகவும், எல்லாருக்கும் தீயவராகவும், பணமில்லாதவராகவும் இருப்பார்.

**செவ்வாயும் புதனும்** சேர்ந்திருந்தால் ஸ்திரீகளுக்குப் பிரியமில்லாதவராகவும், ஆனால் துஷ்ட ஸ்திரீகளுக்கும், விதவைகளுக்கும் பிரியமுள்ளவராகவும், கொஞ்சம் தனம் மாத்திரம் உள்ளவராகவும், சுவர்ணம்

இரும்பு முதலானவைகளைக் கொண்டு தொழில் செய்கின்றவராகவும், ஔஷதங்களைச் செய்கின்றவராகவும், அதைக் கிரயம் செய்வதில் சாமர்த்தியமுள்ளவராகவும் இருப்பார்.

**குருவும் செவ்வாயும்**

| | | | |
|---|---|---|---|
| செவ்<br>குரு | செவ் | செவ் | |
| | | | குரு |
| செவ் | | | குரு<br>செவ் |
| குரு<br>செவ் | செவ்<br>குரு | செவ் | |

**குருமங்கள யோகம்** ஒருவருக்கொருவர் கேந்திரத்தில் இருப்பது குருமங்கள் யோகம் ஆகும். குருமங்கள யோகம் உடையவர்கள் செல்வந்தர்களாகவும், நிலம், வீடு, உடையவர்களாகவும் செல்வாக்கு மிக்கவர்கள் ஆகவும் இருப்பார்கள்.

இந்த யோக அமைப்பானது குருவும், செவ்வாயும், ஆட்சி, உச்சத்தில் இருந்து அவற்றின் கேந்திர அமைப்பில் குரு அல்லது செவ்வாய், நீசம், பகையில்லாமல், பலத்துடன் அமர்ந்தால் குருமங்களயோகம் மிகவும் அதீதமான செல்வம் பொண், பொருட்கள், வாகனங்கள் போன்றவை தரும். இது மேற்கண்ட படத்தில் உள்ளவாறு 7 வழிகளில் ஏற்பட்டாலும். இதில் மிகவும் முதன்மையானது, குருவும், செவ்வாயும், உச்சத்தில் அமர்வது, அடுத்து, மேஷத்தில் செவ்வாயும், கடகத்தில் குருவும் அமர்வது இந்த இரண்டுமே குரு மங்கள யோகத்தை செய்யும்.

**செவ்வாயும் சுக்கிரனும்**

| | | | |
|---|---|---|---|
| | செவ் சுக் | செவ் சுக் | |
| | பிருகுமங்கள யோகம் | | |
| செவ் சுக் | | | |
| | செவ் சுக் | சுக் செவ் | |

சுக்கிரனும், செவ்வாயும் ஒருவருக்கொருவர் கேந்திரத்தில் இருப்பது பிறகு மங்கள யோகம் ஆகும். பிருகு மங்கள யோகம் உள்ளவர்கள், செல்வந்தர்களாகவும், வாகனம், வீடு, நிலம் உடையவர்களாகவும் இருப்பார்கள்.

கேந்திர அமைப்பான 1, 4, 7, 10 ல் சுக்ரனும், செவ்வாயும் அமையும் அமைப்பு துலாத்தில் சுக்ரனும், மகரத்தில் செவ்வாயும், ஆட்சி உச்சத்தில் இருக்கும் போது முதன்மை பலன்களும்.

மேச, ரிசப, துலாம், விருச்சிகராசிகளில் நேர் எதிர் 7ஆம் கேந்திரத்தில் இரண்டாவதாக பலன்களும்.

மேற்கண்ட மேச, ரிசப, துலாம், விருச்சிகம், மகரம் ஆகிய இணைந்து அமர்வது மூன்றாவதான பலன் தரும் நிலைகளாகும்.

சேர்ந்திருந்தால் புகழ் மிக்கவராகவும், சங்கத் தலைவராகவும், கணித சாஸ்திரத்தை அறிகின்றவராகவும், பரஸ்திரீகளை அடைகின்றவராகவும், துர்க்குணமுள்ளவராகவும், சூது விளையாடுகின்றவராகவும், பொய் பேசுகின்றவராகவும், கபட தந்திரமுள்ளவராகவும் இருப்பார்.

**செவ்வாயும் சனியும்** சேந்திருந்தால் பங்காளிகள் சண்டையும், காட்டுத்தகறாறுகலும் ஏற்படும், தாது விஷயங்களாகிய கர்மங்களிலும், இந்திர ஜாலவித்தையிலும், திருட்டுத் தொழிலில் சாமர்த்திய முள்ளவராகவும், மிகவும் வஞ்சன சீலனாகவும், தர்மமில்லாதவராகவும், விஷ வித்தையைக் கொண்டு அல்லது விஷப்பிரயோகத்தாலும், ஆயுதப் பிரயோகத்தாலும் தனலாபம் அடைந்தவராகவும், கலகப்பிரியராகவும் இருப்பார்.

**புதனும் சுக்கிரனும்** சேர்ந்திருந்தால் மிகவும் தனமுள்ளவராகவும், நீதி சாஸ்திரம் அறிந்தவராகவும், பல தரத்திலுள்ள சித்திர வேலைகளைச்

செய்கின்றவராகவும், வேதம் அறிந்தவராகவும், நல்ல வாக்குள்ளவராகவும், சங்கீதத்தை அறிகின்றவராகவும், நகைச்சுவையில் பிரியமுள்ளவராகவும், சுகந்த திரவியங்களிலும், புஷ்பமாலைகளிலும் பிரீதியுள்ளவராகவும இருப்பார்.

**புதனும் சனியும்** சேர்ந்திருந்தால் குணவானாகவும், டாம்பீகனாகவும், மிகவும் வஞ்சிக்கின்ற சுபாவ முள்ளவராகவும், சத்கவியாகவும், சாஸ்திரீயங்களாயும் லௌகீகங்களாயும் உள்ள வியாபாரங்களை மீறுகின்ற குணமுள்ளவராகவும், நிபுணராகவும் நல்ல வாக்குள்ளவராகவும் இருப்பார்.

**குருவும் சுக்கிரனும்** சேர்ந்திருந்தால் சூரராகவும், தனசம்பத்து விருத்தியுடையவராகவும், நகரம், தன் சுற்றத்தார், கிராமம், சங்கம் இவைகளுக்குத் தலைவராகவும், மிகுந்த சுகியாகவும், தேஜஸ் உள்ளவராகவும் இருப்பார்.

**குருவும் சனியும்**

| | | | |
|---|---|---|---|
| | | **குரு சனி** | **குரு சனி ரா/கேது** |
| | | | |
| **குரு, சனி ராகு, கேது** | | | |
| | | **குரு, சனி ரா, கேது** | **குரு, சனி ரா, கேது** |

**குரு சண்டாளயோகம்**

குருவுடன் ராகு–கேது–சனி இவர்களில் ஒருவர் சேர்ந்திருப்பது குரு சண்டாள யோகம் ஆகும். குருசண்டாள யோகம் உள்ளவர்களுக்கு மத நம்பிக்கை குறைவாக இருக்கும், இவரை பிறர் நம்புவது இல்லை.

குரு பலமிழந்து அவ்விடத்தில் பாவிகளான, சனி, ராகு, கேது பலம் பெற்று. குருவுடன் இணைந்தால் இந்த சண்டாள யோகம் ஏற்படும். மேற்கண்ட படத்தில் உள்ளவாறு குரு, ரிசப, மிதுன, கன்னி, துலாம், மகரம் ஆகிய ராசியில் ஏதாவது ஒன்றில் அமர்ந்து அதனுடன் சனியோ அல்லது ராகு, கேதுவே இணைந்தால் இந்த யோகம் செயல்படும். இதனால் ஜாதகருக்கு கல்விதடைபடும், உறவுகள் விரிசல், ஆன்மீகத்தின் எதிர் செயல்கள் புரிதல், நல்ல வழிகாட்டிகள் அமையாமல்

போவது, தக்க சமயத்தில் யாரும் உதவ முன்வராமல் இருத்தல் போன்ற தீய பலன்களை செய்யும்.

**சுக்கிரனும் சனியும்** சேர்ந்திருந்தால் மரங்களையறுத்துத் தொழில் செய்யும் வியாபாரத்தில் சமர்த்தராகவும், சித்திரம் எழுதுவதில் நிபுணராகவும், கல்பணியில் பழக்கமுள்ளவராகவும், மண் சம்பந்தமான வேலை செய்பவராகவும், மல்யுத்தத்தில் சமர்த்தராகவும், சஞ்சாரியாகவும், பசுக்கூட்டங்களை காக்கின்றவராகவும் இருப்பார்.

## 3.மூன்று கிரக சேர்க்கை பலன்கள்

### சூரியன் சந்திரன் செவ்வாய்

இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியிலிருக்கும் போது பிறந்தவர் லெட்சுமில்லாதவலும், பாபகர்மங்களில் பிரியமுள்ளவரும், பல்வகை யந்திரங்களை உண்டாக்கும் சாமர்த்தியம் உள்ளவரும், மாரணகர்மங்களினால் சத்துருக்களை நாசம் செய்யும் திறமையுள்ளவரும், கல்பணி முதலான கர்மங்களைச் செய்கின்றதில் மிகவும் சாமர்த்தியம் வாய்ந்தவரும் ஆவர்.

### சூரியன் சந்திரன் புதன்

இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியிருந்தால் தேஜசு உள்ளவராய், புத்திசாமர்த்தியமுள்ளவராய், சாஸ்திரங்களிலும் கலா வித்தைகளிலும் வல்லவராகவும் சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்கள் சாப்பிடுவதில் பிரியமுள்ளவராய், ராஜாவினுடைய செய்கையைச் செய்கின்றவராய்த் தீரராய் இருப்பார்.

### சூரியன் சந்திரன் குரு

இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியிலிருப்பின் அதிக கோபமுள்ளவராகவும், கபட கிருத்தியங்களில் சாமர்த்தியராகவும், பிறரைச் சேவித்து வசீகரிக்கத்தக்க திறமையுள்ளவராகவும், வெளிதேச சஞ்சாரத்தில் சந்தோஷமுள்ளவராகவும், ஸ்திர புத்தியுடையவராகவும் இருப்பார்.

### சூரியன் சந்திரன் சுக்கிரன்

இவர்கள் மூவரும் சேர்ந்து ஒரு இராசியிலிருந்தால், சாமர்த்தியசாலியாகவும், சாஸ்திரங்களில் நிபுணராகவும், பிறர் சொத்தை அபகரிப்பவராகவும், பல பெண்களை விரும்புபவராகவும் இருப்பார்.

### சூரியன் சந்திரன் சனி

இவர்கள் கூடி ஒரு இராசியில் இருந்தால், விவாதத்தில் திறமையுடையவராகவும், அறிவில்லாதவராகவும், அன்னியர்களுடைய ஆதரவில் ஜீவிக்கின்றவராகவும், தரித்திரராகவும் இருப்பார்.

**சூரியன் செவ்வாய் புதன்**

இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியிலிருப்பின் பிரசித்தனாகவும், மல்யுத்தத்தைச் செய்கின்றவராகவும், விசாரமில்லாது இருக்கின்றவராகவும், குரூரராகவும், லஜ்ஜையில்லாதவராகவும், சம்பத்து மனைவி புத்திரன் இவைகள் இல்லாதவராகவும் இருப்பார்.

**சூரியன் செவ்வாய் குரு**

இவர்களொருமித்து ஒரு இராசியிலிருந்தால் வாக்கு சாமர்த்தியமுடையவராகவும், அதிகமான சம்பத்துக்களுடையவராகவும், ராஜாவிற்கு மந்திரியாகவோ சேனாநாயகராகவோ இருக்கத்தக்கவராகவும், சத்தியமான வார்த்தையைப் பேசுகின்றவராகவும், மிகவும் குரூரராகவும் இருப்பார்.

**சூரியன் செவ்வாய் சுக்கிரன்**

இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியில் இருந்தால் கண்ரோகமுள்ளவராகவும், குலசிரேஷ்டராகவும், சௌபாக்கியம் உள்ளவராகவும், வாக்கு சல்லாபத்தோடு கூடினவராகவும், தனம் முதலிய சம்பத்துக்கள் உடையவராகவும் இருப்பார்.

**சூரியன் செவ்வாய் சனி**

இவர்கள் ஒன்று கூடி ஒரு இராசியில் இருந்தால் அங்கக் குறைவுள்ளவரும், தனமில்லாதவரும், எப்போதும் வியாதியால் இம்சைப்படுகின்றவரும், பந்துக்கள் இல்லாதவரும், மிகவும் அறிவில்லாதவருமாவர்.

**சூரியன் புதன் குரு**

இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியிலிருந்தால் நேத்திர ரோகமுள்ளவரும், அதிகமான சம்பத்தையுடையவரும். சாஸ்திரங்களிலும், கலாவித்தைகளிலும் காவியங்களிலும், சபையிலும், சிற்பவேலைகளிலும் நிபுணயத்தன்மையுள்ளவரும், எழுத்து வேலைகளிலும் எழுதுவதிலும் சமர்த்தரும் ஆவார்.

**சூரியன் புதன் சுக்கிரன்**

இவர்கள் ஒருமித்து ஒரு இராசியிலிருப்பின் மிகவும் துன்பமுள்ளவராகவும், அதிகம் நிந்திக்கத்தக்க வார்த்தைகளைப் பேசுகின்றவராகவும், பல திக்குகளிலும் சஞ்சாரம் செய்பவராகவும், குருக்கள்மாரோடு வேறுபட்டவராகவும், ஸ்திரீ நிமித்தம் துக்கிக்கின்றவராகவும் இருப்பார்.

**சூரியன புதன் சனி**

இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியிலிருந்தால் நபும்சகத் தன்மையுள்ளவராகவும் (அதாவது புருஷ்னாயின் பௌருஷ மில்லாதவனாகவும்,

ஸ்திரீயாயின் ஸ்திரி தன்மையில்லாதவளாகவும்) எல்லோருக்கும் விரோதியாகவும், எல்லோராலும் ஜெயிக்கப்படுகின்றவராகவும், பந்துக்களால் தள்ளிவிடப்பட்டவராகவும் இருப்பார்.

**சூரியன் குரு சுக்கிரன்**

இவர்கள் ஒரு இராசியில் ஒன்று சேர்ந்திருப்பின் நேத்திரத்தில் சக்தியில்லாதவராகவும், சூரராகவும் அறிவுள்ளவராவும், தரித்திரராகவும், ராஜாவுக்கு மந்திரியாகவும், பிறர் காரியங்களில் பிரியமுள்ளவராகவும் இருப்பார்.

**சூரியன் குரு சனி**

இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியிலிருந்தால் சமமில்லாத சரீரத்தையுடையவராகவும், பூஜிக்கத்தக்க யோக்கியமுடையவராகவும், சொந்த ஜனங்களுக்கு விரோதியாகவும், நல்ல மனைவியும், புத்திரனும், பந்துக்களுமுள்ளவராகவும், ராஜப் பிரியராகவும், பயமில்லாதவராகவும் இருப்பார்.

**சூருயன் சுக்கிரன் சனி**

இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியிலிருந்தால் சத்துருக்களின் பயத்தால் பீடிக்கப்பட்டவராகவும், மானமில்லாதவராகவும், கலாவித்தைகள் காவியங்கள் இவைகளில் ஞானமில்லாதவராகவும், குஷ்டரோகியாகவும் இருப்பார்.

**சந்திரனும் செவ்வாயும் புதனும்**

ஒன்று சேர்ந்து ஒரு இராசியிலிருந்தால் பாபத் தொழிலைச் செய்கின்றவராகவும், நீசர்களுடைய ஆசாரம் கடைபிடிக்கின்றவராகவும், பந்துக்களும் சொந்த ஜனங்களுமில்லாதவராகவும், தனித்து இருப்பார்.

**சந்திரன் செவ்வாய் குரு**

இவர்கள் ஒருமித்து ஒரு இராசியிலிருந்தால் விரணமான சரீரத்தோடு கூடியவரும், ஸ்திரீலோலரும், கள்ளரும், அழகுள்ளவரும், ஸ்திரீகளுக்குச் சம்மதமுள்ளவரும், அதிகக் கடினமான கோபத்தோடு கூடினவரும் ஆவர்.

**சந்திரன் செவ்வாய் சுக்கிரன்**

இவர்கள் ஒருமித்து ஒரு இராசியிலிருந்தால் தீயகுணமுள்ள தாயையும் மனைவியையும் உடையவராகவும், நிலைத்து ஓரிடத்திலும் இருக்காதவராகவும், அல்லது சஞ்சாரியாகவும், குளிர்ச்சி பயமுள்ளவராகவும் இருப்பார்.

**சந்திரன் செவ்வாய் சனி**

இவர்கள் சேர்ந்து ஒரு இராசியிலிருப்பின் பாலியத்திலேயே தாயைப் பறிகொடுத்தவரும், குரூரம், அதமரும், அற்பகுணம், விஷமகுணம் உடையவராகவும், ஜனங்களால் வெறுக்கப்படுகின்றவரும் ஆவர்.

**சந்திரன் புதன் குரு**

இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியிலிருந்தால் தனவானும், சமர்த்தனும், அல்லது ஆரோக்கிய முள்ளவரும், சொல்விற்பன்னரும், தேஜசுள்ளவரும், பிரசித்திமானும், வலிதான கீர்த்தியை உடையவரும், அதிக புத்திரர்களும் சகோதரர்களும் பந்துக்களுமுள்ளவரும் ஆவர்.

**சந்திரன் புதன் சுக்கிரன்**

இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராயிலிருந்தால் வித்தியாப்பியாசத்தினால், நல்ல புத்தியுடையவராயிருந்த போதிலும் நீசர்களைப்போல் ஆசாரத்தை அனுஷ்டிக்கின்றவராகவும், பொறாமையுள்ளவராகவும் (அதாவது பிறருடைய உயர்வை சகிக்காதவர்), தன விஷயத்தில் அதிக பேராசையுள்ளவராகவும் இருப்பார்.

**சந்திரன் புதன் சனி**

இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியிலிருந்தால் கபட மில்லாதவராகவும், அங்கக் குறைவுள்ளவராகவும், வித்வானாகவும், வாக்கு சாமர்த்தியமுள்ளவராகவும், அதிகம் பூஜிதனாகவும், ராஜாவாகவோ, ராஜசமானனாகவோ இருப்பவராகவும் இருப்பார்.

**சந்திரன் குரு சுக்கிரன்**

இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியிலிருந்தால் நற்குணமுள்ள தாயையுடையவராகவும், அறிவுள்ளவராகவும், கலாவித்தைகளில் சமர்த்தராகவும், அதிக சாஸ்திரங்களில் பழக்கமுள்ளவராகவும், வெட்க சுபாவமுள்ளவராகவும், குணசீலராகவும் இருப்பார்.

**சந்திரன் குரு சனி**

இவர்கள் ஒருமித்து ஒரு இராசியிலிருந்தால் சாஸ்திரங்களுடைய சூட்சுமார்த்தத்தை அறிகின்றவராகவும், வயதான பெண் களையடைகின்றவராகவும், ரோகம் அல்லது கோபம் இல்லாதவராகவும், கிராமம் சங்கம் இவைகளுக்குத் தலைவராகவும் இருப்பார்.

**சந்திரன் சுக்கிரன் சனி**

இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியிலிருந்தால் புண்ணியத்தின் காரணமாக எழுத்தாளராகவும், கிரந்தகர்த்தாவாகவும், சிறந்த வாசகர்களை யுண்டாக்குகின்றவராகவும், புரோகிதராகவும், தைவக்ஞராகவும் இருப்பார்.

**செவ்வாய் புதன் குரு**

இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியிலிருப்பின் நல்ல கவியாகவும், ராஜாவாகவோ ராஜசமானனாவோ ஆகுபவராகவும், குணவதியும் யௌவனமுமுடைய மனைவியோடு கூடினவராகவும், பிறருடைய காரியத்தில் மிகவும் உற்சாக முள்ளவராகவும், சங்கீத சாஸ்திரத்தில் சமர்த்தராகவும் இருப்பார்.

**செவ்வாய் புதன் சுக்கிரன்**

இவர்கள் ஒருமித்து ஒரு இராசியிலிருந்தால் குலசிரேஷ்டமில்லாதவராகவும், அங்கக்குறைவு உள்ளவராகவும், சபலராகவும், துஷ்டராகவும், நன்றாகவும் அதிகமாகவும் பேசுந்திறமையுடையவராகவும், உற்சாகசீலராகவும் இருப்பார்.

**செவ்வாய் புதன் சனி**

இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியிலிருப்பின் சேவகத் தொழிலைச் செய்கின்றவராகவும், கருங்கண்ணனாகவும், வேறு தேசத்தில் வசிக்கின்றவராகவும், முகரோகியாகவும், பொழுது போக்கில் பிரியமுள்ளவர்களுடன் ஒருமித்து விளையாடுகின்றவராகவும் இருப்பார்.

**செவ்வாய் குரு சுக்கிரன்**

இவர்கள் ஒருமித்து ஒரு இராசியிலிருந்தால் ராஜாவிற்கு இஷ்டனாகவும், நல்ல புத்திரர்களோடு கூடினவராகவும், எப்போதும் அழகிய ஸ்திரீகளோடு கூடி அதிகமான சுகங்களை அனுபவிக்கின்றவராகவும், எல்லா ஜனங்களுக்கும் ஆனந்தங்களை உண்டுபண்ணுகின்றவராகவும் இருப்பார்.

**செவ்வாய் குரு சனி**

இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியிலிருந்தால் ராஜாவிற்குக் சமமானவராகவும், தேகத்தில் விகாரமான முறிவோ, விரணமோ இவற்றில் ஏதாவதொன்று உள்ளவராகவும், நீசர்களுடைய ஆசாரத்தைச் செய்கின்றவராகவும்,. பந்துக்களால் நிந்திக்கப்பட்டவராகவும், தயையில்லாதவராகவும் இருப்பார்.

**செவ்வாய் சுக்கிரன் சனி**

இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியிலிருந்தால் தீய குணமுள்ளவரின் புத்திரராகவும், ஒரு சிறிதும் சுகமநுபவிக்காதவராகவும், எப்பொழுதும் வேறு தேசங்களில் வசிக்கின்றவராகவும் இருப்பார்.

**புதன் குரு சுக்கிரன்**

இவர்கள் ஒருமித்து ஒரு இராசியில் இருந்தால் வளைவுள்ள சரீரத்தை உடையவராகவும், சகல சத்துருக்களையும் பிரயாசையின்றி ஜெயிக்கின்றவராகவும், ராஜாவாகவோ, அரசருக்கு சமமானவராகவும், சௌபாக்கியமுள்ளவராகவும், பெரும் புகழோடு கூடினவராகவும், சத்திய வாக்குள்ளவராகவும் இருப்பார்.

**புதன் குரு சனி**

இவர்கள் ஒருமித்து ஒரு இராசியிலிருப்பின் வீடு முதலான ஸ்தானங்கள், தனம், ஐசுவரியம் இவைகளுள்ளவராகவும், வித்வானாகவும், அதிகமான போகங்களும் சுகங்களுமுள்ளவராகவும், தனது மனைவியிடத்தில் மிகவும்

பிரீதியுடையவராகவும், தைரியம் உள்ளவராகவும், மிகுந்த சுகியாகவும். நல்ல அதிருஷ்டமுள்ளவராகவும் இருப்பார்.

**புதன் சுக்கிரன் சனி**

இவர்கள் ஒன்று கூடி ஒரு இராசியில் இருந்தால் அதிகமாகப் பேசுகின்றவராயும், துர்க்குணமுள்ளவராயும், பொய் பேசுகின்றவராயும், பரஸ்திரீகளிடத்தில் பிரீதியுடையவராயும், கலா வித்தைகளில் நிபுணராயும், சொந்த தேசத்திலேயே வசிக்கின்றவராயும் இருப்பார்.

**குரு சுக்கிரன் சனி**

இவர்கள் ஒன்றுகூடி ஓரிடத்திலிருங்குங் காலத்தில் ஜனித்தோர், நீச குலத்தில் பிறந்தவராய் இருந்தாலும் எல்லாவிடங்களிலும் பரவியிருக்கின்ற கீர்த்தியோடு கூடின அரசராகவும், மிகவும் நல்ல சுபாவ குணமுள்ளவராகவும் இருப்பார்.

## நான்கு கோள்களின் சேர்க்கைப் பலன்கள்

**சூரியன் – சந்திரன் – செவ்வாய் – புதன்**

எழுத்தர், பிறர் பொருளை அபகரிப்பவர், தடையில்லாத பேச்சுடையவர். நோயுள்ளவர், மாயவித்தைகள் செய்பவர். (செப்படி, இந்திராஜாலம், மகேந்திர ஜாலம்) பிறரை ஏமாற்றி வஞ்சிப்பவர்.

**சூரியன் – சந்திரன் – செவ்வாய் – குரு**

செல்வந்த, பெண்களுக்கு விருப்பமில்லாதவர், அழகுள்ளவர், ஒழுக்கமுடையவர். (நீதியுடையவர்) துக்கமில்லாதவர். தனித்திறமை பெற்றவர்.

**சூரியன் – சந்திரன் – செவ்வாய் – சுக்கிரன்**

பெரியோர்களுக்கு விருப்பமான வார்த்தைகளைப் பேசுபவர். சுகமுள்ளவர். திறமையானவர். செல்வம் சேர்ப்பதில் வேகமுடையவர். கைத்தொழில், ஆண் மக்கட்பேறு, நல்ல மனைவி இவையுடையவர்.

**சூரியன் – சந்திரன் – செவ்வாய் – சனி**

அழகில்லாத உடலையுடையவர், குற்றமானவர், செல்வமில்லாதவர், பிறரிடம் கேட்டு வாங்கி உண்பவர், கைத்தொழிலற்றவர்.

**சூரியன் – சந்திரன் – புதன் – குரு**

பொற்கொல்லர், அல்லது பொன் தொடர்புடைய அணிகளைச் செய்பவர், நீண்ட கண்களுடையவர். சிற்ப தொழில் செய்பவர். செல்வந்தர், வீரர், நோயற்ற உடலுடையவர்.

**சூரியன் – சந்திரன் – புதன் – சுக்கிரன்**

உடல் பகுதியில் (ஊனமுற்றவர்) குறைவுள்ளவர், சௌபாக்கியமுள்ளவர், பேச்சு திறமையுள்ளவர், உயரம் குறைந்தவர், அரசருக்கு விருப்பமானவர்.

**சூரியன் – சந்திரன் – புதன் – சனி**

பெற்றோரின் கருத்துகளுக்கு மாறுபட்டவர். செல்வம், சுகம் இல்லாதவர், எப்பொழுதும் அலைந்து கொண்டிருப்பர். பிறரிடம் கேட்டு வாங்கி (பிட்சை) உண்பவர். மெய்யற்ற வார்த்தைகளைப் பேசுபவர்.

**சூரியன் – சந்திரன் – புதன் – சுக்கிரன்**

வனங்கள், விலங்குகள் மற்றும் நீர்நிலைகளில் வாழக்கூடியவர். சிலர் அவற்றில் தலைவராகவும் இருப்பர். சுகமானவர். தனித்திறமை (நிபுணர்) யானவர். அரசர்களினால் மதிக்கப்படுபவர்.

**சூரியன் – சந்திரன் – குரு – சனி**

கண்களில் நோயுள்ளவர். கூர்மையான அறிவுடையவர், கூடுதலான மக்கட்பேறும், செல்வமும் உள்ளவர். பெண்களினால் இலாபமடைபவர். அனைத்து இன்பங்களையும் பெறுபவர்.

**சூரியன் – சந்திரன் – சுக்கிரன்– சனி**

பெண்களைப் போன்று பழக்க வழக்கங்கள் உள்ளவர். உடல் வலிமையற்றவர். எப்பொழுதும் ஐயத்துடன் இருப்பவர். (மனவல்மையற்றவர்).

**சூரியன் – செவ்வாய் – புதன் – குரு**

வீரர், சாத்திரங்களின் சூத்திரங்களை உருவாக்குபவர். செல்வமும், மனைவியும் இல்லாதவர், கூடுதலான துக்க முடையவர், பல ஊர்களுக்கு செல்பவர் (நிலையில்லாதவர்).

**சூரியன் – செவ்வாய் – புதன் – சுக்கிரன்**

பல பெண்களிடம் நாட்டமுடையவர். திருடர், உடல் உறுப்புகள் ஒழுங்கில்லாதவர். தீய எண்ணமுடையவர். வலிமை குறைந்தவர்.

**சூரியன் – செவ்வாய் – புதன் – சனி**

போர் புரிபவர் (போர் வீரர்) அறிவாளர், தீயவர், தீய நடவடிக்கையுள்ளவர், கவியரசர், அரசராகவோ, அல்லது அமைச்சராகவோ இருக்கத்தக்கவர்.

**சூரியன் – செவ்வாய் – குரு – சுக்கிரன்**

அனைத்து செல்வங்களும் நிறைந்தவர். உலக மக்களால் போற்றப்படுபவர், அரசருக்கு விருப்பமானவர், புகழபெற்றவர், நீதி சாத்திரங்கள், அறிவியல் படி நடப்பவர்.

**சூரியன் – செவ்வாய்–குரு – சனி**

வெறி பிடித்தவர், சிந்தனையில்லாதவர், தன் குழுக்களுக்கு தலைவர், பட்டிமன்றம் அல்லது வழக்காடு மன்றங்களில் பங்கேற்பவர். தனது விருப்பத்திற்கேற்றவாறு செயல்களைச் செய்பவர். தனது உறவினர் மற்றும் நண்பர்களுடன் சேர்ந்திருப்பவர். அரசருக்கு விருப்பமானவர்.

**சூரியன் – செவ்வாய் – சுக்கிரன்–சனி**

உடல் ஊனமுற்றவர் அல்லது உடலில் குறையுள்ளவர். தீய செயல்களைச் செய்பவர். கண்கள் இரண்டும் மாறுபாடுடைய தன்மையுடையவர்.

உறவினர்களால் பகையை அடைபவர் துவங்குகின்ற செயல்கள் அனைத்தும் தோல்வி அடையும்.

**சூரியன் – புதன் – குரு – சுக்கிரன்**

செல்வந்தர், பற்பலசுகங்களை அனுபவிப்பவர். செயல்களைச் செய்வதில் வல்லவர். உறவினர்கள் உள்ளவர்.

**சூரியன் – புதன் – குரு – சனி**

அலியின் தன்மையுள்ளவர். மதிக்கப்படுபவர். கலகம் செய்வதில் விருப்பமுள்ளவர். உடன்பிறப்புகள் உள்ளவர். சோம்பலுள்ளவர். (மிதமான செயலுடையவர்)

**சூரியன் – புதன் – சுக்கிரன்– சனி**

பெரும் பேச்சாளர், அனைத்து செல்வங்களும் பெற்றவர். அறிவுள்ளவர். சுகமானவர். எதிலும் வெற்றி பெறும் திறனும், தூய்மையும் உடையவர். உறவினர்களின் அன்பையும், ஆதரவையும் பெற்றவர்.

**சூரியன் – குரு –சுக்கிரன்–சனி**

பெருவிருப்பமுடையவர். (பேராசை) கவிஞர், முக்கியமானவர், தொழிலாளர் மற்றும் கீழ்நிலை மக்களின் தலைவராக இருப்பர். முதலாளிக்கு விருப்பமுடையவர்.

**சூரியன் – செவ்வாய் – புதன் – குரு**

அனைத்து சாத்திரங்களிலும் தனித்தன்மை பெற்றவர். மந்திரம் மற்றும் மாயவித்தைகளில் திறமையுடன் செயல்படுபவர். அறிவுக்கூர்மையும், சக்தியும் உள்ளவர்.

**சூரியன் – செவ்வாய் – புதன் – சுக்கிரன்**

கலகத்தில் விருப்பமுள்ளவர். எப்பொழுதும் உறங்கிக் கொண்டிருப்பவர். இழிவானவர் (நீசர்) விலைமாதரின் கணவர். துன்பம் உள்ளவர். உறவினர்களை வெறுப்பவர். சுகமற்றவர்.

**சந்திரன் – செவ்வாய் – புதன் – சனி**

வீரர், பெற்றோருக்கு தீங்கு செய்பவர். தீய வம்சத்தில் பிறந்தவர். மிகுதியான மக்கட் செல்வங்களும், மனைவிகளும் உறவினர்களும் உடையவர்.

**சந்திரன் –செவ்வாய் – குரு – சுக்கிரன்**

நற்குணமுள்ள மனைவியுடையவர். அனைத்து துன்பங்களையும் ஏற்றுக்கொள்பவர். அனுதாபப்படுபவர். பண்டிதர், மிகுதியான உறவினர்களும், சுகங்களும் உள்ளவர்.

**சந்திரன் – செவ்வாய் – குரு – சனி**

காது கேளாதவர், செல்வந்தர், வீரர், திமிர் உடையவர், வாக்குத்திறமையானவர், அறிவுடையவர், உதவும் மனப்பாங்குடையவர். நல்ல நிலையுடையவர்.

**சந்திரன் – செவ்வாய் – சுக்கிரன்–சனி**

கற்பிழந்த பெண்ணின் கணவர், நுண்ணிய பார்வை உள்ளவர். (பாம்பின் பார்வை). முகத்தெளிவுள்ளவர்.

**சந்திரன் – புதன் –குரு - சுக்கிரன்**

பண்டிதர், கற்றறிந்தவர், பெற்றோரில்லாதவர். நல்ல அழகுடையவர். அனைத்து செல்வங்களும் பெற்றவர். செல்வந்தர், பகைவரில்லாதவர்.

**சந்திரன் – புதன் – குரு – சனி**

தர்மங்களைச் செய்பவர், தலைவர் அழகுள்ளவர். உறவினர்களுக்கு விருப்பமானவர். அறிவுடையவர். அரசருக்கு நல்ல அமைச்சராகவும், கவிகள் எழுதுவதில் தலைசிறந்தவராகவும் இருப்பர்.

**சந்திரன் – புதன் – சுக்கிரன்–சனி**

பல பெண்களைக் கூடுபவர். தீய நடவடிக்கையுள்ள மனைவியுடையவர். உறவினர் இல்லாதவர். அறிவுள்ளவர். பொது மக்களால் வெறுக்கப்பட்டவர்.

**சந்திரன் – குரு – சுக்கிரன்–சனி**

பிறந்த சில நாட்களில் அன்னையை இழந்தவர். தோலில் நோயுள்ளவர் சொறி, சிரங்கு, பெருந்துன்பம், அலைச்சல், மிகுதியான பேச்சாளர், உண்மைக்கு மாறான செயல்கள் உடையவர்.

**செவ்வாய் – புதன் – குரு – சுக்கிரன்**

பெண்களுடன் கலகம் செய்பவர், செல்வந்தர், மக்களால் போற்றப்படுபவர், நற்குணமுடையவர், உடலில் நோயற்றவர்.

**செவ்வாய் – புதன் – குரு – சனி**

வீரர், கலைகளில் புலமையுள்ளவர், பேச்சுத்திறமையுள்ளவர். செல்மில்லாதவர், உண்மையும், தூய்மையுமானவர், நன்றாக பேசுபவர் இன்ப, துன்பங்களை ஏற்றுக்கொள்பவர், அறிவாளி.

**செவ்வாய் – புதன் – சுக்கிரன் – சனி**

மற்போர் வீரர், பெற்றோரை விடுத்து மற்றவர்களால் வளர்க்கப்பட்டவர். கட்டுடல் உடையவர். போரில் வல்லமையுடையவர், புகழ்பெற்றவர், நாய்களோடு (வேட்டையாடுபவர்) விளையாடுபவர்.

**செவ்வாய் – குரு – சுக்கிரன்–சனி**

புகழ்பெற்றவர், செல்வந்தர், பெண்களிடத்தில் ஆதிக்கம் செலுத்துபவர். அறியசெயல்களைச் செய்பவர், தடுமாற்ற எண்ணமுடையவர். தீய குணமுடையவர்.

**புதன் – குரு – சுக்கிரன்–சனி**

பெண்களிடத்தில் அன்புள்ளவர், கீழப்படிந்துள்ள பணியாட்களுடையவர், சிராா்த்தம் போன்ற கா்மச் செயல் நடைபெறும் இல்லத்தில் உணவருந்த விருப்பமுடையவா் அறிவுடையவா்.

**பாா்வை நூல்கள் :–**

| | | |
|---|---|---|
| ஜாதக பாாிஜாதம் | – | வேதலிங்கப்பட்டா் |
| பலதீபிகை | – | மந்திரேஸ்வரமுனிவா் |
| ஜாத அலங்காரம் | – | கீரனூா் நடராசா் |
| வீமேசுர உள்ளமுடையான் | – | திருமயிலை குழந்தையானந்த சுவாமி |
| குமாரசாமியம் | – | வீரவநல்லூா் குமாரசுவாமி தேசிகா் |

குறிப்பு

## கூறு – 4

## பாவகத்தால் ஏற்படும் யோகம்

### 1. பாவக இணைவுகள்

பன்னிரு பாவங்களும் தங்களுக்குள் ஒருவருடன் ஒருவர் இணைவதால் பல்வேறு நற்பலன்களைச் செயல்படுத்துவதற்கு காரணமாக உள்ளனர். இதில் ஒரு கோளுடன் மற்றொரு கோள் இணைந்து ஏற்படும் பலன்களே நன்மையானதாக இருக்கும். இரண்டு கோள் இணைவைத் தவிர, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு என்று கோள்கள் இணைந்து செயல்படுத்தும் பலன்கள்அவற்றுக்குத் தகுந்தபடி பல துன்பங்களையும் கொடுத்துவிடும். எனவே யோகம் என்றால் இரண்டு கோள் ஏற்படுத்தும் பலனே நற்பாவங்கள் மற்றும் தீயபாவங்கள் என்று இரண்டு பிரிவுகள் உள்ளன. அவ்விரண்டு பிரிவிலும், மிகவும் நன்மையான கூட்டுகள் என்றும், மிகவும் தீமையான கூட்டுகள் என்றும் மேற்கொண்டு இரண்டு உட்பிரிவுகளையும் பிரிக்கலாம்.

நற்பாவங்கள் = 1, 2, 4, 5, 9, 10, 11 இவை ஒன்றுடன் ஒன்று இணையும் பொழுது நற்பலன்களைத் தருகின்றன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1+2 | 2+4 | 4+5 | 5+9 | 9+10 | 10+11 |
| 1+4 | 2+5 | 4+9 | 5+10 | 9+11 | |
| 1+5 | 2+9 | 4+10 | 5+11 | | |
| 1+9 | 2+10 | 4+11 | | | |
| 1+10 | 2+11 | | | | |
| 1+11 | | | | | |

ஆகியவை நற்பாவக இணைவால் ஏற்படும் கூட்டமைப்பாகும். இதில் மிகவும் நன்மையானது.

9+10, 9+11, 2+9, 2+11, 4+5, 5+10, 4+9, 2+5, 5+11, என்று வரிசைப்படி நற்பலன்களைத் தரும் நற்கூட்டுகளாகும். எப்பொழுதும் பாவக இணைவில் முதன்மையானது தர்ம கர்மாதிபதியாகும் (9+10) மற்றவை வரிசைப்படி அதனின்று குறைத்து கொண்டே வருதல் வேண்டும். இவை தவிர மற்றவை அனனத்தும் மேலே கூறப்பட்டதற்கு குறைவான நற்பலன்களைத் தரக்கூடியது என்று முடிவெடுத்துக் கொள்க.

தீயபாவகங்கள் இணைவு

3, 6, 7, 8, 12 ஆகியவை தீய பாவகங்கள் ஆகும். இவற்றில் 3ம் பாவகம் நிலையற்ற தந்மையைக் கொடுப்பதால் தீயவை ஆகும். 7ம் பாவகம் மாரகத்தையும் பாதகத்தையும் கொடுப்பதால் தீய பாவகம் (சுதந்திர மின்மை) ஆகும். மற்ற 6, 8, 12ம் பாவகங்கள் மிகவும் கொடியவை.

| | | | |
|---|---|---|---|
| 3+6 | 6+7 | 7+8 | 8 +12 |
| 3+7 | 6+8 | 7+12 | |
| 3+8 | 6+12 | | |
| 3+12 | | | |

இவற்றில் 3+6, 3+7, 3+8, 6+7, 7+8, 7+12, 6+8, 6+12, 8+12 ஆகிய வரிசைப்படி தீய அமைப்புகள்கூடிக்கொண்டு வரும். மிகவும் குறைந்த தீய பலனைத் தருவது 3+6 என்றால் அதிகமான கெடுபலன்களைத் தருவது 8 + 12 ஆகும். தீயவைகளை விடுத்து மற்ற நற்பாவகங்களில் முதல் தரமான ஒன்பதுவித அமைப்புகளை ஆய்விற்காக எடுத்துக் கொள்வோம்.

## 2.தர்ம கர்மாதிபதி யோகம்

யோகங்களிலேயே தலையானது தர்மகர்மாதிபதி யோகம் ஆகும். லக்கினத்திற்கு ஒன்பது, பத்துக்கு உடையவர்கள், சேர்க்கை பெறுவது, ஒன்றுக்கொன்று பார்த்துக்கொள்வது அல்லது பரிவர்த்தனை பெறுவது தர்ம கர்மாதிபதி யோகமாகும்.

தர்மகர்மாதிபதி யோகமுடைய ஜாதகர்கள் செல்வந்தர்களாகவும், தொழில் அதிபர்களாகவும், அறிவாளிகளாகவும் இருப்பார்கள். வாகன சுகம் உடையவர்களாகவும், பிறருக்கு உபதேசிப்பவர்களாகவும் இருப்பார்கள்.

இது தலை சிறந்த யோகம் தான் ஆனால் அனைத்து இலக்ன காரர்களும் வேலை செய்வது கடினம் ஏனெனில் உதாரணமாக மேஷம் இலக்னமானால் 9ம் அதிபதி குரு 10ம் அதிபதி சனி, இதில் குரு + சனி நன்மை செய்யும் வாய்ப்பு குறைவு மற்றும் குருவே 12ம் அதிபதியாகவும் அமைவதால் மேஷ லக்னத்திற்கு இது சிறப்பு இல்லை. ரிஷபலக்னத்திற்கு 9ம அதிபதியும் 10ம் அதிபதியும் சனிவே அவர் சுக்ரனுக்கு நட்பு மற்றும், பாக்கியாதிபதி எனவே மிக சிறந்த பலனை செய்யும்.

மிதுன லக்னத்திற்கு 9ம் அதிபதி சனி 10ம் அதிபதி குரு இதில் சனி 8ம் ஆதிபதியாகவும் வருவதாலும். சனி + குரு இணைவு என்பதாலும் சிறப்பில்லை.

கடக லக்னத்திற்கு 9ம் அதிபதி குரு, 10ம் அதிபதி செவ்வாய் இந்த அமைப்பு மிகவும் சிறப்பு அதாவது குருமங்கள யோகம் + தர்மகர்மாதி யோகம் எனவே சிறப்பு.

சிம்மலக்னத்திற்கு 9ம் அதிபதி செவ்வாய் 10ம் அதிபதி சுக்ரன் இதில் பாதிப்பு இல்லை இருப்பினும் நல்ல பலன் மத்திமமாகவே நடக்கும்.

கன்னி லக்னத்திற்கு 9ம் அதிபதி சுக்ரன் 10ம் அதிபதி புதனே இது மிகவும் சிறப்பான இணைவு எனவே மிக அதிக பலன்களை தரும்.

துலாலக்னத்திற்கு 9ம் அதிபதி புதன், 10ம் அதிபதி சந்திரன் இது மத்திமமான பலன் செய்யும்.

விருச்சிக லக்னம் 9ம் அதிபதி சந்திரன், 10ம் அதிபதி சூரியன் இதுவும் மத்திமமான பலன் செய்யும்.

தனுசு லக்னத்திற்கு 9ம் அதிபதி சூரியன் 10ம் அதிபதி புதன், புதன் + குரு பாதகாதிபதிகள் எனவே சிறப்பு இல்லை.

மகர லக்னத்திற்கு 9ம் அதிபதி புதன் 10ம் அதிபதி சுக்ரன். இது மிக சிறப்பான பலன்களை செய்யும்.

கும்பலக்னத்திற்கு 9ம் அதிபதி சுக்ரன், 10ம் அதிபதி செவ்வாய் இதுவும் சிறப்பான பலன் தரும்.

மீன லக்னத்திற்கு 9ம் அதிபதி செவ்வாய், 10ம் அதிபதி குரு, இந்த இணைவும் குருமங்களயோகம் எனவே சிறப்பான பலன்களை செய்யும்.

எனவே மேற்கண்ட நான்கு லக்னங்களும் மிகவும் உத்தமமான பலனும், அடுத்த நான்கு லக்னங்களும் மத்திமமான பலனும், கடைசி நான்கு லக்னங்களுக்கு பலன் தராமலும் வேலை செய்யும். அத்துடன் இந்த தர்மகர்மாதிபதிகள் அமரும் இடங்கள் மற்றும் மறைவிடங்கள், நீசத்தன்மை போன்றவையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**மேச லக்கினம்**

இம் மேச லக்கினத்திற்கு தர்மாதிபதியாக குருவும், கர்மாதிபதியாக சனியும் வருகின்றனர். இவ்விரு கோள்களுக்கும் வேறு பாவக ஆதிபத்யமும் உள்ளது. ஒன்பதுக்குடைய குருவே பன்னிரண்டாம் பாவகத்திற்கும் அதிபதியாகிறார். எனவே குருவின் தர்ம சிந்தனை என்பது விரையத்தை நினைவில் கொண்டே செயல்படுத்தும் தன்மை பெற்றிருக்கும். தர்மமும் சரியான செயலிற்காக இருக்கும்.

பத்திற்குடைய சனியே பதினொன்றிற்கும் அதிபதியாக மாறுவதால் செய்யும் தொழில் (காரியத்தில்)தான் நினைத்ததை சாதிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் செயல்படுவார். சனி தான் நினைத்ததை சாதிப்பதற்காக எவ்வளவு முடியுமோ அவ்வளவு கீழே இறங்கிச் சென்று செயல்படவைப்பார்.

குரு – இயற்கையில் மிகவும் நல்லவர்

சனி – இயற்கையில் மிகவும் தீயவர்

இவ்விரு கோளின் இணைவிலேயே மேச லக்னத்திற்கு தர்மகர்மாதிபதி யோகம் ஏற்படுகிறது. தான் செய்யும் தொழிலில் நல்லதும், கெட்டதும் கலந்து எண்ணத்துடனே சாதகரை செயல்படுத்தும். இதில் இவ்விருகோளும் இருக்கும் ராசி மற்றும் பாவகத்தில் நிற்கும் பலத்திற்கு ஏற்றாற்போல் தங்களது செயல்களை கூடுதலாகவோ அல்லது குறைத்தோ செயல்படுத்துவர். எடுத்துக்காட்டாக சனி நீசமானால் சாதகரின் தொழில் மத்திம நிலையில் இருக்கும். பெயர் வாங்கிக் கொடுக்க மாட்டார். குரு நீசமானால் தர்ம சிந்தனையுடன் தொழிலை

நடத்தமாட்டார். சனி உச்சமானால் எவ்வகையிலும் தொழிலை மேம்படுத்தும் நோக்கத்துடன் செயல்படுத்துவார். குரு உச்சமானால் செய்யும் தொழிலை முறையுடன் ஒழுங்கான லாபத்துடன் நடத்தி தர்மவான் என்று பெயர் எடுக்க வைப்பார். முறையான வழிகளில் செல்வத்தை சேர்க்கை துணை புரிவார்.

மேச லக்னத்திற்கு பிரிக்கப்பட்டது போல் மற்ற லக்னங்களுக்கும் ஏற்படும் பன்னிரு பாவகத்தில் தர்ம / கர்மாதிபதி இருந்தால் ஏற்படும் யோகத்தை வரிசைப்படுத்திக்கொள்க. அதற்காக மற்ற லக்னத்தின் தர்ம கர்மாதிபதியின் பொதுப்பலன்கள் கொடுக்கப்பட்டுள்ளது. இவற்றின்படி பலன்களை பிரித்துக் கூறுக.

**ரிசபலக்னம்**

ரிசப லக்னத்திற்கு தர்மகர்மாதிபதியாக சனி ஒருவரே வருகிறார். இவர் இயற்கையில் மிகவும் துன்பம் தரும் கோள் ஆவார். சனியின் தர்மச் வெளியில் தெரியும்படி இருக்கும். சாதாரண தொழில் கூட செய்யக்கூடியவர். எனவே இப்பலனை அடிப்படையில் எடுத்துக் கொண்டு மற்ற பன்னிரு பாவகங்களிலும் ஏற்படும் பலன்களைக் காண்க.

**மிதுனலக்னம்**

மிதுன லக்னத்திற்கு ஒன்பதுக்குடைய சனியே, 8ம் பாவகத்திற்கும் அதிபதியாக உள்ளார். அதே போல் பத்தாம்பாவக அதிபதியான குரு, மாரக பாவமான 7ம் பாவகத்திற்கும் அதிபதியாக உள்ளார். சனி தர்மத்தை செய்வித்து அதனால் தீய பெயரை ஏற்படுத்துவார். குரு தொழிலை ஏற்படுத்தி அதன் மூலமாக பங்குதாரர் போன்ற பலரை இணைத்து துன்பங்களையும் தருவார்.

**கடக லக்னம்**

கடக லக்னத்திற்கு தர்மாதிபதியான குருவே, 6ம் பாவகத்திற்கும் அதிபதியாக உள்ளார். அதே போல் கர்மாதிபதியான செவ்வாய் நற்பாவகமான 5ம் பாவகத்திற்கம் அதிபதியாக உள்ளார். எனவே குரு தனது தர்மத்தை 6ம் பாவகத் தன்மையுடன் வெளிப்படுத்தினாலும், செவ்வாய் 10 மற்றும் 5 க்கு அதிபதியாக வருவதால் கடக லக்னத்திற்கு தர்மகர்மாதி யோகம் சிறிது கூடுதலாக நன்மை தரலாம்.

**சிம்ம லக்னம்**

சிம்ம இலக்னத்திற்கு தர்மாதிபதியான செவ்வாய் சுகாதிபதியாகயிருப்பதால் தர்மத்துடன் செயல்படுவதில் குறைவைக்கமாட்டார். கர்மாதிபதியான சுக்கிரன் 3ம் பாவகத்திற்கும் அதிபதியாவதால், சிறு சிறு தொழில்களாக பலதொழில்களையோ அல்லது அலைச்சலுடன் கூடிய தொழிலையோ அல்லது குறிப்பிட்ட நாட்களில் வேலை செய்வது பின்னர் வேலையின்றி இருப்பது போன்ற நிலையற்ற தன்மையோ ஏற்படுத்துவார்.

**கன்னி லக்னம்**

கன்னி லக்னத்திற்கு தர்மாதிபதியான சுக்கிரன், 2ம் பாவகத்திற்கும் அதிபதியாவதால் தர்மத்துடன் கூடிய செயலில் தனது வருமானமும் இருக்கும். கர்மாதிபதியான புதன், லக்னத்திற்கும் அதிபதியாவதால் தொழில் நிலையில் நிலையான அமைப்புடன் இருக்க வேண்டும் என்று முனைப்புடன் செயல்படுவார்.

**துலாம் லக்னம்**

துலாம் லக்னத்திற்கு தர்மாதிபதியான புதன், 12ம் பாவகமான விரையத்திற்கும் அதிபதியாகிறார். ஆனால் கர்மாதிபதியான சந்திரன் வேறு எதற்கும் அதிபதியாக வில்லை. எனவே தர்மத்தைக் குறைத்து தொழிலில் கவனத்தை ஏற்படுத்துவார்.

**விருச்சிக லக்னம்**

விருச்சிக லக்னத்திற்கு தர்மாதிபதி சந்திரன், கர்மாதிபதி சூரியன் ஆகும். இவர்கள் வேறு பாவத்திற்கு அதிபத்தியம் பெறவில்லை என்பதால் இவர்கள் இருக்கம் நிலை கொண்டு, பாவகப்படி பலன்களைக் கண்டறிக.

**தனுசு லக்னம்**

தனுசு லக்னத்திற்கு தர்மாதிபதி சூரியன் ஆகும். கர்மாதிபதி புதன், 7ம் பாவகத்திற்கும் அதிபதியாகிறார். எனவே தர்ம சிந்தனையுடன் இருக்க சூரியன் வழி வகுப்பார். தர்மத்துடன் தொழில் செய்தாலும் அதில் சில பாதங்களையும் புதன் ஏற்படுத்துவார்.

**மகர லக்னம்**

மகர லக்னத்திற்கு தர்மாதிபதியான புதன் 6ம் பாவகத்திற்கும் அதிபதியாகி தர்மம் செய்வதில் சில துன்பங்களை ஏற்படுத்துவார். கர்மாதிபதியான சுக்கிரன், 5ம் பாவகத்திற்கும் அதிபதியாவதால் செய்யும் தொழிலில் பெயர், புகழைக் கொடுப்பார்.

**கும்ப லக்னம்**

கும்ப லக்னத்திற்கு தர்மாதிபதியான சுக்கிரன், சுகாதிபதியாகயிருப்பதால் தர்மத்துடன் கூடிய செயலைச் செய்யத் தூண்டுவார். கர்மாதிபதியான செவ்வாய், மூன்றுக்கும் அதிபதியாவதால் தொழில் நிலையில் நிலையற்ற முன்னேற்றத்தை ஏற்படுத்துவார்.

**மீனம் லக்னம்**

மீன லக்னத்திற்கு தர்மாதிபதியான செவ்வாய், தன அதிபதியாக இருப்பதால் தர்மம் செய்வதில் வருமானப் பெருக்கம் இருக்கும். கர்மாதிபதியான குருவே, லக்னாதிபதியாக இருப்பதால் தொழில் கவனத்துடன் செயல்பட்டு பெயரெடுக்க உதவுவார்.

இப்பலன்கள் அனைத்தும் ஒவ்வொரு லக்னத்திற்கும் ஒவ்வொரு பாவகத்தின் அடிப்படையில் குறைந்தோ அல்லது கூட்டியோ அல்லது நடைபெறாமலோ இருப்பதற்கு வாய்ப்புகள் உண்டு மாணவர்கள் அவற்றை ஆய்வு செய்திடுக.

மேச லக்னப்படி தர்மகர்மாதிபதி யோக அட்டவணைபோல் ஒவ்வொரு லக்னத்திற்கும் பன்னிரு பாவகங்களில் தர்மகர்மாதிபதிகள் ஏற்படுத்தும் பலன்களைத் தெளிவாக தெரிந்து கொள்வதற்கு அட்டவணைகளைத் தயார் செய்து கொள்க. அதன்படி

1 லக்னத்திற்கு 12 பாவகங்கள் = 1 x 12 = 12

12 லக்னத்திற்கு 1 x 12 x 12 = 144 அட்டவணை

தயார் செய்து கொண்டு முடிவுகளை தெரிவியுங்கள். இதே போல் இனிவரும் பாவக இணைவிற்கும் மேற்படி அட்டவணை போல் பன்னிரு லக்னங்களுக்கும் 12 பாவகப்படி அட்டவணையை தயார் செய்து பலன் கூறிப்பழகுக. அவற்றை குறிப்பறிக்கையாக தருவதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்க.

பாக்ய + லாபாதி யோகம்

9 ஆம் அதிபதியும், லாபாதிபதியும் இணைந்து ஏற்படுத்தும் யோகமாகும். இவ்விருவரும் மற்றொரு பாவகத்திற்கும் அதிபதியாக இருந்தால் அப்பாவகத்தின் தன்மையில் தங்களுடைய பாக்யத்தையோ அல்லது லாபத்தையோ ஏற்படுத்துவர்.

9 ஆம் அதிபதியின் தன்மையில் முதன்மையானது தர்மமாகும். தான் செயல்படும் எவ்விசயத்திலும் அதர்மமாக செயல்படமாட்டார். ஆதலால் இங்கு லாபாதிபதியுடன் இணையும் பொழுது சாதகர் நினைத்த செயலை நிறைவேற்றுவதில் முறையுடன் செயல்படத்துணை செய்வார். முறையற்ற வழிகளில் செல்லவிடமாட்டார். இப்பாக்ய லாபாதிபதிகள் வேறு தீய பாவகங்களுக்கும் அதிபதியாக இருந்தால் அத்தீயபாவகத்தின் தன்மையில் சில தீய செயல்களுடன் சாதகரை செயல்படச் செய்வார். மேலும் இப்பாக்ய லாபாதி பதிகள் இயற்கைத் தீய கோள்களாக இருந்தால் அக்கோள்களின் தீயக் குணப்படி பாக்ய + லாபத்தை ஏற்படுத்துவர். ஒரு பாவாதிபதி தீயகோளாகி மற்ற பாவாதிபதி நற்கோளாக இருந்தால் தீய கோள் தீய குணத்துடனும், நற்கோள் நற்குணத்துடன் தனது பாவகச் செயல்களைச் செய்வர்.

இவ்விருபாவாதிபதிகளும் தீயகோளின் ராசிகளில் இருந்தால் தங்களது செயல்களில் அந்த ராசிக்குரிய கோளின் குணமும் சிறிது வெளிப்படுத்துவர். நற்கோளின் ராசியில் இருந்தால் அந்நற்கோளின் குணத்தையும் வெளிப்படுத்துவர்.

**தன+லாபாதிபதி யோகம்**

செல்வம் சேர்ப்பதிலேயே முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் யோகமாகும். இவர்கள் இயற்கை பாவர்களானால் எவ்வகையிலும் செல்வத்தை சேர்ப்பதில் வல்லவராக இருப்பார். இயற்கை நல்லவராக இருந்தால் முறையுடன் கூடிய வழியில் செல்வம் சேர்ப்பர். ஒருவர் தீயவராகவும், மற்றொருவர் நல்லவராகவும் இருந்தால் கலப்பு வழிகளில் பொருள்களை சேர்ப்பர். தற்பொழுதுள்ள பொருள் தேடும் உலகிற்கு இவர்கள் (2+11) இணைவு பெற்ற சாதகர்கள் தங்களது நற்திசைக்கு ஏற்ப மிகுந்த செல்வ யோகங்களை அனுபவித்துக் கொண்டு இருப்பர். தற்காசச் சூழலில் தர்மம் குறைந்து கொண்டே வருவதால் (ஒழுக்கம்) எப்படியும் பொருளைச் சேர்க்கும் சுய நல விரும்பிகளுக்கு தன அதிபதியும். லாபாதிபதியும் பெரும் நன்மையைச் செய்து வருகின்றனர். எனவே தற்காலத்தில் தர்ம கர்மாதிபதியோகத்தை விட தன லாபாதிபதி யோகம் மிகவும் சிறப்புடையதாகக் கூறப்பட்டு வருகிறது. ஒன்பது கோள்களும் தனம் கொடுக்கும் வழிகளை செய்து வருகின்றனர். இதில் ஒரு லக்னத்திற்குரிய தனாதிபதி தன்னுடைய குணத்தை அடிப்படையாகக் கொண்டு தான் நிற்கும் வீட்டின் அதிபதியின் தன்மையையும் சேர்த்து பணம் வரும் முறைகளை ஏற்படுத்தித் தருவர். எனவே செல்வம் வரும் முறையை சரியாக கணித்துக் கூறுக.

**தன பாக்கியாதிபதி யோகம்**

தன அதிபதியான 2 க்குடையவர் குடும்பம், வாக்கு போன்றவைக்கு காரகராகிறார். பொருள் தேடுவதற்கு அவரே வழியமைக்கிறார். இப்பொருள் தேடும் அமைப்பில் தன அதிபதி பாக்ய பாவகத்தில் இருந்தால் பல ஊர்களுக்குச் சென்றோ அல்லது தந்தையின் மூலமாகவோ அல்லது வெளியூரில் பொருள் தேடும் அமைப்பு ஏற்படும். மற்ற பாவகங்களில் இருந்தால் ஏற்பட வாய்ப்பில்லை. ஆனால் தன அதிபதி பாக்யாதிபதியுடன் இணைந்தால் சாதகர் பொருள் தேடும் அமைப்பில் வெளியூரோ அல்லது தந்தையின் மூலமாகவோ இருக்கும். ஒழுக்கம் இருக்கும். எனவே இங்கு கூறப்படும் தன பாக்யாதிபதி யோகத்தினால் சாதகர் பொருள் தேடும் அமைப்பில் தர்ம சிந்தனை இருக்க வேண்டும். அவை ஒவ்வொரு லக்னத்திற்கும் எப்படி கூடுகிறது அல்லது குறைவாக உள்ளது என்று இங்கு காண்போம்.

**சுகபஞ்சாமிதிபதி யோகம் (4 +5)**

4 ஆம் பாவகம் சுகத்தைக் கொடுக்கக் கூடியதாகும். 5 ஆம் பாவகம் அறிவைக் கொடுக்கக் கூடியதாகும். இவ்விரு பாவக அதிபதி கோளும் இணைவதால் சாதகருக்கு தான் அனுபவிக்கும் இன்பத்தை முறையுடன் ஏற்படுத்திக் கொள்ள வழி வகுப்பர். குழந்தைகளினாலும், மூதாதையர்களினாலும், சுகத்தை அனுபவிப்பார். அறிவு, வீடு, வாகனம்

போன்றவை சாதகரிடம் வந்து சேரும். சுக அதிபதி கெட்டு பஞ்சாமாதிபதி நன்றாக இருந்தால் சாதகர் அறிவுடன் இருப்பார். ஆனால் இன்பத்துடன் இருக்கமாட்டார். சுக அதிபதி நன்றாக இருந்து பஞ்சாமாதிபதி கெட்டுவிட்டால் சாதகர் இன்பத்தை மட்டும் அனுபவிப்பார். அறிவுடன் கூடிய செயல்கள் இருக்காது. இரண்டு அதிபதிகளும் நற்கோளானால் நல்ல முறையில் சுகத்தை அனுபவிப்பர். இருவரும் தீய கோளானால் ஒழுக்கமற்ற வழிகளில் சுகத்தை அனுபவிப்பர். ஒருவர் நல்லவர், ஒருவர் தீயவராக இருந்தால் பலன்கள் கலப்புடையதாக இருக்கும்.

**பஞ்சம கர்மாதிபதி யோகம்**

ஐந்தாம் பாவக அதிபதி அறிவைக் கொடுப்பவராகிறார். அவர் கர்மாதிபதியான பத்துக்குடையவருடன் இணையும் பொழுது எப்பொழுதும் பதவி, அந்தஸ்து, நிலையான வாழ்வு போன்றவை பற்றிய அறிவை வளப்படுத்துவதற்கு சாதகரை தூண்டுகிறார். சிலர் அறிவையே தொழில் முதலீடாகவும் கொள்கின்றனர். சிலர் விரிந்துபட்ட அறிவை வளர்த்து அதன் மூலமாக புகழ் பெறுகின்றனர். எனவே மனிதன் புகழ்பெற்றவனாக வருகிறான் என்றால் அவருக்கு 5ம் பாவக துணையின்றி அமையாது. 10ம் பாவகம் புகழ், 5ம் பாவகம் அறிவு. இவையிரண்டும் இணையும் பொழுது மனிதன் தனியொரு சாதனையை நிகழ்த்துகிறான்.

**சுக பாக்யாதிபதி**

சுகம் + பாக்ய அதிபதியோகம் சிறப்பான யோகமாகும். மனிதர்கள் அனைவரும் இந்த யோகத்தை பெறுவதற்காகவே பல முயற்சிகள் செய்து வருகின்றனர். இவ்விரு பாவக அதிபதிகளும் இணைந்தால் சாதகர் அனுபவிக்கும் சுகத்தில் தர்மம் இருக்கும். ஒழுக்கம் இருக்கும். கல்வி, கேள்விகளில் வளர்ச்சியிருக்கும் பயபக்தி இருக்கும். நான்காம் பாவக அதிபதி ஒன்பதாம் பாவகத்தை முறையாக்குவார். ஒன்பதாம் பாவக அதிபதி நான்காம் பாவகத்தை ஒழுங்குபடுத்துவார். இக்கோள் தீயவர்களாகி தீய பாவகத்தில் இருந்தாலும், சாதகர் சாதாரண சுகங்களை அனுபவிப்பாரே தவிர கெட்டுப் போக விடமாட்டார். இவர்களுடன் மற்ற கோள்கள் இணைந்தாலும் அல்லது பார்த்தாலும் பலன்கள் மாறுபடும்.

**தன பஞ்சமாதிபதி யோகம்**

தன அதிபதி பொருளை ஈட்டும் தன்மையைக் குறிக்கிறார். இவர் மனிதர்கள் தான் தேடும் செல்வத்தைப் பற்றி குறிக்கும பாவகமாகும். பஞ்சமாதி, (ஐந்தாம் பாவகம்) மூதாதையர்களின் சொத்துக்கள் மற்றும் செல்வங்களைக் கொண்டு பொருள்தேடும் அமைப்பைக் குறிக்கும். சிலருக்கு அறிவு நுட்பத்துடன் செயல்பட்டு பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு கிடைக்கப்பெறும் செல்வத்தையும் குறிக்கும். இவர்கள் இருவரும் ஒருவர் சாதகத்தில்

இணைந்திருந்தால் சாதகருக்கு, நன்றாக அறிவை வளர்த்து அதன் மூலமாக பொருள் தேடும் அமைப்பை விளக்குவர். எனவே மனிதர்கள் தாங்கள் தேடும் செல்வத்திற்கு அடிப்படை காரணமாக அமையும் அறிவிற்கு காரகமான 5ம் பாவகம் தன அதிபதியுடன் இணைவது பெரும் நன்மையே. இவர்கள் நல்ல பாவகத்தில் இருந்தால் நன்மையாகும். அல்லது தீய பாவகத்தில் இருந்தால் தீமையாகும். ஆதலால் சாதகர் பொருள் தேடும் வழியைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது 5ம் பாவக அதிபதி தொடர்புள்ளதா ? என்று பார்த்து பலன் கூறுதல் வேண்டும்.

**பஞ்சம லாபாதியோகம்**

ஐந்துக்குடையவரும், லாபாதிபதியும் இணைந்தால் ஏற்படும் பலனாகும். இதில் ஐந்துக்குடையவர் அறிவிற்கு அதிபதியாகவும், லாபாதிபதி நினைத்ததை அடையும் தன்மையை ஏற்படுத்துவதாகவும் உள்ளார். சாதகரின் சிந்தனைகள் அனைத்தும் தான் நினைத்ததை எப்படியும் அடையவேண்டும் என்று செயல்படவைக்கிறார். எனவே இவர்கள் இருவர் இணைவும் சாதகருக்கு ஓரளவு நன்மையை அளிக்கும். ஆனார் தீயவர்களாக இருந்து தீய பாவகத்தில் இருந்தால் தீய சிந்தனைகளை வளர்த்து தீய செயல்களில் ஈடுபடவைப்பர்.

## 3.பாவகாதிபதிகள் மாறிநின்ற யோகங்கள்

### இலக்கினாதிபதி பன்னிரு பாவங்களில் நிற்பதால் ஏற்படும் யோகங்கள்

இலக்கினாதிபதி 1, 2, 3, 4, 5, 9, 10, 11.ஆகிய பாவங்களில் இருந்தால் மிகவும் நற்பலன்களை செய்யும்.

இலக்கினாதிபதி 6, 7, 8, 12. ஆகிய பாவங்களில் இருந்தால் மிகவும் தீயபலன்களை செய்யும்.

### இலக்கினாதிபதி 1, 2, 3, 4, 5, 9, 10, 11.ஆகிய பாவங்களில் இருந்தால்

ஜாதகர் தேகதிடமும், தேக ஆரோக்கியமும் பெற்றவராகவும், புத்திசாலியாகவும், சஞ்சல புத்தியை உடையவராகவும்.

அதிக இலாபம் உடையவராகவும், செல்வந்தராகவும் கல்வி கற்றவராகவும், மகிழ்ச்சியுள்ளவராகவும், நன்னடத்தை உடையவராகவும், ஆன்மீக உணர்வு உள்ளவராகவும், மரியாதைக்குரியவராகவும், நல்ல குணங்கள் பெற்றவராகவும்.

சிங்கத்திற்கு நிகரான பராக்கிரமம் பெற்றவராகவும், எல்லா வகையான செல்வங்களைப் பெற்றவராகவும், மதிக்கத்தக்கவராகவும், சஞ்சல மனம் உடையவராகவும், புத்திசாலியாகவும்.

பெற்றோர் மூலம் பெறும் மகிழ்ச்சியை முழுமையாக அடைவார். அநேக சகோதரர்கள் இருப்பார்கள். நல்ல குணம் உடையவராகவும், கவர்ச்சியான

தோற்றம் உடையவராகவும், தர்ம ஸ்தாபனங்கள் செய்யும் சேவையில் பங்கு கொள்பவராகவும்.

குழந்தைகளால் ஜாதகர் மத்திமமான பலன்களையே அனுபவிக்க முடியும். முதலில் பிறக்கும் குழந்தைக்கு ஆயுள் குறைவு. மதிக்கத்தக்கவராக, கோபக்காரராக அரசாங்க ஆதரவு பெறுபவராக பிறருக்கு சேவை செய்யும் மனப்பான்மை உடையவராகவும்.

அதிர்ஷ்டம் உடையவராகவும், மக்களால் விரும்பப்படுபவராகவும், பிரபலமானவராகவும், சிறந்த பேச்சாளராகவும், விஷ்ணுபக்தராகவும், மனைவி, மக்களுடன், மகிழ்ச்சியாக வாழ்பவராகவும், செல்வந்தராகவும்

தகப்பனாரின் மூலம் அடையத்தக்க எல்லா இன்பங்களையும் அடைவார். அரசாங்க ஆதரவை பெற்றவராகவும் மக்களிடையே பிரபலமானவராகவும், மதிக்கத்தக்கவராகவும் சுயமாக சம்பாதித்து பணக்காரராகவும்.

எதிலும் லாபம் பெறுபவராகவும் நற்குணங்கள் பெற்றவராகவும், பெயர், புகழ் பெறுபவராகவும்.

**இலக்கினாதிபதி 6, 7, 8, 12. ஆகிய பாவங்களில் இருந்தால்**

தேக சுகம் கெடும் அசுபர்கள் சம்பந்தம் ஏற்பட்டால் எதிரிகளின் தொல்லை, உடலை வருத்தி பயிற்ச்சிகள் செய்தல், நோய்களால் அவதிப்படல், சோம்பேரி தன்மை.

ஜாதகரின் மனைவிக்கு ஆயுள் குறைவு. இலக்கினாதிபதி இயற்கை சுபராகி ஏழாம் பாவத்தில் நின்றால் அதிர்ஷ்டம் குறைந்தவராகவும், ஏழையாகவும் இருப்பார்.

மந்திரம் கற்றவராகவும், வியாதியஸ்தராகவும், திருடராகவும், மிக்க கோபக்காரராகவும், துரதிர்ஷ்டசாலியாகவும், சூதாடியாகவும், மணவாழ்க்கை துன்பம் தரத்தக்கதாகவே இருக்கும்.

உடல் நலம் இல்லாதவராகவும், துரதிர்ஷ்டம் உள்ளவராகவும், மிக்க கோபக்காரராகவும், மிகுந்த செலவாளியாகவும், காடுகளில் அலைபவராகவும், அதிக செலவாளியாகவும், பிறந்த ஊரைவிட்டு வெளி ஊர்களில் வாழ்பவராகவும் இருப்பார்.

**இரண்டாம் அதிபதி பாவகாதிபதிகள் மாறிநின்ற யோகங்கள்**


இரண்டாம் அதிபதி 12ம் பாவகம் தவிர மற்ற பாவங்களில் இருந்தால் மிகவும் நற்பலன்களை செய்யும்.

இரண்டாம் அதிபதி 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11.ஆகிய பாவங்களில் இருந்தால் புத்திரபாக்கியம் சிறப்பு, செல்வந்தராக இருப்பார். பிறருடைய காரியங்களை செய்பவராக இருப்பார்.

பெரும் செல்வந்தராக இருப்பார். கர்வம் உள்ளவராக இருப்பார்.

ஆண்மைமிக்கவராகவும், புத்திசாலியாகவும், நல்ல குணம் உடையவராகவும், கஞ்சனாகவும் இருப்பார். தெய்வநிந்தனை செய்பவராக அதாவது நாத்திகராகவும் இருப்பார்.

எல்லாவிதமான செல்வங்களையும் பெற்றவராக இருப்பார். இரண்டாம் அதிபதி நான்கில் உச்சம் பெற்று அல்லது குருவுடன் சேர்ந்து நின்றால் அரசருக்கு நிகரான செல்வந்தராக இருப்பார்.




இரண்டாம் அதிபதி நான்கில் உச்சம் பெற்று அமர்ந்தால் என்ற அமைப்பு மேற்கண்ட துலாலக்னத்திற்கு மட்டுமே பொருந்தும்.

செல்வந்தராக இருப்பார், ஜாதகரும் அவரின் புத்திரர்களும் ஒன்று சேர்ந்து தனம் சம்பாதிப்பவர்களாக இருப்பார்கள். இரண்டாம் இடம் என்பது புத்திர ஸ்தானத்திற்கு பத்தாமிடமாகும். எனவே இரண்டாம் அதிபதி ஐந்தில் இருப்பது மகன்களுடன் சேர்ந்து பணம் சம்பாதிக்கும் அமைப்பு ஏற்படுகிறது.

பகைவர்களுடைய செல்வத்தைப் பெறுவார். இரண்டாம் அதிபதி அசுபர்களுடன் சேர்ந்து ஆறாம் பாவத்தில் நின்றால் பகைவர்களால் செல்வத்தை இழப்பார். பலவீனமான தொடைகளை உடையவர்.

மருத்துவராக இருப்பார், இரண்டாம் அதிபதி ஏழில் அசுபர்களுடன் சேர்ந்து நின்றால் அல்லது அசுபர்களால் பார்க்கப்பட்டால், ஜாதகரின் மனைவி தீய எண்ணம் கொண்டவர் ஆவார்.

நிறைய பூமியை ஆஸ்தியாகப் பெற்றிருப்பார். மூத்த சகோதர்களால் சுகம் இல்லை.

செல்வந்தராகவும், புத்திசாலியாகவும், சாமர்த்தியம் மிக்கவராகவும், புனிதயாத்திரை மேற்கொள்பவராகவும், தான தர்மங்கள் செய்பவராகவும்,

ஆன்மீகவாதியாகவும், விரதங்களை அனுஷ்டிப்பவராகவும் இருப்பார், இளம் வயதில் நோயாளியாகவும், பிற்காலத்தில் சுகம் அனுபவிப்பராகவும் இருப்பார்.

மதிக்க தக்கவராகவும், கல்வியில் சிறந்தவராகவும் இருப்பார். குழந்தைகளால் பெறக்கூடிய இன்பத்தைச் சிறிதும் பெறாதவராக இருப்பார்.

செல்வங்களையும், லாபங்களையும் பெறுவார். தாம் செய்யும் பணியில் ஊக்கமும், கவனமும், சுறுசுறுப்பும் உள்ளவராக இருப்பார். மதிக்க தக்கவராக இருப்பார். பெயரும், புகழும் உடையவராக இருப்பார்.

தனஸ்தானதிபதி விரைய ஸ்தானமான பன்னிரெண்டில் நின்றால் ஜாதகர் துணிச்சல் மிக்கவராக இருப்பார். ஆனால் செல்வம் குறைந்தவராக இருப்பார். மற்றவர்களைச் சார்ந்து வாழ்பவராக இருப்பார். மூத்த மகனால் எந்தவித பயனும் இல்லை.

**மூன்றாம் அதிபதி பாவகாதிபதிகள் மாறிநின்ற யோகங்கள்**

மூன்றாம் அதிபதி 1, 2, 3, 4, 5, 9, 10, 11.ஆகிய பாவங்களில் இருந்தால் மிகவும் நற்பலன்களை செய்யும்.

மூன்றாம் அதிபதி 6, 8, 12. ஆகிய பாவங்களில் இருந்தால் மிகவும் தீயபலன்களை செய்யும்.

**மூன்றாம் அதிபதி 1, 2, 3, 4, 5, 9, 10, 11.ஆகிய பாவங்களில் இருந்தால்**

தன் உழைப்பால் சம்பாதிப்பார். சேவை மனப்பான்மை உடையவர். தைரியம், வீரம் உள்ளவராக இருப்பார். படிப்பறிவு இல்லாதவராக இருந்தாலும் புத்திசாலியாக இருப்பார்.

உடல் பருத்தவராக இருப்பார், வீரம் அற்றவராக இருப்பார், தானாக எந்த காரியத்தையும் செய்யமாட்டார். மற்றவர்கள் தூண்டுதலின் பெயரிலேயே எந்தக் காரியத்தையும் செய்வார். மகிழ்ச்சி அற்றவராக இருப்பார். பிறர் செல்வத்தை அபகரிக்க நினைப்பார்.

உடன் பிறந்த சகோதரர்கள் மூலம் சந்தோஷம் பெறுவார். செல்வந்தராகவும், புத்திரபாக்கியங்கள் சிறப்பாக உடையவராகவும், மிகுந்த மகிழ்ச்சி உடையவராகவும் இருப்பார்.

மிகுந்த சுகம் உள்ளவராகவும், செல்வந்தராகவும், புத்திக்கூர்மை உடையவராகவும் இருப்பார்.

புத்திரபாக்கியம் அதிகம் உடையவர், நற்குணம் உடையவர், அசுபர்களின் பார்வை அல்லது சேர்க்கை ஏற்பட்டால் ஜாதகரின் மனைவி கொடூர எண்ணம் கொண்டவளாக இருப்பாள்.

அரசாங்கம் தொடர்புள்ள வேலையில் ஈடுபடுவார். இளம் வயதில் சந்தோஷம் இல்லை, முதுமை காலத்தில் சந்தோஷமாக இருப்பார்.

தந்தையாரிடமிருந்து கிடைக்க வேண்டிய சந்தோஷம், சுகங்கள் கிடைக்காது. தன் மனைவியின் மூலம் அதிர்ஷ்டம் உண்டாகும். புத்திரர்களாலும் சந்தோஷம் சுகம் உண்டு.

எல்லாவிதமான சுகங்களையும் அனுபவிப்பார். சுயமாக சம்பாதிப்பார். கெட்ட பெண்களிடம் நட்பு கொள்வார்.

வியாபாரத்தில் எப்பொழுதும், இலாபம் அதிகம் உடையவராவார். கல்வி அறிவு இல்லாவிட்டாலும் புத்திசாலியாக இருப்பார். வீர, தீரச் செயல்கள் செய்பவராக இருப்பார். பொதுநல சேவை செய்பவராக இருப்பார்.

**மூன்றாம் அதிபதி 6, 8, 12. ஆகிய பாவங்களில் இருந்தால்**

சகோதரருக்கு பகையாவார், தாய் மாமனிடமும் பகையாவர், செல்வந்தராக இருப்பார், தாய் மாமனிடம் பகையாக இருந்தாலும், தாய்வழி சகோதரிகளிடம் அன்பாக இருப்பார்.

திருடனாக இருப்பார். மற்றவர்களுக்காக உழைத்து பிறருக்கு அடிபணிந்து ஜீவனம் செய்வார். அரசாங்கத்தால் மரண தண்டனை விதிக்கப்படுவதற்கும் வாய்ப்பு உண்டு.

ஜாதகரின் தகப்பனார் கொடுமைக்காரராக இருப்பார். ஜாதகர் தீயவழிகளில் பணத்தைச் செலவு செய்பவராக இருப்பார். ஜாதகருக்கு மனைவியின் மூலம் அதிர்ஷ்டம் உண்டாகும்.

**நான்காம் அதிபதி பாவகாதிபதிகள் மாறிநின்ற யோகங்கள்**

நான்காம் பாவாதிபதி 1, 2, 3, 4, 5, 9, 10, 11.ஆகிய பாவங்களில் இருந்தால் மிகவும் நற்பலன்களை செய்யும்.

நான்காம் பாவாதிபதி 6, 8, 12. ஆகிய பாவங்களில் இருந்தால் மிகவும் தீயபலன்களை செய்யும்.

**நான்காம் பாவாதிபதி 1, 2, 3, 4, 5, 9, 10, 11.ஆகிய பாவங்களில் இருந்தால்**

சிறந்த கல்வி, நற்குணங்கள், விலையுயர்ந்த ஆபரணங்கள், நிலபுலன்கள், வாகனங்கள் கிடைக்கப் பெற்றவராகவும், தாயாரின் மூலம் கிடைக்க வேண்டிய அனைத்து சுகங்களையும் பெறுபவராகவும் இருப்பார்.

அனைத்து சுகங்களையும் அனுபவிப்பவராகவும், எல்லாவிதமான செல்வங்களையும் பெற்றவராகவும், நல்ல குடும்ப வாழ்க்கை, மரியாதை, தைரியம் மிக்கவராகவும், வீரதீரச் செயல்களில் ஈடுபடுபவராகவும் இருப்பார். ஆனால், தந்திரமுள்ளவராகவும் பிறரை ஏமாற்றுபவராகவும் இருப்பார்.

வீர தீர பராக்கிரமம் உடையவராகவும், அதிகமான வேலையாட்களை உடையவராகவும், ஈகை குணம் உள்ளவராகவும், நல்ல குணம் பெற்றவராகவும், தர்மம் செய்பவராகவும், தன் சுயமுயற்சி மற்றும் உழைப்பால் சம்பாதித்த சொத்துக்கள் உடையவராகவும், நோய், நொடி அற்றவராகவும் இருப்பார்.

மந்திரி போன்ற உயர்பதவிகள் கிடைக்கும். எல்லாவிதமான செல்வங்களையும் பெற்றவராக இருப்பார். திறமை மிக்கவராகவும், மதிக்கத்தக்கவராகவும், நற்குணங்கள் மிக்கவராகவும், நன்கு கற்றவராகவும், மகிழ்ச்சி மிக்கவராகவும், தன் மனைவியை நேசிப்பவராகவும் இருப்பார்.

மகிழ்ச்சியுள்ளவராகவும், அனைவராலும் நேசிக்கப்படுபவராகவும், விஷ்ணு பக்தராகவும், நற்குணங்கள் மிக்கவராகவும், மதிக்கத்தக்கவராகவும், தன் சுய முயற்சி உழைப்பால் சம்பாதித்த சொத்துக்களை உடையவராகவும் இருப்பார்.

பல விதமான துறைகளில் கல்வி அறிவு பெற்றவராகவும், பிதுரார்ஜித சொத்துக்களை விட்டுக் கொடுப்பவராகவும் இருப்பார். கற்றோர் நிறைந்த சபையில் ஊமைபோல் இருப்பார்.

அனைவராலும் நேசிக்கப்படுவார். கடவுள் பக்தி அதிகம் உடையவராகவும் நற்குணங்கள் மிக்கவராகவும், அனைவராலும் மதிக்கப்படுபவராகவும், அனைத்து விதமான மகிழ்ச்சி, சந்தோஷம், சுகங்கள் பெற்றவராகவும் இருப்பார்.

அரசாங்க மரியாதை பெறுபவராகவும், ரசவாதம் கற்றவராகவும், மிகுந்த மன நிம்மதி, மகிழ்ச்சி உடையவராகவும், அனைத்து சுகங்களும் உடையவராகவும் ஐம்புலன்களையும் அடக்குபவராகவும் இருப்பார்.

ரகசிய நோய்களால் பாதிக்கப்படுவதாக பயப்படுவார், தாராள மனப்பான்மை உடையவர். நற்குணங்கள் மிக்கவராகவும், தர்ம சிந்தனை உடையவராகவும், பிறருக்கு உதவுபவராகவும் இருப்பார்.

**நான்காம் பாவாதிபதி 6, 8, 12. ஆகிய பாவங்களில் இருந்தால்**

தாயாரால் பெறத்தக்க சுகங்கள் அற்றவராகவும், முன்கோபியாகவும், திருடனாகவும், நன்னடத்தை அற்றவராகவும், மனோ பயம், மனோ வியாதி உடையவராயும், இழிவான செயல்களில் ஈடுபடுபவராகவும் இருப்பார்.

குடும்ப சுகம் இல்லாதவராகவும், பிற சுகங்களும் இல்லாதவராகவும், பெற்றோரால் கிடைக்கும் சுகம் இல்லாதவராகவும், அலித் தன்மை உள்ளவராகவும் இருப்பார்.

குடும்ப சுகம் அற்றவர், பிற சுகங்கள் அற்றவர், நன்னடத்தை அற்றவர், முட்டாளாகவும், சோம்பேறியாகவும் இருப்பார்.

**ஐந்தாம் அதிபதி பாவகாதிபதிகள் மாறிநின்ற யோகங்கள்**

ஐந்தாம் பாவாதிபதி 1, 2, 3, 4, 5, 9, 10, 11.ஆகிய பாவங்களில் இருந்தால் மிகவும் நற்பலன்களை செய்யும்.

ஐந்தாம் பாவாதிபதி 6, 8, 12. ஆகிய பாவங்களில் இருந்தால் மிகவும் தீயபலன்களை செய்யும்.

**ஐந்தாம் பாவாதிபதி 1, 2, 3, 4, 5, 9, 10, 11.ஆகிய பாவங்களில் இருந்தால்**

நன்கு கல்வி கற்றவராகவும், குழந்தைகளால் ஏற்படக்கூடிய சந்தோஷங்களை அனுபவிப்பவராகவும், கருமியாகவும், நேர்மையற்றவராகவும், வக்கிரபுத்தி உடையவராகவும், பிறர் சொத்தை அபகரிப்பவராகவும் இருப்பார்.

பல புத்திரர்களைப் பெற்றவராகவும், செல்வந்தராகவும், குடும்பத்திற்கு ஆதரவாகவும், குடும்பத்தைப் போற்றி காப்பவராகவும், அனைவராலும் மதிக்கத்தக்கவராகவும், மனைவியிடம் பாசம் உள்ளவராகவும், உலகப் புகழ் பெறுபவராகவும் இருப்பார். சகோதரர்களை நேசிப்பவராகவும், புறம் பேசுபவராகவும் கஞ்சனாகவும், எப்பொழுதும் தன்னுடைய சுய வேலையில் கவனம் உள்ளவராகவும் இருப்பார்.

மகிழ்ச்சிமிக்கவர், தாய் மூலம் பெறத் தக்க அனைத்து மகிழ்ச்சியையும் பெறுவார். செல்வந்தராகவும், புத்திக் கூர்மையுள்ளவராகவும் இருப்பார். அரசராகவோ, மந்திரியாகவோ, குருவாகவோ (ஆசான்) இருப்பார்.

புத்திர பாக்கியம் மிக்கவராக இருப்பார். பாவர்களுடன் சேர்ந்து நின்றால் புத்திர பாக்கியம் அற்றவராக இருப்பார். இருப்பினும் நற்குணம் மிக்கவராகவும், நண்பர்களால் நேசிக்கப்படுபவராகவும் இருப்பார்.

மதிக்கத்தக்கவராகவும், அனைத்து மதங்களையும் நேசிப்பவராகவும் இருப்பார். ஆன்மீக நாட்டம் அதிகம் உடையவர். குழந்தைகளால் மகிழ்ச்சி உடையவராகவும் பிறருக்கு உதவுபவராகவும் இருப்பார்.

புத்திரன் இளவரசனாகவோ அல்லது இளவரசனுக்கு சமமானவராகவோ இருப்பார். ஜாதகர் பிரபல எழுத்தாளராகவும் இருப்பார் மேலும் ஜாதகர் குல விளக்காகத் திகழ்வார்.

இராஜ யோகங்களை அனுபவிப்பார். (அரசு ஆதரவு) மேலும் அனைத்து சந்தோஷங்களையும் அனுபவிப்பார். புகழ்மிக்கவராக இருப்பார்.

நன்கு கல்வி கற்றவர். அனைவராலும் நேசிக்கப்படுபவர். புகழ் வாய்ந்த எழுத்தாளராகவும், திறமைசாலியாகவும், அதிக குழந்தைகளை உடையவராகவும், செல்வந்தராகவும் இருப்பார்.

**ஐந்தாம் பாவாதிபதி 6, 8, 12,ம் வீட்டில் நின்றால்**

பகைவருக்குச் சமமான புத்திரர்கள் பிறப்பார்கள். அல்லது புத்திரர்கள் இறந்து விடுவார்கள் அல்லது தத்து புத்திரன் உடையவராகவோ அல்லது விலைக்கு வாங்கப்பட்ட புத்திரனை உடையவராகவோ இருப்பார்.

மகிழ்ச்சி குறைவு, ஜாதகர் இருமல் மற்றும் காச நோயாலும் நுரையீரல் சம்பந்தப்பட்ட சுவாச நோயாலும் பாதிக்கப்படுவார். முன்கோபம் உடையவராகவும், மகிழ்ச்சி அற்றவராகவும் இருப்பார்.

சொந்தக் குழந்தைகளால் சுகம் பெறமாட்டார். ஜாதகர் தத்து புத்திரர் அல்லது விலைக்கு வாங்கப்பட்ட புத்திரரை உடையவராக இருப்பார்.

**ஆறாம்அதிபதி பாவகாதிபதிகள் மாறிநின்ற யோகங்கள்**

ஆறாம் பாவாதிபதி 1, 3, 4, 5, 6, 7, 8, 9, 12.ஆகிய பாவங்களில் இருந்தால் மிகவும் தீயபலன்களை செய்யும்.

ஆறாம் பாவாதிபதி 2, 10, 11, ஆகிய பாவங்களில் இருந்தால் மிகவும் நற்பலன்களை செய்யும்.

**ஆறாம் பாவாதிபதி 1, 3, 4, 5, 6, 7, 8, 9, 12.ஆகிய பாவங்களில்**

நோயுள்ளவராகவும், புகழ் பெறாதவராகவும், உறவினர்களுக்கு விரோதியாகவும், நற்குணங்கள் அமையப் பெறாதவராகவும், சாகச நிகழ்ச்சிகள் நடத்துபவராகவும், தினம் சத்து பிழைக்கும் வீரதீரச் செயல்கள் புரிபவராகவும் இருப்பார்.

கோபம் மிக்கவராகவும், தைரியம் அற்றவராகவும், சகோதரர்களுக்கு பகைவர் ஆகவும் இருப்பார். ஜாதகருடைய பணியாட்கள் அவருக்கு கீழ்ப்படியமாட்டார்கள்.

தாயால் பெறத்தக்க சுகம், மகிழ்ச்சியைப் பெற முடியாதவராக இருப்பார். புத்திசாலியாகவும் புறம் கூறுபவராகவும், பொறாமை மிக்கவராகவும், திடசித்தம் இல்லாதவராகவும், சஞ்சலபுத்தி உடையவராகவும், செல்வந்தராகவும் இருப்பர்.

செல்வநிலை ஏற்றத்தாழ்வு மிக்கதாக இருக்கும். நண்பர்கள் மற்றும் புத்திரர்களுடன் பகைமை, விரோதம் கொள்பவராகவும், இரக்கம் உடையவராகவும், சுயநலமிக்கவராகவும், மகிழ்ச்சி உடையவராகவும் இருப்பார்.

உறவினர்களுடன் பகைமை பாராட்டுவார். மற்றவர்களுடன் நட்பு கொள்ளுவார். தன வகைகளில் மத்திம மகிழ்ச்சி உடையவராக இருப்பார்.

மணவாழ்க்கையில் இல்லற சுகம் அற்றவராகவும், புகழ் பெற்றவராகவும், நற்குணங்கள் மிக்கவராகவும், மதிக்கத்தக்கவராகவும், தைரியம், வீரம் உடையவராகவும், செல்வந்தராகவும் இருப்பார்.

நோய் மிக்கவர், நன்கு கற்றவர்களிடமும், ஞானிகளிடமும் பகைமை உடையவராவார். பிறர் சொத்தை அபகரிக்க நினைப்பவராகவும், நேர்மை அற்றவராகவும் இருப்பார்.

மரம், விறகு மற்றும் கற்கள், பாறை, போன்றவற்றை வியாபாரம் செய்வார். வியாபாரத்தில் ஏற்றத்தாழ்வுகள் இருக்கும். நிலையான லாபமோ, நிலையான நஷ்டமோ இருக்காது.

எப்பொழுதும் கெட்ட காரியங்களில் பணத்தைச் செலவளிப்பார். கற்றவர்களைப் பகைத்துக்கொள்வார். ஜீவகாருண்யம் இல்லாதவராகவும், பிராணிகளைக் கொடுமைப்படுத்துபவராகவும் இருப்பார்.

**ஆறாம் பாவாதிபதி 2, 10, 11ம் பாவத்தில் நின்றால்**

ஜாதகர் வீரதீரம் மிக்கவராகவும், குலத்திற்கே விளக்குப் போன்றவராகவும், வெளிநாட்டில் வசிப்பவராகவும் மகிழ்ச்சி மிக்கவராகவும், நல்ல பேச்சுத்திறன் கொண்டவராகவும், எப்பொழுதும் தன் சுய வேலையில் கவனம் அதிகம் உடையவராகவும் இருப்பார்.

நல்ல பேச்சாளராக இருப்பார். வெளிநாட்டில் சந்தோஷமாக வாழ்பவராக இருப்பார்.

எதிரிகளிமிருந்து இலாபம் பெறுவார். நற்குணம் உள்ளவராகவும், தைரியம், வீரம் மிக்கவராகவும், மதிக்கத்தக்கவராகவும் இருப்பார். ஆனால் புத்திரர்களால் மகிழ்ச்சி இல்லாதவராக இருப்பார்.

**ஏழாம் அதிபதி பாவகாதிபதிகள் மாறிநின்ற யோகங்கள்**

ஏழாம் பாவாதிபதி 2, 4, 5, 7, 9, 10, 11, ஆகிய பாவங்களில் இருந்தால் மிகவும் நற்பலன்களை செய்யும்.

ஏழாம் பாவாதிபதி 1, 3, 6, 8, 12 ஆகிய பாவங்களில் இருந்தால் மிகவும் தீயபலன்களை செய்யும்.

**ஏழாம் பாவாதிபதி 2, 4, 5, 7, 9, 10, 11, ஆகிய பாவங்களில்**

மனைவி மூலம் செல்வங்கள் பெறுவார். தீர்க்க தரிசனம் உடையவர் அதாவது எதிர்காலத்தில் நடக்கப்போவதை முன்பே அறியும் திறன் பெற்றவர்.

மனைவி ஜாதகரின் கட்டுப்பாட்டில் இருப்பதில்லை. நேர்மையானவராகவும், புத்திகூர்மை உடையவராகவும், ஆன்மீக உணர்வு உள்ளவராகவும் இருப்பார். ஜாதகருக்கு பல் நோய் ஏற்படும்.

மதிக்கத்தக்கவர். எல்லாவிதமான நற்குணங்களையும், அனைத்து விதமான செல்வங்களையும் பெற்றவராகவும், எப்போதும் மகிழ்ச்சி உடையவராகவும் இருப்பார்.

மனைவி மூலம் பெறத்தக்க, அனைத்து சுகங்களையும், சந்தோஷங்களையும் பெறுவார், தைரியம் மிக்கவர், திறமைசாலி, புத்திசாலியாகவும் இருப்பார்.

தன் மனைவியை நல்ல விதமாக நடத்துபவராகவும், மனைவி மீது அன்புமிக்கவராகவும் இருப்பார். அதீத நண்பர்கள் இருப்பார்கள், புது புது காரியங்களைத் துவக்கி அதில வெற்றியும் பெறுவார்.

தார்மீக கடமைகளில் ஈடுபடுபவராகவும் செல்வந்தராகவும், புத்திர பாக்கியங்களைப் பெற்றவராகவும் இருப்பார்.

மனைவி மூலம் தன லாபங்களைப் பெறுவார். புத்திரர்களால் மிகக் குறைந்த மகிழ்ச்சியே பெறுவார். பெண் குழந்தைகளை அதிகம் பெற்றவராக இருப்பார்.

**ஏழாம் பாவாதிபதி 1, 3, 6, 8, 12 ஆகிய பாவங்களில் இருந்தால்**

பிறர் மனைவியை விரும்புவார். துஷ்டராக இருப்பார், திறமைசாலி, எதிர்ப்பை எதிர்கொள்ளும் மனவலிமை அற்றவர், வாய்வு சம்பந்தமான நோய்களுக்கு ஆட்பட்டவராக இருப்பார்.

ஜாதகரது குழந்தைகள் இளம் வயதிலேயே இறந்து விடுவர். ஒரு பெண் குழந்தை பிறந்து உயிர் வாழலாம், பின்னர் பிறக்கும் ஆண் குழந்தை கடும் பிரயாசைக்குப்பின் உயிர் தப்ப நேரிடும்.

நோயுள்ளவர் அல்லது ஜாதகர் தன் மனைவியுடன் பகைமை கொள்பவராக இருப்பார். ஜாதகர் முன்கோபியாகவும், மகிழ்ச்சி அற்றவராகவும் இருப்பார்.

மண வாழ்வில் பெற வேண்டிய சந்தோஷங்களைப் பெற இயலாது. ஜாதகரின் மனைவி நோயாளி மேலும் தீய குணம் உள்ளவராக இருப்பார். அடங்கி இருக்கமாட்டார்.

ஏழையாக இருப்பார். கவலைமிக்கவராக இருப்பார். ஜாதகரின் மனைவி வீண் செலவுகள் செய்பவராக இருப்பார். ஜாதகர் ஜவுளி வியாபாரத்தில் ஈடுபட்டு சம்பாதிப்பவராக இருப்பார்.

**எட்டாம் அதிபதி பாவகாதிபதிகள் மாறிநின்ற யோகங்கள்**

எட்டாம் பாவாதிபதி **8ம் பாவத்தை தவிர** மற்ற அணைத்து பாவகங்களிலும் தீமையே செய்யும்.

உடல் நலம், ஆரோக்கியம் குறைவு உள்ளவராகவும், தெய்வ நிந்தனை, குரு நிந்தனை செய்பவராகவும் இருப்பார். உடலில் காயத்தால் ஏற்பட்ட தழும்புகளை உடையவராக இருப்பார்.

உடல் வலிமை குறைவாக இருக்கும். சிறிதளவே செல்வம் இருக்கும். இழந்த செல்வம் திரும்பக் கிடைக்காது.

சகோதரர்களால் சந்தோஷம் இல்லை. சுறுசுறுப்பு அற்றவராகவும், உழைத்து வாழ வேண்டும் என்ற எண்ணம் இல்லாதவராகவும், நல்ல வேலைக்காரர்கள் அமையப் பெறாதவராகவும், உடல்பலம் அற்றவராகவும் இருப்பார்.

தாயாரால் அடைய வேண்டிய சுகங்களை அடையமாட்டார். நிலம், வீடு, மகிழ்ச்சி, சுகம், அற்றவராகவும், நண்பர்களை ஏமாற்றுபவராகவும் இருப்பார்.

புத்திக் கூர்மை குறைந்தும், மூடத் தனம் அதிகமாகவும் இருக்கும். குறைந்த அளவு குழந்தைகள் தான் பிறப்பர். ஜாதகருக்கு நீண்ட ஆயுள் இருக்கும், செல்வந்தராய் இருப்பார்.

அடிக்கடி, நோய்வாய்படுவார், சிறுவயதில் சர்ப்பங்களாலோ,விசத்தாலோ, அல்லது நீராலோ கண்டம் ஏற்படும்.

மன சலனம் மிக்கவர், அசுபர் சம்பந்தம் ஏற்பட்டால், வியாபாரத்தில் நஷ்டம் ஏற்படும்.

எட்டாம் பாவாதிபதி எட்டாம் வீட்டில் நின்றால், ஜாதகருக்கு தீர்க்காயுள், திடிர் அதிர்ஷ்டம், விரோதிகள் பணம் அடைதல், இன்சூரன்ஸ் பணம் கிடைத்தல், மனைவி வழி சீதனம் கிடைக்கும்.

தன் மதத்தையே துவேஷிப்பவராகவும், நாஸ்தீகராகவும் இருப்பார். துஷ்ட்டத்தனம் மிக்க மனைவிக்கு கணவராக இருப்பார். பிறர் சொத்தை அபகரிப்பார்.

தந்தையால் கிடைக்க வேண்டிய சுகங்களை பெறாதவராக இருப்பார். புறம் பேசித் திரிபவராக இருப்பார். நல்ல ஜீவன வசதிகள், தொழில் அமையாது, சுபர் சம்பந்தம் ஏற்பட்டால் அசுப பலன் குறையும்.

செல்வம் அற்றவர். சிறுவயதில் துன்பப்படுபவராக இருப்பார். ஆனால் பிற்காலத்தில் மகிழ்ச்சிமிக்கவராக இருப்பார். சுபர் சம்பந்தம் பெற்றால் ஜாதகருக்கு தீர்க்காயுள் உண்டு.

தவறான வழிகளில், தீய காரியங்களுக்காக வீணாக செல்வத்தை செலவழிப்பார். மேலும் அசுபர்கள் சம்பந்தம் ஏற்படில் அற்ப ஆயுள் உடையவராக இருப்பார்.

**ஒன்பதாம் அதிபதி பாவகாதிபதிகள் மாறிநின்ற யோகங்கள்**

ஒன்பதாம் பாவாதிபதி 1, 2, 3, 4, 5, 7, 9, 10, 11, ஆகிய பாவங்களில் இருந்தால் மிகவும் நற்பலன்களை செய்யும்.

ஒன்பதாம் பாவாதிபதி 6, 8, 12 ஆகிய பாவங்களில் இருந்தால் மிகவும் தீயபலன்களை செய்யும்.

**ஒன்பதாம் பாவாதிபதி 1, 2, 3, 4, 5, 7, 9, 10, 11, ஆகிய பாவங்களில்**

முற்பிறப்பின் பயனால் அவரே பிறப்பார், அதிர்ஷ்டம் மிக்கவர். அரசர்களால் போற்றத்தக்கவர், அரசியல்வாதிகளால் மதிக்கப்படுவார், சிறப்பான குணநலன்கள் உடையவர். நல்ல கவர்ச்சிகரமான தோற்றம் உள்ளவராகவும். நன்கு கல்வி கற்றவராகவும் அனைவராலும் மதிக்கத்தக்கவராகவும் இருப்பார்.

நன்கு கற்ற பண்டிதராகவும், புகழ் பெற்றவராகவும், செல்வந்தராகவும், காம உணர்வு மிக்கவராகவும் இருப்பார், மனைவியாலும், புத்திரர்களாலும் மகிழ்ச்சி, சந்தோஷம் உடையவராக இருப்பார்.

சகோதரர்களால் மகிழ்ச்சியும் சுகமும் பெறுவார். செல்வந்தராகவும், நற்குணங்கள் மிக்கவராகவும், கவர்ச்சிகரமான தோற்றம் உடையவராகவும் இருப்பார்.

வீடு, வாகனங்களால் சுகத்தைப் பெற்றவராகவும் எல்லாவித செல்வங்களையும் பெற்றவராகவும், தாயாரிடம் பக்தி உள்ளவராகவும் இருப்பார்.

புத்திர பாக்கியம் சிறப்பாக உடையவராகவும், அதிர்ஷ்டம் மிக்கவராகவும், பெரியவர்களை மதிப்பவராகவும், குரு பக்தி மிக்கவராகவும், மனோ தைரியம் மிக்கவராகவும், ஆன்மீக உணர்வு உள்ளவராகவும், தான தர்மம் செய்பவராகவும், நன்கு கற்ற பண்டிதராகவும் இருப்பார்.

மனைவியால் அனைத்து வித நல்ல பலன்களும் கிடைக்கப் பெறுவார். நற்குணம் உள்ளவராகவும் புகழ் பெற்றவராகவும் இருப்பார்.

முன்னோர் பாக்கியம் உண்டு, குலதெய்வ அனுக்கிரகம் பெற்றவர், மிகுந்த அதிர்ஷ்டசாலியாக இருப்பார். நற்குணங்கள் மிக்கவராகவும், அழகிய தோற்றம் கொண்டவராகவும், தன் சகோதரர்களால் மகிழ்ச்சி, சந்தோஷம் பெறுபவராகவும் இருப்பார்.

அரசருக்கு சமமான அந்தஸ்து உள்ளவராகவோ இருப்பார் அல்லது மந்திரியாகவோ, சேனாதிபதியாகவோ இருப்பார், நற்குணம் உள்ளவராகவும், அனைவராலும் மதித்துப் போற்றத் தக்கவராகவும் இருப்பார்.

தனலாபம் நாளுக்கு நாள் அபிவிருத்தி அடையும் குருவிடம் பக்தி மிக்கவராகவும் நற்குணங்கள் மிக்கவராகவும், தான தர்மங்கள் செய்பவராகவும் இருப்பார்.

**ஒன்பதாம் பாவாதிபதி 6, 8, 12, ஆகிய பாவங்களில்**

அதிர்ஷ்டம் குறைந்தவராக இருப்பார், தாயாரின் உடன் பிறந்தவர்களால் சந்தோஷம் இல்லாதவராக இருப்பார் எப்போதும் எதிரிகளால் துன்பம் அடைபவராக இருப்பார்.

மூத்த சகோதரரால் கிடைக்கக் கூடிய சந்தோஷம் கிடைக்கப்பெறாதவராக இருப்பார்.

சுபகாரியங்கள், தர்மகாரியங்களுக்கு பணத்தைச் செலவழிப்பார். விருந்தாளிகளுக்கு விருந்து கொடுத்து ஏழையாவார்.

**பத்தாம் அதிபதி பாவகாதிபதிகள் மாறிநின்ற யோகங்கள்**

பத்தாம் அதிபதி 1, 2, 3, 4, 5, 7, 9, 10, 11, ஆகிய பாவங்களில் இருந்தால் மிகவும் நற்பலன்களை செய்யும்.

பத்தாம் அதிபதி 6, 8, 12 ஆகிய பாவங்களில் இருந்தால் மிகவும் தீயபலன்களை செய்யும்.

**பத்தாம் அதிபதி 1, 2, 3, 4, 5, 7, 9, 10, 11, ஆகிய பாவங்களில்**

நன்கு கற்றவராகவும், புகழ் பெற்றவராகவும், கவிஞராகவும் இருப்பார். இளம் வயதில் நோய்வாய்ப்படுவார். பிற்காலத்தில் மகிழ்ச்சியாக இருப்பார். ஜாதகரின் செல்வம் நாளுக்குநாள் அதிகரிக்கும்.

செல்வந்தராகவும், நற்குணம் மிக்கவராகவும், அரசாங்கத்தால் கௌரவிக்கப்படுபவராகவும், தானதர்மம் செய்பவராகவும், தந்தையிடமிருந்து பெறத்தக்க அனைத்து சுகங்களையும் பெறுபவராகவும் இருப்பார்.

சகோதரர்கள் மற்றும் பணியாளர்கள் மூலம் பெறத் தக்க அனைத்து சுகங்களையும் பெறுவார். நல்ல பணியாளர்கள் அமைவர். தைரியம் மிக்கவராகவும், நற்குணங்கள் மிக்கவராகவும், சரளமாகப் பேசுபவராகவும், சத்தியத்தைக் கடைப்பிடிப்பவராகவும் இருப்பார்.

மிகுந்த மகிழ்ச்சி உள்ளவர். தாயிடம் அன்பும், மரியாதையும் மிக்கவராகவும், தாயின் நல்வாழ்க்கையில் சிரத்தை உடையவராகவும் வாகனங்கள், நிலம், வீடு உடையவராகவும், செல்வந்தராகவும், நற்குணங்கள் மிக்கவராகவும் இருப்பார்.

எல்லாவிதமான கல்விகளையும் கற்பதில் ஆர்வம் மிக்கவராக இருப்பார் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருப்பார். செல்வந்தராகவும், புத்திரபாக்கியம் மிக்கவராகவும் இருப்பார்.

புத்திக் கூர்மை மிக்கவர், நற்குணம் மிக்கவர், சிறந்த சரளமான பேச்சாளராகவும், சத்தியத்தைக் கடைப்பிடிப்பவராகவும் மத சம்பிரதாயங்களில் ஈடுபாடு உடையவராகவும் இருப்பார். மனைவி மூலம் கிடைக்கக் கூடிய அனைத்து விதமான சந்தோஷங்களையும் பெறுவார்.

அரசனாவார், சாதாரண குடும்பத்தில் பிறந்திருந்தாலும் அரசனுக்கு நிகராக வாழ்க்கையில் வளர்ச்சி அடைவார். செல்வந்தராகவும், புத்திர பாக்கியம், மகிழ்ச்சி மிக்கவர் ஆகவும் இருப்பார்.

அனைத்து வேலைகளிலும் திறமை மிக்கவர், தைரியசாலி, உண்மை பேசி, நேர்மையாக நடப்பார். ஆசிரியர்களிடமும், மூத்தவர்களிடமும் மரியாதை மிக்கவராக இருப்பார்.

செல்வந்தராகவும், புத்திர பாக்கியம் மிக்கவராகவும் இருப்பார், மகிழ்ச்சி மிக்கவராகவும், உண்மை பேசி, நேர்மையாக நடப்பவராகவும், நற்குணங்கள் மிக்கவராகவும், எப்போதும் மகிழ்ச்சியாகவும் சுகமுள்ளவராகவும் இருப்பார்.

**பத்தாம் அதிபதி 6, 8, 12, ஆகிய பாவங்களில்**

தந்தையிடமிருந்து பெறத்தக்க சந்தோஷத்தை பெறாதவராக இருப்பார். ஜாதகர் செல்வம் அற்றவராகவும், திறமை மிக்கவராக இருந்தாலும், செல்வம் சேர்க்க இயலாதவராகவும் இருப்பார். எதிரிகளால் அதிகமாகத் துன்பப்படுவார்.

நன்னடத்தை அற்றவர். நீண்ட ஆயுள் உடையவர். மற்றவர்களை நிந்திப்பவராக இருப்பார்.

அரசு வகைகளில், வழக்கு வகைகளுக்காக செல்வத்தை செலவழிப்பார். எதிரிகளால் பயம் இருக்கும். திறமை மிக்கவராக இருந்தாலும் எப்பொழுதும் கவலை உள்ளவராக இருப்பார்.

**பதினொன்றாம் அதிபதி பாவகாதிபதிகள் மாறிநின்ற யோகங்கள்**

பதினொன்றாம் பாவாதிபதி 1, 2, 3, 4, 5, 7, 9, 10, 11, 12, ஆகிய பாவங்களில் இருந்தால் மிகவும் நற்பலன்களை செய்யும்.

பதினொன்றாம் பாவாதிபதி 6, 8, ஆகிய பாவங்களில் இருந்தால் மிகவும் தீயபலன்களை செய்யும்.

**பத்தாம் அதிபதி 1, 2, 3, 4, 5, 7, 9, 10, 11, 12, ஆகிய பாவங்களில்**

சாத்வீக குணம் கொண்டவராகவும், செல்வந்தராகவும் மகிழ்ச்சி மிக்கவராகவும், பாரபட்சமில்லாது அனைவரையும் ஒரே நிலையில் சமமாக மதிப்பவராகவும் கவிஞராகவும், சிறந்த பேச்சாளராகவும், எப்பொழுதும், அனைத்திலும் லாபம் பெறுபவராகவும் இருப்பார்.

செல்வ வளங்களையும், வசதிகளையும், சுகங்களையும் பெற்றிருப்பார். தானதர்மம் செய்பவராகவும், ஆன்மீக வாதியாகவும், எப்போதும் மகிழ்ச்சி உள்ளவராகவும் இருப்பார்.

அனைத்து காரியங்களிலும் திறமை மிக்கவராக இருப்பார். செல்வந்தராகவும், சகோதரர்களால் எல்லாவித மகிழ்ச்சி, சந்தோஷங்களுடனும், ஆதரவு மிக்கவராகவும் இருப்பார். கீழ்வாத நோயும் ஏற்பட வாய்ப்பு உண்டு.

தாய்வழி உறவினர்கள் மூலம் லாபங்கள் பெறுவார். புனித யாத்திரை மேற்கொள்வார். நில புலன், வீடுவாசல்களை பெற்று மகிழ்ச்சியுடன் வாழ்வார்.

குழந்தைகள் நன்கு கல்வி கற்றவர்களாகவும், நற்குணங்கள் மிக்கவர்களாகவும், நன்னடத்தை உடையவர்களாகவும் மகிழ்ச்சி மிக்கவர்களாகவும் இருப்பார்கள். ஜாதகர் ஆன்மீக நாட்டம் கொண்டவராகவும், மகிழ்வுடன் வாழ்பவராகவும் இருப்பார்.

மனைவியின் உறவினர்கள் மூலம் எப்பொழுதும் லாபம் பெறுவார். தாராள மனம் கொண்டவராகவும், நற்குணம் மிக்கவராகவும், காம உணர்வுமிக்கவராகவும், மனைவியின் சொல்படி கட்டளைக்குப்பணிந்து நடப்பவராகவும் இருப்பார்.

அதிர்ஷ்டம் மிக்கவராகவும், திறமை மிக்கவராகவும் இருப்பார், நன்னடத்தை உடையவராகவும், ஆன்மீகவாதியாகவும் உண்மை பேசி நேர்மையாக நடப்பவராகவும், செல்வந்தராகவும், ஐம்புலன்களை வெல்லத்தக்கவராகவும் இருப்பார்.

எல்லா காரியங்களிலும் லாபம் பெறுவார். ஜாதகரின் கல்வி அறிவு மற்றும் மகிழ்ச்சி, சுகம் ஆகியவை நாளுக்கு நாள் விருத்தி அடையும்.

நற்செயல்களுக்காக அதிகம் செலவு செய்வார். காம உணர்வு மிக்கவர். பொதுவாக தாழ்ந்த மக்களிடமும், பிறமத மற்றும் அயல்நாட்டு நண்பர்களுடனும் நட்புக் கொண்டிருப்பார்.

**பதினொன்றாம் அதிபதி 6, 8, ஆகிய பாவங்களில்**

பொதுவாக நோய் உள்ளவராகவோ இருப்பார். கொடூரகுணம் கொண்டவர். அயல்நாட்டில் வசிப்பார் மற்றும் எதிரிகளால் துன்பப்படுவார்.

அனைத்து காரியங்களிலும் நஷ்டம் அடைவார். தீர்க்காயுளுடன் நீண்டகாலம் வாழ்வார். ஜாதகரின் மனைவி ஜாதகருக்கு முன் மரணமாகி விடுவார்.

**12ம் அதிபதி பாவகாதிபதிகள் மாறிநின்ற யோகங்கள்**

பன்னிரெண்டாம் பாவாதிபதி 2, 8, 10, ஆகிய பாவங்களில் இருந்தால் மிகவும் நற்பலன்களை செய்யும்.

பன்னிரெண்டாம் பாவாதிபதி 1, 3, 4, 5, 6, 7, 9, 11, 12 ஆகிய பாவங்களில் இருந்தால் மிகவும் தீயபலன்களை செய்யும்.

**பன்னிரெண்டாம் பாவாதிபதி 2, 8, 10,ஆகிய பாவங்களில்**

நற்காரியங்களுக்காக பணத்தைச் செலவு செய்வார். ஆன்மீக உணர்வு உடையவராகவும் இனிமையாக பேசுபவராகவும், நற்குணங்கள் மிக்கவராகவும், நன்னடத்தை உடையவராகவும் வாழ்க்கை வசதிகளைப் பெற்று மகிழ்ச்சியாக இருப்பார்.

எப்போதும் லாபங்களைப் பெறுவார். மத்திம ஆயுள் உடையவராக இருப்பார். இனிமையாகவும், மென்மையாகவும் பேசுவார். நற்குணங்கள் மிக்கவராகவும் இருப்பார்.

அரசு தொடர்புடையவர்களால் வாழ்க்கையில் உயர்வார். தகப்பனாரின் அன்பு பாசம் மற்றும் அவரிடமிருந்து கிடைக்கும் சுகம் குறைந்தவராகவே இருப்பார்.

**12ம் பாவாதிபதி 1, 3, 4, 5, 6, 7, 9, 11, 12 ஆகிய பாவங்களில் இருந்தால்**

வீண் விரயங்கள் செய்பவராகவும், உடல் பலம், ஆரோக்கியம் குறைந்தவராகவும் இருப்பார். கபம் சம்பந்தப்பட்ட நோயால் பாதிக்கப்படுவார். கல்வி அறிவு மற்றும் செல்வம் இல்லாதவராகவும் இருப்பார்.

சகோதரர்களால் எவ்வித மகிழ்ச்சி, சுகம் பெறாதவராக இருப்பார். அனைவரையும் வெறுப்பார். தன்தேக சுகத்தையே பெரிதும் விரும்புவார். சுயநலம் மிக்கவராக இருப்பார்.

தாயிடமிருந்து பெற வேண்டிய சுகம் மற்றும் மகிழ்ச்சியை பெற முடியாதவராக இருப்பார். நிலம், வீடு மற்றும் வாகனங்கள் சம்பந்தமாக நாளுக்கு நாள் நஷ்டம், பொருள் இழக்கும் நிலை ஏற்படும்.

கல்வி அறிவு இல்லாதவராகவும், புத்திர பாக்கியங்கள் இல்லாதவராகவும் இருப்பார். புத்திரர்களைப் பெறுவதற்காக, புனித யாத்திரை மேற்கொள்வதில் பணத்தைச் செலவு செய்பவராக இருப்பார்.

உறவினர்களிடம் பகைமை பாராட்டுவார். கோபம் அதிகம் உள்ளவர் பாபச் செயல்கள் செய்வார். கவலைமிக்கவர், மற்றவர் மனைவிகளுடன் தொடர்பு கொள்வார்.

மனைவிக்காக அதிகமாக செலவு செய்து கொண்டு இருப்பார். தாம்பத்ய வாழ்க்கை சிறப்பில்லை. மனைவியால் சுகமில்லை. கல்வி அறிவு அற்றவராகவும் உடல் பலம், ஆரோக்கியம் குறைந்தவராகவும் இருப்பார்.

தன்னுடைய ஆசிரியர் மற்றும் குருமார்களை மதிக்கமாட்டார். குரு துரோகியாக இருப்பார். தன் நண்பர்களுக்கே பகைவராவார். தன்னுடைய விருப்பப்படியே அனைத்தையும் செய்வார். சுயகாரியத்தில் கெட்டிக்காரராக இருப்பார்.

எப்பொழுதும் நஷ்டம் அடைவார். மற்றவர்களின் சொத்துக்கள் மூலம் சிலசமயம் சிறிதளவு லாபம் பெறுவார்.

அதிகமாக செலவு செய்பவராக இருப்பார். சுகம் அற்றவர் எளிதில் கோபம் அடைபவராகவும் குரோதம், வன்மம் உடையவராகவும் இருப்பார்.

**பரிவர்த்தனை யோகம்**

<table>
<tr><td>சந்</td><td>சுக்</td><td>செவ்</td><td>சனி</td></tr>
<tr><td></td><td colspan="2" rowspan="2">பரிவர்த்தனை<br>யோகம்</td><td>குரு</td></tr>
<tr><td>புத</td><td></td></tr>
<tr><td></td><td></td><td></td><td></td></tr>
</table>

இரண்டு கிரகங்கள் தத்தம் வீடுகளை மாற்றிக் கொள்வதால் ஏற்படும் யோகம் பரிவர்த்னை யோகம் ஆகும்.


பரிவர்த்தனை பெரும் கிரகங்களின் காரக ஆதிபத்திய பலன்கள் சிறப்பாக இருக்கும். சுப ஆதிபத்தியம் பெறும் கிரகங்கள் பரிவர்த்தனை பெறுவது சிறப்பு.

பனிரெண்டு பாவக அதிபதிகளும், தங்களுக்குள் ஒருவருக்கொருவர் மற்றவர் வீட்டில் அமர்தல் பரிவர்த்தனை யோகமாகும். பரிவர்த்தனை யோகம் மொத்தம் 66 வகையானவை ஆகும். இதில் நல்ல பாவக பரிவர்த்தனை.

தீய பாவக பரிவர்த்தனை. கலப்பு பாவக பரிவர்த்தனை என மூன்று வகையாக பிரிக்கலாம். 1, 2, 4, 5, 7, 9, 10, 11 ம் பாவக பரிவர்த்தனை நற்பாவக பரிவர்த்தனை. 6, 8, 12ம் பாவகாதிபதிகள் தீய பாவகபரிவர்த்தனை இவை இரண்டும் நல்ல யோகங்களை தரும். மேற்கூறிய நற்பாவகங்கள், தீய பாவகங்களில் பரிவர்த்தனை அடைந்தால் இது தீமையான குணங்களுடன் கூடிய பொருள் சேர்க்கையை தரும்.

**பாவகரீதியாக ஏற்படும் பொதுவான யோகங்கள்**

**வாக்கு வன்மை யோகம்**




2க்குடையவர் நற்கோளுடன் இணைந்து கேந்திரம் அல்லது திரிகோண பாவகங்களில் இருந்தாலும் அல்லது 2 க்குடையவர் உச்சம் பெற்று குருவுடன் இணைந்திருந்தாலும் அறிவுப் பூர்வமான, திறமையான பேச்சாளர் ஆவார்.

**திக்கு திக்கி பேசுதல்**

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | செவ்<br>சூரி மாந் |
| | | | |
| | | லக் | |

2க்குடையவர் தீய கோள்களுடன் இணைந்து 10ல் இருந்தாலும் அல்லது 2 க்குடையவர் சூரியன், மாந்தியுடன் இணைந்தாலும் அவருடைய பேச்சுக்கள் நடுக்கத்துடன் காணப்படும்.

**மருத யோகம்**

| | | | |
|---|---|---|---|
| குரு | | | |
| | | | சந் |
| | | | |
| | சுக் | | |

சுக்கிரனுக்கு 5 லோ அல்லது 9 லோ குருவிருக்க, குருவிற்கு 5ல் சந்திரனிருந்து, சந்திரனிற்கு கேந்திரத்தில் சூரியனிருந்தால் மருதயோகம் ஏற்படும்.

**புதயோகம்**

| | | | |
|---|---|---|---|
| | சூரி<br>செவ் | | |
| ராகு | | | லக்<br>குரு |
| சந் | | | |
| | | | |

இலக்கினத்தில் குருயிருக்க, கேந்திரத்தில் சந்திரனும் இருக்க, சந்திரனிற்கு 2 ல் ராகுவும், ராகுவிற்கு 3ல் சூரியனும், செவ்வாயும் இருக்கப் பிறந்தவருக்கு புதயோகம் ஏற்படும்.

**சரஸ்வதி யோகம்**

புதன், குரு, சுக்கிரன், ஆகிய கோள்கள் 1,2,4,5,7,9 அல்லது 10ம் பாவகத்தில் இருந்து (சேர்ந்தோ அல்லது தனித்தனியாகவோ) அதில் குரு ஆட்சியோ அல்லது உச்சமோ அல்லது நட்புக்கோளின் ராசியிலோ இருந்தால் சரஸ்வதி யோகம் ஏற்படும்.

**அழகு முகத்தோற்றம்**

2ற்குடையவர் கேந்திரத்திலிருந்து நற்கோள்களால் பார்க்கப்பட்டாலும் அல்லது நற்கோள்கள் 2ல் இருந்தாலும் அழகிய முகத்தோற்றம் பெறும் அதே போல் 2 க்குடையவர் கேந்திரத்தில் இருந்து அக்கோள் உச்சமோ, ஆட்சியோ அல்லது நட்பு ராசியிலோ இருந்தால் சிரித்த முகத்துடன் கூடியவராக இருப்பார்.

**நல்ல உணவு பெறும் யோகம்**

இரண்டிற்குடையவர் வலுவுடன் இருந்து அக்கோள் குருவினாலோ அல்லது சுக்கிரனாலோ பார்க்கப்பட்டால் நல்ல உணவு உட்கொள்ளும் அமைப்பு ஏற்படும்.

**அன்னதானம் செய்யும் யோகம்**

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | **குரு** |
| **புத** | | | |
| | **லக்** | | |

**2** க்குடையவர் வலுவுடன் இருந்து அக்கோளுடன் புதன், குரு இணைந்தாலோ அல்லது பார்த்தாலோ அன்னதானம் செய்யும் யோகம் ஏற்படும்.

**உடன் பிறப்புகளினால் நல்யோகம் பெறுதல்**

மூன்றுக்குடையவர் அல்லது மூன்றாம் பாவகத்தை நற்கோள்கள் பார்த்தாலோ அல்லது இணைவு பெற்றாலோ அல்லது செவ்வாய் வலிமையுடன் இருந்தாலோ சாதகர் தனது உடன் பிறப்புகளினால் நல்யோகம் பெறும் அமைப்பு ஏற்படும்.

**ஒரு உடன் பிறப்பு யோகம்**

| | | | |
|---|---|---|---|
| | | **லக்** | |
| | | | சந் செவ்<br>புத<br>**சனி** |
| | | | |
| | | | |

**3** க்குடையவர், செவ்வாய், புதன் ஆகிய கோள்கள் இணைந்து **3**ல் இருக்க அல்லது சந்திரன் சனி **3** ல் இருக்க ஒரே ஒரு உடன்பிறப்பு ஏற்படும்.

**சாத்திர விருப்பம் பெரும்யோகம்**

மூன்றாம் பாவகம் நற்கோளின் ராசியாக இருந்து அப்பாவகத்தை நற்கோள்கள் பார்க்க, மூன்றாம் பாவக அதிபதி நற்கோளின் நவாம்சத்திலிருந்தால் நல்ல கலைகளை கற்றறிந்தவராவார்.

**பன்னிரு உடன்பிறப்புகள் ஏற்படும் யோகம்**

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| **செவ் குரு** | | | |
| **லக்** | | | **சனி** |

3 க்குரிய கோள் கேந்திரத்திலிருந்து அக்கோளின் திரிகோண இராசியில் உச்சம் பெற்ற செவ்வாயுடன், குருவிருந்து பிறந்த சாதகருக்கு பன்னிரு உடன்பிறப்புகள் ஏற்படும்.

தற்காலத்தில் இதற்கு வாய்ப்பு இல்லை. ( குடும்பக்கட்டுப்பாடு மற்றும் பொருளாதார ரிதியாக )

**பராக்கிரம யோகம்**

3 க்குடையவர் நற்கோளின் ராசியில் இருந்து, நற்கோளின் பார்வையோ, இணைவோ பெற்று, செவ்வாயும் நற்கோளின் ராசியில் இருந்தால் வீரமுடையவராக இருப்பர்.

**போர் வீரமுடையவர்**

| | | | |
|---|---|---|---|
| | சூரி<br>செவ்<br>சனி | | லக் |
| | | | |
| | | | |
| | | | |

3 க்குடையவர் உச்சம் அடைந்து, தீய கோள்களுடன் இணைந்து சர ராசிகளில் இருந்தால் போரில் வல்லமையுடையவராக இருப்பார்.

**நல்ல இல்லம் பெறும் யோகம்**

நான்காம் பாவக அதிபதி நற்கோள்களுடன் இணைந்து கேந்திரம் அல்லது திரிகோணத்தில் இருந்தால் நல்ல இல்லம் ஏற்படும்.

**பல இல்லங்களைப் பெறும் யோகம்**

நான்கிற்குடையவரும், 10க்குடைய வரும் இணைந்து செவ்வாய், சனியுடன் இருக்கப் பெற்ற சாதகர் பல இல்லங்களுக்கு அதிபதியாக இருப்பார்.

**உறுதியான இல்லம் பெறுதல்**

இலக்கினத்தில் 1, 7 க்குடைய கோள்கள் இருந்தாலும் அல்லது நான்காம் பாவகத்தில் இருந்து நற்கோள்கள் பார்த்தாலும் கடின முயற்சியால் உறுதியான இல்லம் பெறும் அமைப்பு ஏற்படும்.

நான்காம் பாவக அதிபதி ஆட்சியோ, மூலத்திரி கோணமோ அல்லது உச்சமோ பெற்றிருக்க, 9 க்குடையவரும் லக்கின கேந்திரத்தில் இருந்தால் உறுதியாக கட்டப்பட்ட இல்லங்கள் ஏற்படும்.

**மரியாதையுடன் இருக்கும் யோகம்**

1. நான்கிற்குடையவர் நற்கோளாகி, அக்கோளை மற்றொரு நற்கோள் பார்க்கப்பட்டு, புதனும் லக்கினத்தில் இருந்தால் அனைவரிடமும் மரியாதையாக இருப்பார்.
2. நான்காம் பாவகம் அல்லது நான்காம் பாவக அதிபதி குருவின் பார்வையையோ அல்லது இணைவையோ பெற்றால் அனைவரிடமும் மரியாதையாக இருப்பார்.

**தாயாரின் தீர்க்காயுள் யோகம்**

சந்திரன் வலுவுடன் இருந்து, நான்காம் பாவக அதிபதி உச்சம் பெற்றிருக்க, நான்காம் பாவகத்தில் நற்கோள் இருக்கப் பெற்ற சாதகரின் தாயாரின் ஆயுள் தீர்க்கமுடையதாக இருக்கும்.

நான்காம் பாவக அதிபதி நின்ற நவாம்ச அதிபதி வலிமையுடன் இருந்து அக்கோள் ஜன்ம லக்னம் அல்லது சந்திர லக்கினத்திற்கு கேந்திரத்தில் இருந்தால் தாயாரின் ஆயுள் தீர்க்கமானதாகும்.

**கபட யோகம்**

1. நான்காம் பாவக அதிபதி தீய கோள்களுடன் இணைந்தாலோ அல்லது பார்த்தாலோ அல்லது நான்கில் தீய கோள்கள் இருந்தாலோ சாதகர் கபடதாரியாக இருப்பார்.
2. நான்காம் பாவகத்தில் செவ்வாய், சனி, ராகு இருந்து 10 க்குடையவரும் தீயவராக அக்கோள்களைப் பார்த்தால் சாதகர் கபட தாரியாக இருப்பார்.
3. நான்காம் பாவக அதிபதி சனி, ராகு மற்றும் ராகுவுடன் இணைந்து தீயகோள்களால் பார்க்கப்பட்டால் சாதகர் கபட தாரியாவார்.

**வெளிப்படையாக செயல்படும் யோகம்**

1. நான்காம் பாவகத்தில் நற்கோள்கள் இருந்து அல்லது நான்காம் பாவகத்தில் ஒரு கோள் உச்சமோ, நட்போ அல்லது ஆட்சியோ பெற்றிருக்க அல்லது நான்காம் பாவகம் நற்கோளின் ராசியாக இருந்தால் சாதகர் வெளிப்படையாக பேசக்கூடியவர் ஆவார்.
2. இலக்கினாதிபதி 4ம் பாவகத்தில் இருந்து நற்கோளுடன் இணைந்தாலோ அல்லது பார்த்தாலோ அல்லது பர்வதாம்சமோ பெற்றால் சாதகர் கபடமின்றி செயல்படுபவர் ஆவார்.

**வாகன யோகம்**

1. இலக்கின அதிபதி 4, 5 அல்லது 11ல் இருக்கப் பெற்ற சாதகருக்கு வாகனயோகம் ஏற்படும்.
2. நான்காம் பாவக அதிபதி உச்ச மடைந்து இருக்க அக்கோள் உச்சமடைந்த ராசியதிபதி லக்கினத்திற்கு கேந்திரமோ அல்லது திரிகோணமோ பெற்றால். சாதகர் நல்ல வாகனயோக அமைப்பைப் பெறுகிறார்.

**வெகுபுத்திர யோகம்**

1. இராகு 5ம் பாவகத்தில் இருந்து நவாம்சத்தில் சனியினுடைய ராசிகளைத் தவிர மற்ற ராசிகளில் இருந்தால் சாதகருக்கு பல குழந்தைகள் ஏற்படும்.
2. ஏதாவது ஒரு கோள் நின்ற நவாம்ச அதிபதி ராசியில் 7க்குடையவருடன் இணைந்து 1, 2 அல்லது 5 ம் பாவகத்தில் இருந்தாலும் நிறைய குழந்தைகள் பிறக்கும்.

**தத்து புத்திர யோகம்**

1. ஐந்தாம் பாவகத்தில் செவ்வாயும், சனியும் இருந்து இலக்கினாதிபதி புதன் வீட்டில் இருந்து, புதனுடைய பார்வையோ அல்லது இணைவோ பெற்றிருந்தால் சாதகர் தத்து எடுத்து குழந்தை வளர்ப்பார்.
2. 7க்குடையவர் 11ல் இருந்து, 5 க்குடையவர் நற்கோள் இணைவு பெற்று, செவ்வாயும், சனியும் 5ல் இணைவு பெற்றாலும் தத்து புத்திர யோகம் ஏற்படும்.

**மதிப்பு மிக்க குழந்தை யோகம்**

ஐந்துக்குடையவர் குருவாகயிருந்து, சூரியனும் நல்ல நிலையில் இருந்தால் சாதகரின் பையன் மதிப்பு வாய்ந்தவராகத் திகழ்வார்.

**காலம் கடந்து குழந்தை பெறும் யோகம்**

1. ஐந்தாம் பாவகத்தில் குருயிருந்து, ஐந்தாம் பாவக அதிபதி சுக்கிரனுடன் இணைந்திருந்தால் காலம் கடந்து குழந்தை பிறக்கும்.
2. இலக்கினத்திற்கு ஒன்றில் குருயிருந்து, குருவிற்கு ஒன்பதில் சுக்கிரனும், இலக்கின அதிபதியும் இருந்தால் காலம் கடந்து குழந்தை பிறக்கும்.
3. ஐந்தாம் பாவகத்தில் இராகு இருந்து, குரு நீசபலத்தில் இருந்து, ஐந்தாம் பாவக அதிபதி தீயகோளுடன் இணைந்திருந்தால் சாதகரின் 32 அல்லது 40வது வயதில் குழந்தை இறந்து போகும்.
4. இலக்கினத்திற்கோ அல்லது குருவிற்கோ ஐந்தில் தீயகோள்கள் இருந்தால் சாதகரின் நடுவயதில் குழந்தைகள் இறந்து போகும்.

**அறிவுக் கூர்மையுடைய யோகம்**

ஐந்தாம் பாவக அதிபதி நற்கோளாகி, மற்ற நற்கோளின் இராசியில் இருந்தாலோ அல்லது நற்கோளின் பார்வையைப் பெற்றாலோ சாதகர் அறிவுக்கூர்மையுடையவர் ஆவார்.

**முன்னெச்சரிக்கையுடன் செயல்படும் யோகம்**

ஐந்தாம் பாவக அதிபதி நற்கோளாக இருக்க ஐந்துக்குடையவர் நின்ற நவாம்ச அதிபதிக் கோள் நற்கோள் பார்வை பெற்றிருந்தால் சாதகர் முன்னெச்சரிக்கையுடன் செயல்படக் கூடியவர் ஆவார்.

**மூன்று காலங்களையும் உணரும் யோகம்**

நற்கோளான குரு சஷ்டி அம்சப் பிரிவில் 19வது பிரிவான மிருதுவாம்சத்தில் இருந்து, நவாம்சத்தில் தனது இராசியிலும் இருக்க வேண்டும் அல்லது தசவர்க்க மேன்மையில் கோபுரம்சத்தில் இருந்தால் சாதகர் முக்காலமும் உணர்ந்தவராவார்.

**குழந்தையினால் இன்பத்தை அனுபவிக்கும் யோகம்**

ஐந்தாம் பாவகம் நற்கோள் ராசியாகி அதில் நற்கோள்கள் இருக்க அல்லது ஐந்தில் குரு, சுக்கிரன் சேர்ந்து இருக்க அல்லது புதனிருக்கப் பெற்ற சாதகருக்கு குழந்தையினால் இன்பம் ஏற்படும்.

**பாக்ய யோகம்**

வலிமை பெற்ற நற்கோள் இலக்கினத்திலிருந்து அல்லது 3, 5 ம் பாவகத்திலிருந்து, இக்கோள் 9ம் பாவகத்தைப் பார்த்தால் பாக்யயோகம் ஏற்படும்.

**தர்ம குணமுள்ள யோகம்**

ஒன்பதுக் குடையவர் உச்சமாகி நற்கோளின் பார்வையிலிருக்க, ஒன்பதாம் பாவகத்தில் நற்கோள்யிருந்தால் சாதகர் தர்மகுண முள்ளவராவார்.

**நூறு வயது யோகம்**

8 – ஆம் அதிபதியே 9 – ஆம் அதிபதியானாலும் உச்சம், பெற்றாலும், பாவியானாலும், நற்கோளின் பார்வை பெற்றாலும் சாதகனுக்கு நூறு வயதாகும்.

**நீடித்த ஆயுள் யோகம்**

கடகம் முதல் ஆறு இராசிக்குள் குருவும், மகரம் முதல் ஆறு இராசிக்குள் சனியும், கடக கேந்திரத்தில் சுக்கிரனும், புதனும் இருந்தால் சாதகன் நீடித்த ஆயுளைப் பெறுவான்.

**தீர்க்காயுள் யோகம்**

7, 8, 6 பாவகங்களிலும் 3, 11 பாவகங்களிலும் சுபர்கள் இருந்தால் நீடித்த ஆயுள் உண்டாகும். எட்டாம் வீட்டோன் உச்சமாக இலக்கினாதிபதியை சுபர் பார்க்க, கேந்திரமும் பெற சாதகனுக்கு நெடு நாள் வரை ஆயுளுண்டு.

**மத்திம ஆயுள்**

இலக்கினாதிபதிக்கும் சூரியனுக்கும், உறவாகில் தீர்க்காயுள் உண்டு. சமமாகில் மந்திம வயது (64) வயது வரை உயிரோடிருப்பான்.

**சயன சுகயோகம்**

12க்குடையது சுபவர்க்கமேறி அதிபலமாகில் அதிக சயன சுகம் உண்டு. 12க்குடையது சுபருடன் கூடி, சுக்கிரனுடன் தொடர்புபட்டு, சுக்கிரனைப் பார்த்தால் சயனசுகம், படுக்கை வசதி உண்டு.

**இளமையில் சயன சுகயோகம்**

12இல் சுபர்களும், 12க்குடையதும் இருந்தால் தொட்டில், ஊஞ்சல் முதலான படுக்கை சுகங்களை உடையவன். சந்திர சூரியர் கூடி 12இல் இருப்பின் இளமையில் சயன சுகம் பெறுவார்.

**அலங்கரிக்கப்பட்ட படுக்கை யோகம்**

**12**க்குடையது ஆட்சி, உச்சம், மூலத்திரி கோணம் பெற்று **9**க்குடையதால் பார்க்கப்பட்டால் மணிகள், ரத்தினங்கள் ஆகியவற்றால் அலங்கரிக்கப்பட்ட விசித்திரமான ஊஞ்சாலடுகிற படுக்கையை உடையவன், செல்வமும் உடையவன்.

**மெத்தை யோகம்**

**12**ஆம் அதிபதி **6–8** களில் ஒன்றில் இருக்க, சனியும் இராகுவும் சேர்ந்து **12**இல் இருக்க, நற்கோள்களின் பார்வை இல்லாது இருக்கப் பிறந்தவன், தரையில் உள்ள புல்லை மெத்தையாக நினைத்துத் தூங்குபவன்.

**நல்ல கண் பார்வை யோகம்**

பனிரெண்டிற்குடையோன் சுபருடன் கூடி சுப நவாம்சம் அடைந்து, சுபர் பார்வை பெற்றிருந்தால் நல்ல கண்பார்வை யோகம் ஏற்படும். நல்ல பாதங்களுக்கும் இவ்விதியே பொருந்தும்.

**பார்வை நூல்கள் :–**

| | | |
|---|---|---|
| ஜாதக பாரிஜாதம் | – | வேதலிங்கப்பட்டர் |
| பலதீபிகை | – | மந்திரேஸ்வரமுனிவர் |
| ஜாத அலங்காரம் | – | கீரனூர் நடராசர் |
| வீமேசுர உள்ளமுடையான் | – | திருமயிலை குழந்தையானந்த சுவாமி |
| குமாரசாமியம் | – | வீரவநல்லூர் குமாரசுவாமி தேசிகர் |

குறிப்பு

.....................................................................................
.....................................................................................
.....................................................................................
.....................................................................................
.....................................................................................
.....................................................................................
.....................................................................................
.....................................................................................
.....................................................................................
.....................................................................................
.....................................................................................
.....................................................................................
.....................................................................................
.....................................................................................
.....................................................................................
.....................................................................................
.....................................................................................
.....................................................................................
.....................................................................................
.....................................................................................
.....................................................................................
.....................................................................................
.....................................................................................
.....................................................................................

## கூறு – 5

## பலவிதமான யோகங்கள்

### யோகம் செயல்படும் விதம்

**யோகங்களை செயல்படாமல் தடுக்கும் அமைப்புகள்**

1. சூரியன், செவ்வாய், குரு, சனி இந்நான்கு கோள்களோ அல்லது மூன்றோ, இரண்டோ, ஒன்றோ நீச இராசியிலிருந்து, அந்த நீச இராசி இலக்கினமாக இருந்து, சந்திரனும் விருச்சிகத்திலிருப்பின், அரசயோகம் ஏற்படாது.

2. பொதுவாக யோகத்திற்கான கோள் நீசம் பெற்று இருக்க கூடாது.

3. எந்த ஒரு யோகத்திற்க்கும் சந்திரன் நீசம் பெற்று இருக்க கூடாது.

4. தீயக்கோள்கள் (சூரியன், செவ்வாய், சனி) நீச இராசிகளில் இருந்து அல்லது பகை ராசிகளில் இருந்து, நற்கோள்களின் இணைவோ அல்லது பார்வையோ பெறாமல் 1, 4, 7, 10 என்னும் கேந்திரங்களில் இருக்கப்பட்ட சாதகருக்கு அரசயோகம் ஏற்படாது. மேலும் இத்தீயக்கோள்கள் 6, 8, 12ம் இடங்களில் இருந்து நற்கோள்களில் ஒருவர் சேர்ந்திருப்பினும் அரசயோகம் ஏற்படாது.

5. இலக்கினம் வர்கோத்தமம் பெறாமல் கோள்களின் பார்வையைப் பெறாமல் இருப்பின் அரசயோகப் பலன் இல்லை. சாதகர் ஏழையாவார்.

6. கும்ப லக்னத்தில் பிறந்தவருக்க மூன்று கோள்கள் நீசமடைந்து, மகரத்தில் குரு, சூரியனுடன் இணைந்து அஸ்தமனம் அடைந்து, ஏதாவது ஒரு கோள் நற்கோளுடன் இணைந்து உச்சமில்லாமலிருப்பின் அரசயோகம் ஏற்படாது.

7. இலக்கினம் அல்லது சந்திரனுக்கு கேந்திரங்களில் கோள்களில்லாமல் நான்கு கோள்கள் நீசம், அஸ்தமனம் அல்லது பகை ராசியில் இருக்க அரசயோகம் ஏற்படாது.

8. வலுவற்ற சந்திரன் தீயக்கோள்களின் பார்வை பெற்று, நற்கோள்களின் பார்வை பெறாமலிப்பிருன் சாதகர் வனத்தில் வசிப்பார் துன்பங்களையும் அனுபவிப்பார்.

9. இலக்கினக்கோள், சந்திரனுக்குப் பகையாகி, சந்திரனுடைய பார்வையைப் பெற்று 3ல் சூரியன், 6ல் செவ்வாய், 7ல் சனியிலிருந்து நற்கோள்கள் கேந்திரங்களில்லாமல் அஸ்தமனம் அடைந்த சாதகருக்கு அரசயோகம் ஏற்படாது.

10. ஐந்து கோள்கள் நீசமோ அல்லது அஸ்தமனமோ அடைந்திருப்பின் அரசயோகம் ஏற்படாது.

11. எரிமின் நட்சத்திரம் விழுதல். இடிமுழுக்கம். நில அதிர்வு, போன்ற காலங்களில் பிறந்தவர்களுக்கு அரசயோகம் ஏற்படாது.

12. தீய நிமித்தக்காலம், சனி இலக்னத்திலிருக்கின்ற காலத்திலும், பிறந்தவர்களுக்கு அரசயோகம் ஏற்படாது.

13. அரச யோகத்தை ஏற்படுத்தும் கோளிற்கு, போர் ஏற்படினும் அல்லது உலர்ந்த, சிதைந்த தன்மையோ அல்லது போரில் தோல்வி ஏற்படினும் அரசயோகம் ஏற்படாது.

14. சூரியன் துலாம் ராசியில் 10வது பாகையிலிருந்து பிறந்தவர். பேராவலால் அரச யோகத்தை இழக்கிறார்.

15. சில கோள்கள், மூலத்திரிகோணம் அல்லது உச்சம் அல்லது ஆட்சி வீட்டிலிருக்க, சூரியன் முழு நீசப் பாகையில் இருப்பின், மேலே கூறிய கோள்களால் ஏற்படும் அரசயோகம் பயன் தருவதில்லை.

16. மகரம் லக்கினமாகி அதில் குரு நீசத்துடன்யிருக்க, சந்திரன் கடகத்தைத் தவிர்த்து மற்ற ராசிகளிலிருப்பின் அரசயோகம் ஏற்படாது. மேலும் துன்பம், சிற்றின்பக்கோளாறு, ஏழ்மை. கணிகையர் இல்லத்திலிருப்பார்.

17. கேமத்துருவ யோகத்தில் உள்ள சந்திரனுக்கு எக்கோளின் பார்வையும் இல்லாதிருப்பின் அரசயோகம் ஏற்படாது. சாதகர் ஒழுக்கமற்றவர்.

18. மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட கோள்கள் நீசத்திலிருக்கும் பொழுது பிறந்தவர் அரசு குமாரனாக இருந்தாலும், துன்பமடையவார். ஒழுக்கமின்மை, ஏழ்மை, தோழ்வியைத் தழுவுதல்.

19. ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட கோள்கள் பகை ராசிகளில் இருந்தாலும், அஸ்தமனம் அடைந்தாலும், சூரிய, சந்திரர்கள் உச்சம் பெறாதிருப்பின் அரசயோகம் நசிந்து போகும்.

20. குரு, சுக்கிரன் நீச நவாம்சத்திலிருந்தால் அரசயோகம் நசிந்து போகும். குலத்திற்கு அழிவேற்படும்

## 2.அவ யோகங்கள்

**பொய் வாக்குறுதி செய்வோர்**

| | | | |
|---|---|---|---|
| **கேது** | | | **லக்** |
| | | | |
| | | | |
| | **சந்** | **சனி** | **ராகு** |

2க்குடையவர் சனி மற்றும் செவ்வாய்குரிய இராசிகளில் இருந்து, தீயவர்கள் கேந்திரம் மற்றும் திரிகோண இராசிகளில் இருந்தால் பொற் பேசுபவராக இருப்பார்கள்.

**ஊமை யோகம்**

| | | | |
|---|---|---|---|
| | | | **லக்** |
| | | | |
| **குரு**<br>**சந்** | | | |
| | | | |

இரண்டிற்குடையவர் குருவுடன் இணைந்து 8 ம் பாவகத்திலிருந்தால் சாதகர் ஊமையாவார்.

**நேத்ரநாச யோகம்**

| | | | |
|---|---|---|---|
| | லக் புத<br>சனி சுக் | | |
| | | | |
| | | | |
| | | | |

ஆறுக்குடையவரும், 10ம் பாவக அதிபதியும் லக்கினத்தில் இருந்து இவர்களுடன் 2ம் பாவக அதிபதி இணைந்தால் சாதகருக்கு பார்வை போய்விடும். இக்கோள்கள் நீச நிலையில் இருந்தாலும் பார்வையில்லாமல் போகும்.

**அந்தக யோகம்**

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | லக் |
| | | | சூரி<br>சந் புத |

சந்திரனும், புதனும் இணைந்து இரண்டிலிருக்க, அல்லது லக்கின அதிபதியும் 2 க்குடையவரும், சூரியனும் இணைந்து இரண்டிலிருக்க அந்தகயோகம் ஏற்படும். இவ்வமைப்பு பெற்றவருக்கு இரவில் பார்வை இல்லாமல் போகலாம். அல்லது பிறக்கும் பொழுது குருடராகப் பிறக்கலாம்.

**தீயமுகத்தோற்றம்**

தீயகோள்கள் 2ல் இருந்து, 2க்குடையவர் தீயகோளுடனோ அல்லது நீசநிலையிலோ இருந்தால் முகப் பொழிவில்லாமல் இருப்பர். அதே போல் 2

ற்குடையவர் தீயவராக இருந்து அக்கோளுடன் குளிகன் இணைந்தாலும் அல்லது பகைவர் மற்றும் நீச நவாம்சத்தில் இருந்தால் முகம் தெளிவற்று கோபமுடன் காணப்படும்.

**நிலையற்ற உணவு பெறுதல்**

2 க்குடையவர் நீசம் பெற்றாலோ அல்லது நீசம் பெற்ற கோளின் பார்வையைப் பெற்றாலோ அல்லது தனது பகைவரின் இராசியில் இருந்தாலும் உணவிற்கு பஞ்சம் ஏற்படும். தனது உணவிற்காக மற்றவரை நம்பியிருக்கும் சூழ்நிலை ஏற்படும்.

**சர்ப்ப கண்ட யோகம்**

| | | | |
|---|---|---|---|
| | | | |
| **கேது<br>சந்** | | | **லக்** |
| | | | **ராகு<br>மாந்** |
| | | | |

லக்னாதிபதி 8ல் இருந்து, இராகு மாந்தியுடன் இணைந்து 2ல் இருந்தால் சாதகர் பாம்பினால் கடிக்கப் பெறுவார்.

**உடன் பிறப்பற்ற யோகம்**

| | | | |
|---|---|---|---|
| | | | |
| **ராகு** | | | **சனி செவ்** |
| **சூரி** | | | **கேது** |
| **லக்** | | | |

**3**ல் பாவி இருந்து, **3** க்குடையவரும், செவ்வாயும் **8** ல் இருந்து தீயகோள்களால் பார்க்கப்பட்டால் உடன் பிறப்புகள் இல்லை. அல்லது அவர்களினால் சிறிதும் நன்மையில்லை.

**இராணுவத்தில் பயந்த தன்மையுள்ள வீரர்**

| | | | |
|---|---|---|---|
| | | **லக்** | |
| | | | **செவ்** |
| | | | |
| | **சந்** | | |

**3** க்குடையவர் ஸ்திர ராசியில் இருந்து, **3** க்குடையவர் நீச நிலையில், **3** க்குடையவர் இருக்கின்ற ராசியதிபதியும் நீச நிலையில் இருக்கப் பிறந்தவர் பயந்த குணமுடையவர் ஆவார். இவர் போரில் பயந்தவராவார்.

**இல்லங்கள் இழப்பு ஏற்படும் நிலை**

1. நான்காம் பாவக அதிபதி 12ல் இருந்து தீயகோள்களால் பார்க்கப்படுவது.
2. நான்காம் பாவக அதிபதி , நான்காம் பாவக அதிபதி நின்ற நவாம்ச ராசியதிபதி, ராசியில் 12ல் இருந்தால் எத்தனை இல்லங்கள் இருந்தாலும் அனைத்து இல்லாமல் போய்விடும்.

**உறவினர்களால் கைவிடப்பட்ட யோகம்**

நான்காம் பாவக அதிபதி தீயகோள்களுடன் இணைந்திருந்தாலும் அல்லது தீய சஷ்டியம்சத்திலிருந்தாலும் அல்லது தனது பகை ராசியில் இருந்தாலும் அல்லது நீசத்திலிருந்தாலும் சாதகர் உறவினர்களால் கைவிடப்பட்டவர்.

**தாயாரால் வெறுக்கப்பட்ட யோகம்**

இலக்கினம் மற்றும் நான்காம் பாவகத்திற்கு புதன் ஆதிபத்யம் பெற்று, இவற்றில் தீயகோள் இருந்தாலோ அல்லது பார்த்தாலோ சாதகரின் தாயார் அவரை வெறுத்து ஒதுக்குவார்.(இது மிதுன லக்னத்திற்கு மட்டும் பொருந்தும்)

**தாயார் நட்பு பெறும் யோகம்**

1, 4 ம் பாவக அதிபதிகள் உபய ராசிகளுக்குரியவராகி, அல்லது 1,4 க்குரிய கோள்கள் தற்கால நண்பர்களாகவோ அல்லது இயற்கை நண்பர்களாகவோ இருந்து நற்கோள்களால் பார்க்கப்பட்டால் தாயார் நட்பு ஏற்படும்.

**குறைந்த ஆயுளுடைய தாயார் யோகம்**

1. சந்திரன் தீய கோள்களுடன் இணைந்தோ அல்லது பார்வை பெற்றோ உள்ள சாதகரின் தாயார் ஆயுள் குறைவுடையதாகும்.
2. நான்காம் பாவக அதிபதி நின்ற நவாம்ச அதிபதிக் கோள் ராசியில் 6,8, 12 ல் இருந்தால் சாதகரின் தாயார் ஆயுள் குறைவானதாகும்.

**நேரடி வாரிசு இல்லாத யோகம்**

இலக்கின அதிபதி 5 ம் பாவக அதிபதி, 7 ம் பாவக அதிபதி மற்றும் வாரிசு காரகக் கோளான குரு ஆகிய நான்கும் வலிமையற்று இருந்தால் சாதகருக்கு குழந்தை இல்லை.

**சர்ப்ப சாபயோகம்**

1. ஐந்தாம் பாவகத்தில் ராகு இருந்து செவ்வாயால் பார்க்கப்பட்டாலும் அல்லது ஐந்தாம் பாவகம் செவ்வாயாகி (கடகம், தனுசு, லக்கினம்) அதில் ராகு இருக்க சாதகரின் குழந்தை சர்ப்ப சாபத்தினால் இறந்து போகும்.
2. ஐந்தாம் பாவக அதிபதி ராகுவுடன் இணைந்திருக்க, 5ல் சனி இருந்து, சந்திரனுடைய பார்வையோ அல்லது இணைவையோ பெற்றிருந்தால் சாதகரின் குழந்தை இறந்து போகும்.

3. புத்திரகாரகன் (வியாழன்) செவ்வாயுடன் இணைந்திருக்க, இலக்கினத்தில் ராகுயிருந்து ஐந்தாம் பாவக அதிபதி 6,8,12 ஆகிய பாவகங்களில் இருந்தால் சாதகரின் குழந்தை இறந்து போகும்.
4. ஐந்தாம் பாவகம் செவ்வாயாகி, அதில் ராகு இருந்து அக்கோளுடன் புதன் இணைந்தோ அல்லது பார்த்தோயிருந்தால் சாதகரின் குழந்தை இறந்து போகும்.

**தந்தையின் சாபத்தினால் புத்திர நாசம் ஏற்படும் யோகம்**

சூரியன் 5ல் நீசமாகி இருந்தாலும் அல்லது சூரியன் நவாம்சத்தில் மகரம், கும்பம் ராசிகளில் இருந்தாலும் அல்லது தீயகோள்களின் தொடர்புடன் இருந்தாலும் சாதகரின் குழந்தை அவரது தந்தையின் சாபத்தினால் இறந்து போகும்.

**தாயாரின் சாபத்தினால் குழந்தை இல்லாத யோகம்**

ஐந்தாம் பாவக அதிபதி 8ல் இருந்து, சந்திரனும் நான்காம் பாவக அதிபதியும் 6ல் இருந்தால் தாயாரின் சாபத்தினால் குழந்தை இல்லாமல் போகலாம்.

**உடன்பிறப்பு சாபத்தினால் குழந்தையில்லா யோகம்**

மூன்றுக் குடையவரும் செவ்வாய், ராகுவும் இணைந்து 5ல் இருக்க, இலக்கினாதிபதியும் 5க்குடையவரும் இணைந்து 8 ல் இருந்தால் உடன்பிறப்பு சாபத்தினால் குழந்தை இறந்து போகும்.

**பிரேத சாப யோகம்**

சூரியனும், சனியும் இணைந்து 5ல் இருக்க, பலம் குன்றிய சந்திரன் 7 ல் இருக்க, இராகு லக்கினத்திலும், குரு 12 லும் இருக்க பிறந்த சாதகரின் குழந்தைகள் பிரேத சாபத்தினால் இறந்து போகும்.

**சோம்பல் அறிவு பெற்ற யோகம்**

ஐந்தாம் பாவகத்தில் சனியிருந்து லக்கினாதிபதியை பார்க்க, இலக்கினாதிபதி மற்ற தீயவர்களுடன் இணைந்தோ அல்லது பார்வை பெற்றோயிருந்தால் சாதகர் சோம்பலுடையவராவார்.

**வேறு ஆடவரினால் குழந்தை பெறுதல்**

வலிமை வாய்ந்த ஐந்துக்குடையவரும், 7க்குடையவரும் இணைந்து 6ம் அதிபதியுடன் சேர்ந்திருக்க, இக்கோள்களை நற்கோள் பார்த்தால் இந்த சாதகரின் மனைவி வேறு ஆடவருக்கு குழந்தையை பெற்றெடுப்பாள்.

**நேர்மையான மனைவியோகம்**

ஏழாம் பாவக அதிபதியோ அல்லது சுக்கிரனோ, குரு அல்லது புதனுடன் இணைந்தோ அல்லது இக்கோள்களின் பார்வையோ பெற்றிருப்பின் நேர்மையான மனைவி வந்து அமைவாள்.

**தந்தை இறந்தபின்னர் பிறக்கும் நிலை**

சூரியன் **6, 8, 12**ல் ஏதாவது ஒன்றில் இருக்க, **8**க்குடையவர் **9**ல் யிருக்க, **12**க்குடையவர் லக்கினத்திலிருக்க, ஆறுக்குடையவர் **5**ல் யிருக்கப் பிறந்த சாதகர் பிறக்கும் பொழுது தந்தை இறந்து இருப்பார்.

**பலதார யோகம்**

இலக்கினாதிபதி, ஏழக்குடையவரும் இணைந்து இருந்தாலோ அல்லது ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டாலோ சாதகர் பல பெண்களை மணந்து கொள்வார்.

**உணர்ச்சியற்ற மனைவி யோகம்**

ஏழக்குடையவர், 6க்குடையவருடன் இணைந்திருக்க இவர்களுடன் சுக்கிரனும் சேர்ந்திருந்தால் சாதகரின் மனைவி உடலுறவில் ஈடுபாடுடன் இருக்கமாட்டாள்.

**தலை வெட்டப்படும் யோகம்**

6ஆம் பாவக அதிபதியும் சுக்கிரனும் இணைந்திருக்க, சூரியனோ அல்லது சனியோ, ராகுவுடன் இணைந்து குரூர சஷ்டி அம்சத்தில் இருந்தால் சாதகரின் தலை வெட்டப்பட்டு இறப்பார்.

**சிறையிலிருக்கும் யோகம்**

இலக்னாதிபதி 6 க்குடையவர், சனி ஆகிய மூவரும் இணைந்து கேந்திர திரிகோணத்தில் இருந்து ராகுவும் கேது இணைந்திருந்தால் அச்சாதகருக்கு சிறை வாசம் ஏற்படும்.

**மனைவி, மக்களைப் பிரியும் யோகம்**

தேய்பிறைச் சந்திரன் 5ல் இருக்க, தீய கோள்கள் இலக்னம், 7ம் பாவகம் மற்றும் 12ம் பாவகத்திலிருக்க பிறந்ம சாதகர் மனைவி மக்களைப் பிரிந்து வாழ்வார்.

**விபாசாரத்தொழில் யோகம்**

செவ்வாய், சுக்கிரன், சனி ஆகிய மூவரும் சந்திரனுடன் இணைந்து 7ல் இருக்கப் பெற்ற சாதகர் கணவன், மனைவி இருவரும் விபசாரர்கள் ஆவார்கள்.

**மிருகக் கொலையாளி யோகம்**

குரு 8ம் பாவகத்திலிருக்க, தீய கோள்கள் கேந்திரங்களில் இருந்து நற்கோளின் பார்வை பெறாமல் இருந்தால் மிருகக் கொலைகாரர் ஆவார்.

**மரண நட்சத்திர திசா யோகம்**

அற்ப வயதுள்ளவன் ஜென்ம நட்சத்திரத்திற்கு மூன்றாவது நட்சத்திர தசாவிலும். மத்திம வயதுடையவன் 5 ஆவது நட்சத்திர தசாவிலும். பூரண வயதுடையவன் ஏழாவது நட்சத்திர தசாவிலும் மரணம் அடைவர்.

**மரண இராசி**

இலக்கினம், குளிகன், எமகண்டன், காலமறிந்து ஆகிய நான்கையும், கூட்டிக்கண்ட இராசி மாதமே சாதகன் இறப்பான். இந்த நான்கையும் கூட்டும் வகையோடு குளிகன் இருந்த நட்சத்திர காலத்தையும் அறிய வேண்டும்.

**மரண நட்சத்திரம்**

குளிகன் நின்ற பாகையையும். அதற்குரிய இடைவெளிப் பாகையையும் கணக்கிட்டு அதை அசுவினி நட்சத்திரத்தில் மேச இராசியில் இருந்து கணக்கிட்டு, எந்த நட்சத்திரமாக வருகின்றதோ அந்த நட்சத்திரத்தில் இறப்பு நிகழும்.

**மரண இலக்கினம்**

குளிகன் நின்ற பாகையை அறிந்து அது நின்ற நட்சத்திரத்திற்கும், அசுவினியிலிருந்து எத்தனை பாகை எனக் கணக்கிட்டு முன்பு சொன்ன நான்கையும் கூட்டி (இலக்கினம், குளிகன், எமகண்டன் குளிகன் காலமறிந்து) வந்த பாகையுடன் கூட்ட வரும் பாகைக்குரிய இராசியே மரண இலக்கினமாகும்.

**மரண யோகம் (தசாவும் இறப்பும்)**

1, 8, 11 அதிபதிகள் இணைந்து 11 ல் பாவிகளுடன் இருக்க, 11 ஆம் அதிபதியின் தசாவில் சாதகன் துன்பத்துடன் உயிர் விடும் நிலையில் பலர் அருகில் இருப்பார். இவருக்கு 11ம் அதிபதி தசாவே மரண தசாவாகும்.

**தன் ஊரில் மரணம்**

4, 8 க்குரியவர்கள் இணைந்து 4ல் இருக்க தன் வீட்டில் (தந்தை வசிக்கும் ஊரில்) இறப்பான். இந்த இணைவு 6, 12 களில் இருக்க தூர ஊர்களில் உயிரிழப்பான்.

**அந்நிய தேச மரணம்**

1, 4 ம் அதிபதிகள் கூடியிருக்க, எட்டாம் அதிபதியும், கேதுவும் கூடி 12 ல் இருந்தால் அந்நிய தேச மரணமாம்.

**கோட்சார சனி தரும் கண்டம்**

பகலில் பிறந்தவனுக்கு குளிகன் இருக்கும் இராசிக்கு 5, 9 களில் சனி கோட்சாரத்தில் வரும் காலமும், இரவில் பிறந்தவனுக்கு குளிகன் இருக்கும் இராசிக்கு 7ம் வீட்டிற்கு 5, 9 களில் கோட்சாரச்சனி வரும் காலங்களில் கண்டமுண்டாகும்.

**விபத்து யோகம்**

8 க்குரியவர் 4ம் அதிபதியுடன் இணைந்து 6 , 8 , 12 களில் இருந்தாலும், நீசம் பெற்றாலும் பகை வீட்டிலிருந்தாலும் விபத்துக்கள் ஏற்படும்.

**வயிற்றுவலி**

எட்டிற்குரியவர் நீசம் பெற்றாலும் 6, 8, 12 பாவகங்களுக்கு இராகுவின் தொடர்பு ஏற்பட்டாலும் கடுமையான வயிற்று வலி உண்டாகும்.

**கை, கால், ஊனநிலை**

எட்டிற்குரியவர் குளிகனுடன் சேர்ந்து 6, 8, 12 பாவகங்களில் இருந்தால் இத்திசை நடைபெறும். காலத்தில் நன்றாக நடந்த கால்களும் கைகளும் முடக்கமாகி துன்புறும் கொடிய நோய் தாக்கும். நற்கோள்களின் பார்வை ஏற்படுமாயின் ஊனமடைந்த நிலைகள் வாழ்வார்.

**அரிட்ட காலம்**

சூரியன் நின்ற பாகையையும் குளிகன் நின்ற பாகையையும், கூட்டிக் கண்ட இராசியில் சூரியன் கோட்சாரப்படி வரும் பொழுது சாதகனுக்கு நோய் ஏற்படும். சந்திரன் நின்ற பாகையையும் குளிகன் நின்ற பாகையையும் கூட்டிக் கண்ட இராசியில் கோட்சாரச் சந்திரன் வரும் நாளில் சாதகருக்கு நோய், பீடைகள், அரிட்டம் உண்டாகும்.

**இயற்கைக்கு மாறான இறப்பு ஏற்படும் யோகம்**

இலக்கினாதிபதியால் பார்க்கப்பட்ட சந்திரன் 6, 8ல் அல்லது 12ல் இருந்து சனி மாந்தி இணைவோ அல்லது இராகுவின் இணைவோ பெற்றால் சாதகர் இயற்கைக்கு மாறான இறப்பை அடைவார்.

**தற்கொலை யோகம்**

சந்திரனும், கேதுவும் சேர்ந்து 6, 8, 12 ஆகிய இடங்களிலிருந்து, சுபர்கள் பார்வையோ, இலக்கினாதிபதி பார்வையோ இல்லாமல் இருந்து, இலக்கினாதிபதியும் பலவீனமாக இருந்தால் தற்கொலை செய்து கொள்வார்.

**நோயின் குண யோகம்**

8ம் இடத்தில் சூரியன் இருக்கப் பிறந்தவனுக்கு சுரத்தால் துன்பம். 8ல் சந்திரன் இருந்தால் நீரினால் கண்டமும், 8ல் செவ்வாய் இருப்பின் ஆயுதங்கள், நெருப்பினால் ஆபத்து, கண்டமும் ஏற்படும். 8ல் புதன், இருப்பின் நரம்புத் தளர்ச்சி ஏற்படும். 8ல் குரு இருப்பின் கொழுப்பு சம்பந்தப்பட்ட நோயும், மாரடைப்பால் திடீர் மரணமும் ஏற்படும். 8ல் சுக்கிரன் இருப்பின் காம நோய்களும், செல்வ நிலையில் ஏற்றத் தாழ்வும் வறுமையும் தரும். 8ல் சனி இருப்பின் ஆயுள் நீளும்.

**கண்நோய்**

எட்டில் சுக்கிரன் இரண்டாம் அதிபதியாகி நிற்க, சூரியன் 6ல் இருக்கப் பிறந்தவனுக்கு கண்நோய் ஏற்படும்.

**மிருகக் கொலையாளி யோகம்**

குரு 8ம் பாவகத்திலிருக்க, தீய கோள்கள் கேந்திரங்களில் இருந்து நற்கோளின் பார்வை பெறாமல் இருந்தால் மிருகக் கொலைகாரர் ஆவார்.

**படைக்களத்தில் இறப்பு ஏற்படும் யோகம்**

ஆறுக்குடையவராகவோ அல்லது எட்டுக்குடையவராகவோ செவ்வாய் இருந்து, அக்கோள் 3க்குடையவர், இராகு, சனி ஆகிய கோள்களுடைய இணைவைப் பெற்றாலோ அல்லது மாந்தி தீய கோளின் இராசியில் இருந்தாலோ சாதகர் படைக்களத்தில் இறந்துபோவார்.

**பல்வேறு வகையான இறப்பு ஏற்படும் யோகம்**

தீய கோள்கள் எட்டாம் பாவகத்தில் இருக்க அவர்கள் தீய இராசிகளிலோ தீய நவாம்சத்திலோ இருந்து அதே போல் மற்ற பிரிவுகளிலும் தீய இராசிகளிலும் இருந்தால் பல வகையில் இறப்பு ஏற்படும்.

**பெண்களால் இறப்பு**

லக்கினம் கன்னியாகி அதில் பாவர் இருக்க, மீனத்திலும் பாவிகள் இருக்க, 8ல் சந்திரனும், சுக்கிரனும் இருக்க பெண்கள் கொடுமையால் இறப்பான்.

சூரியனும் செவ்வாயும் ஏழில் இருக்க, சனி 8ல் இருக்க சந்திரன் 4ல் இருக்க பெண்களால் தன் வாழ்நாளை அழித்துக் கொள்வான்.

**பகைவர் கொடுமையால் இறப்பு**

சூரியன், சனி, செவ்வாய், தேய்பிறைச் சந்திரன் ஆகியவை சேர்ந்து, 1, 5, 9ல் ஒன்றில் இருக்க, இக்கூட்டினை சுபர் பார்க்காவிடில், தன் பகைவர்களால் சுட்டும், விஷப்புகை மூலம், அல்லது அடித்து உதைக்கப்பட்டும் இறப்பான்.

**கிருமிகளால் இறப்பு**

8ல் செவ்வாய், சனி, சூரியன் இருக்க, 1ல் புதன் இராகு தேய்பிறைச்சந்திரன் இருக்க புண்களால் உடல் புழுத்து இறப்பார்.

**சூனிய இறப்பு**

10ல் சூரியனும், 6ல் செவ்வாயும், 12ல் சனியும், 2 இல் இராகுவும் இருந்தால் பகைவரின் பில்லி சூனிய ஏவல் குணங்களால் உடலில் குளிர்ச்சிக்கட்டிகள், உண்டாகி வருத்தமும் கவலையும், அடைவான். உடல் உறுப்புக்கள் நாளுக்கு நாள் செயலிழந்து மெலிந்து இறந்து போவான்.

**மனைவி, நெருப்பு, பாம்புகடி இறப்பு**

4ல் சுக்கிரனும், 8ல் பாவிகளும் நற்கோளின் பார்வை பெறாமல் இருந்தால் நெருப்பு, மனைவி, பாம்புகடி, இவற்றின் மூலம் இறப்புண்டாகும்.

**கொடியவர்களால் உயிர் இழப்பு**

8ம் அதிபதியும், செவ்வாயும் 6, 12ல் ஒன்றில் இருந்தால் கொடியவர்கள் வைத்திருக்கும் கத்தி, வாள் முதலிய கருவிகளால் வெட்டுண்டு உறுதியாய் உயிரிழப்பான்.

**கால் வெட்டுப்படும் யோகம்**

8ம் அதிபதியாவது, இலக்கினாதிபதியாவது குளிகனுடன் ( மாந்தி ) கூடி 6, 8, 12ல் இருந்தால் நடக்கும் கால்களில் ஒன்று இரண்டு துண்டாகும்படி வெட்டப்படும், அல்லது விபத்தால் கால் துண்டாகும்.

**உடல் வெட்டுப்படும் யோகம்**

சூரியன் இலக்கினத்திலும், செவ்வாய் 8லும் இருக்க, தேய்பிறைச் சந்திரனும் இராகுவும் சேர்ந்திருக்க, அவன் உடல் வெட்டப்பட்டு இறப்பான்.

சந்திரன், இராகுவுடன் இருக்க, கேது, சூரியன் இரண்டும் பாதசாரங்களின் படி ஒரே நட்சத்திர காலிலும் இருக்கச் சாதகன் உடலானது இரண்டு துண்டாகும்.

இலக்கினத்தில் சனி இருக்க, சந்திரன். இராகு அல்லது கேது. சூரியன் ஆகியவை சேர்ந்திருக்க உடல் வெட்டப்பட்டு இறப்பார்.

சூரியன் தேய்பிறைசந்திரன் இணைந்து 8ல், செவ்வாய் 12ல், அந்த சந்திரனை சனி பார்க்க உடல் பிளவுபடும்.

1ல் தேய்பிறைசந்திரன், 8ல் சூரியன், செவ்வாய், சனி இருக்க அரிவாளால் வெட்டப்பட்டு உடல் துண்டாகும்.

**நோயால் உயிரிழப்பு யோகம்**

8ம் அதிபதி பகைவீட்டில் நீசத்தில் இருக்க, இலக்கினத்தில் பாவிகள் இருக்க, இலக்கினாதிபதி பாவிகளுடனும், குளிகனுடனும் இருக்க, 6ல், சந்திரனும், 12ல் சனியும் இருக்கச் சாதகன் நோயால் உயிரிழப்பான்.

**அற்ப ஆயுள் நிலை**

நற்கோள்கள் 8ம் வீட்டிற்கு 8ல், அதாவது இலக்கினத்திற்கு மூன்றில் நிற்கில் சாதகனுக்கு அற்ப ஆயுள்.

**தூக்கமின்மை யோகம்**

சனி, செவ்வாய், இராகு, அல்லது கேது 12இல் இருப்பது மன அமைதியைக் கெடுக்கும், தூக்கத்தை கெடுத்து விடும்.

**படுக்கை சுகமின்மை யோகம்**

12க்குரியவர் பாவிகளின் சேர்க்கைபெற்று இருக்க, அம்சத்தில் பகை வீட்டில் இருந்து கெட்டாலும், படுக்கைச் சுகம் இருக்காது.

**தேச சஞ்சார யோகம்**

12ல் குரு இருக்க, 1ல் சந்திரனிருக்க, சனி கேந்திரம் பெற்று பிறந்தவனுக்கு சஞ்சாரயோகம் உண்டாகும். பிச்சை எடுப்பான்.

இலக்கினாதிபதி 6, 8, 12 களில் இருந்து அவற்றை தீய கோள்கள் பார்த்தால் பலநாடுகளைச் சுற்றித் திரிந்திடுவான்.

**உடல் ஊனம் யோகம்**

சந்திரன் 6ல், அல்லது 12ல் இருக்க, செவ்வாய் 2லிருக்க இவற்றிற்கு தீயவர்களின் தொடர்பு ஏற்படுமாயின் உடலில் ஊனம் உண்டாகும்.

**செல்வ இழப்பு யோகம்**

11ம் அதிபதி 12லும், 12ம் அதிபதி 2லும், 2ம் அதிபதி வலுவற்றும் இருப்பின் சாதகனுடைய செல்வங்கள் அரசால் பறி முதல் செய்யப்படும். **செல்வத்தை அரசு கைப்பற்றும் யோகம்**

12ம் அதிபதி 2லும், 2ம் அதிபதி 12லும் பரிவர்த்தனை பெற, இலக்கினாதிபதி வலுவிலக்க சாதகன் செல்வத்தை அரசு கைக்கொள்ளும்.

**செல்வத்தை திருடர்கள் கைப்பற்றும் யோகம்**

இலக்கினாதிபதியும், இரண்டாம் அதிபதியும், அம்சத்தில் இரண்டாம் அதிபதி உள்ள வீட்டின் அதிபதியும், கூடி வலுவற்று இருக்கப் பிறந்தவன் தான் தேடி வைத்துள்ள செல்வம், மனை, மாடு, பூமி போன்ற உடமைகளை திருடராலும், நெருப்பாலும் அரசாலும் இழப்பான்.

12ம் அதிபதி, இலக்கினாதிபதியுடன் கூடி 7 இல் இருக்க சேர்த்துவைத்துள்ள பொன், நகைகள், தானிய வகைகள் போன்றவற்றை அந்நியர் கைப்பற்றிக் கொள்வர்.

**ஐம்பதாவது வயதில் செல்வ இழப்பு யோகம்**

10ஆம் அதிபதி பாவியாகி வலுவற்று 12இல் இருக்கச் சாதகனின் 50வது வயதில் அவன் சேர்த்து வைத்திருந்த செல்வங்கள் அனைத்தும் கைவிட்டுப் போகும்.

**சகோதரர் மற்றும் குழந்தைகள் மூலம் செல்வ இழப்பு**

12ஆம் அதிபதி செவ்வாயுடன் கூட, சகோதரர்களால் பொருள் இழப்பு உண்டாகும். (பாகப்பிரிவினையில் நஷ்டம் ஏற்படும் ) 12க்குரியவர் 5க்குரியவருடன் கூடி, வலுவற்று அம்சத்தில் பகை வீட்டில் இருக்கப் பிள்ளைகள் மூலம் பொருள் அழிவுவரும்.

**தாய் வழி மூலம் செல்வ இழப்பு யோகம்**

9, 12ம் அதிபதிகள் கூடி, அதை 6 ஆம் அதிபதி பார்க்க, தந்தை வர்க்கத்தினரால் பொருள் இழப்பு ஏற்படும். 4, 12 ஆம் அதிபதிகள் கூடப் பாவிகள் பார்க்க அன்னை வழி உறவினரால் பொருள் இழப்பு வரும்.

**பூர்வீக சொத்து அழியும் யோகம்**

இலக்கினாதிபதி 12இல் இருப்பது ஏழ்மையைத் தரும். 5ல் ராகு, அல்லது கேது, சனியுடன் கூடியிருக்க, பூர்வீகச் சொத்து அழிந்துவிடும்.

**வீண் செலவு யோகம்**

2 ஆம் அதிபதி 12இல் இருப்பது வீணான செலவுகளைத் தரும். **நற்பெயர் இல்லா யோகம்**

12ம் அதிபதி சூரியனுடன் கூட, 12ம் அதிபதி 2ல் இருக்க, 11ம் அதிபதி 8ல் இருக்க செல்வம் அனைத்தும் அழிந்து சேதமாகும், நற்பெயரும் இல்லாது வாழ்வான். சூரிய சந்திரர் 12ல் இருப்பின் அரசாலும், செவ்வாய் 12ல் வலுவற்று இருக்க நற்பெயர் இல்லாது போகும்

**மது மாது வழிச் செலவு யோகம்**

12ம் அதிபதி பாவியாகி அதைப் பாவிகள் பார்க்க, அல்லது சேர அச்சாதகன் தான் சேர்த்து வைத்துள்ள செல்வங்களை இழிவான தொழில் செய்பவர்களுக்கு கொடுத்து அவர்களால் கூறப்படும் பாராட்டினைக் பெறுவான்.

**படைக்களத்தில் இறப்பு ஏற்படும் யோகம்**

ஆறுக்குடையவராகவோ அல்லது எட்டுக்குடையவராகவோ செவ்வாய் இருந்து, அக்கோள் **3**க்குடையவர், ராகு, சனி ஆகிய கோள்களுடைய இணைவைப் பெற்றாலோ அல்லது மாந்தி நவாம்சத்தில் தீயகோளின் ராசியில் இருந்தாலோ சாதகர் படைக்களத்தில் இறந்து போவார்.

**பல்வேறு வகையான இறப்பு ஏற்படும் யோகம்**

தீய கோள்கள் எட்டாம் பாவகத்தில் இருக்க, அவர்கள் தீய ராசிகளிலோ அல்லது தீய நவாம்சத்திலோ இருந்து அதே போல் மற்ற பிரிவுகளிலும் தீய ராசிகளிலும் இருந்தால் பல வகையில் இறப்பு ஏற்படும்.

## 3. நோய்க்கான யோகங்கள்

**காதுவலி யோகம்**

மூன்றாம் பாவகத்தில் மாந்தியும், ராகுவும் இருந்தாலும், அல்லது செவ்வாய் சஷ்டி அம்சத்தில் பிரேதபுரிக அம்சத்தில் இருந்தாலும் சாதகருக்கு காதுவலி ஏற்படும்.

**காமநோய்கள்**

இலக்கினத்தில் புதன் இருந்து, அக்கோளுடன், 6, 8 க்குடைய கோள் இணைந்திருந்தால் காமநோய்கள் ஏற்படும்.

**குஷ்ட நோய் யோகம்**

1. இலக்கினாதிபதி 4லிலோ அல்லது 12லிலோ யிருந்து அக்கோளுடன் செவ்வாயும், புதனும் இணைந்திருந்தால் சாதகருக்கு குஷ்ட நோய் ஏற்படும்.
2. ஆறாம் பாவகத்தில் குருயிருந்து அக்கோளுடன் சந்திரனும், சனியும் இணைந்திருந்தால் சாதகர் குஷ்டநோயுடையவராவார்.

**காசநோய் யோகம்**

இலக்ன கேந்திரத்தில் மாந்தியிருக்க, லக்னாதிபதி 8ல் இருக்க, ராகுவும் 6ல் இருந்தால் சாதகர் காச நோயாளியாக இருப்பார்.

**குக்ய நோய் யோகம்**

சந்திரன் தீயவர்களுடன் இணைந்து கடக நவாம்சத்திலோ அல்லது விருச்சிக நவாம்சத்திலோ இருக்கப் பெற்ற சாதகருக்கு உடலின் மறைவுப் பகுதிகளில் நோய் ஏற்படும்.

**உடல் உறுப்பு குறைவு ஏற்படும் யோகம்**

சூரியனிற்கு 2ல் சனியிருந்து, செவ்வாய் 7லும், சந்திரன் 10லும் இருக்கப் பிறந்த சாதகருக்கு உடல் ஊனம் ஏற்படும்.

**வெண்குஷ்ட நோய் யோகம்**

இலக்னத்தில் சந்திரன், 7ல் சூரியன், 2ல் செவ்வாய், 12ல் சனி இருக்கப் பிறந்தவர் வெண்குஷ்ட நோயினால் துன்பப்படுவர்.

**பேய் பிடிக்கும் யோகம்**

இராகு இலக்னத்தில் இருந்து, இவருடன் சந்திரன் இருக்க, 5, 9ல் (திரிகோணத்தில்) தீயகோள்கள் இருந்தால் பேய் பிடிக்கும்.

**பிறவிக்குருடு யோகம்**

இலக்னத்தில் சூரியன், ராகுவுடன் இணைந்திருக்க, தீய கோள்கள் திரிகோணத்தில் இருக்கப் பெற்ற சாதகர் பிறவியிலேயே குருடராகயிருப்பார்.

**வாத நோய் யோகம்**

இலக்னத்தில் குருயிருந்து, 7ல் சனியிருக்கப் பிறந்தவருக்கு வாதநோய் ஏற்படும்.

**ஆசன நோய் யோகம்**

இலக்கினாதிபதி, புதன் அல்லது செவ்வாய் ஆகி, மிதுனம், கன்னி இராசிகளில் ஒன்றில் இருக்க, அதைப் புதன் பார்க்க ஆசன வியாதி உண்டாகும்.

**நீரிழிவு நோய் யோகம்**

3, 10 ஆம் அதிபர்களைச் சந்திரன் பார்த்தாலும், இணைந்தாலும், இணைந்து ஒற்றை இராசிகளில் ஒன்றில் நின்று, நின்ற இராசிக்கு 10ம் அதிபதி எதுவோ அதன் தசா வருவதற்குள் சாதகனுக்கு நீரிழிவு நோய் ஏற்படும்.

நீரிழிவைக் குறிக்கும் கோள் சுக்கிரன் இந்நோய் மெல்லமெல்ல உயிரைக் குடிக்கும் நோயாகும். இன்று பெரும்பான்மையோருக்கு இந்நோய் காணப்படுகிறது.

மேசம், துலாம், விருச்சிகம் ஆகிய இராசிகளில் சூரியன், குரு, சுக்கிரன் ஆகிய கோள்கள் இருப்பது.

குரு துலாத்தில் இருந்து, இராகு அல்லது சனியுடன் தொடர்புபடுவது. செவ்வாயால் பார்க்கப்படுவது.

புதனும், சூரியனும் மீனத்தில் இருப்பது. குரு வீட்டிலுள்ள, புதன் சூரியனுடன் தொடர்புபடுவது.

இராகு கேதுக்களும் சனியும் கடகம், விருச்சிகம், மீனங்களில் இருப்பது.

7மிடத்தில் சந்திரன், பாவிகள் இணைய வெகு மூத்திரம் போகும்.

மிதுனலக்னமாகி, புதன் கேந்திரமும், சுக்கிரன் பாவவர்க்கமும் பெற்று 6 ஆம் இராசி ஜலராசியாகி அதில் செவ்வாயும். சுக்கிரனும், இருந்து, குரு பாவிகளுடன் கூடி இருப்பின் சிறுநீர் அதிகமாகப் போகும்.

**சிறு நீரகக் கல்லடைப்பு யோகம்**

1, 3ம் அதிபதியுடன் புதனும் செவ்வாயும் கூடினால் சிறுநீர் போகும் துவாரம் இரண்டாக இருக்கும். இவற்றுடன் சனி நட்பு பெற்றுச் சேர்ந்தால் சிறுநீர் பாதையில் கல்லடைப்பு உண்டாகும்.

**தீராத நோய் யோகம்**

சந்திரன் தீயவற்றுடன் சேர்ந்து, தீயவற்றில் நடுவில் இருக்க, லக்கினாதிபதியும் வலுவற்று இருக்க, எந்நாளும் நோயினால் கஷ்டப்படுவார். ஏதாவதொரு நோய் இருந்து கொண்டே இருக்கும்.

இலக்கினாதிபதி தீயவற்றுக்கிடையே இருக்க அல்லது இலக்கினத்தில் பாவிகளும் சந்திரனும் வலுவற்று இருக்க, ஏதாவதொரு நோய் இருந்து கொண்டே இருக்கும்.

6 – ல் சனி, செவ்வாய் இருக்க, சூரியன் இராகு இவற்றைப் பார்க்க, இலக்கினாதிபதி வலுக்குறைய தீராத நீண்டகால நோய் உள்ளவன்.

**கட்டி, புண், ஏற்படும் யோகம்**

6, 8ம் அதிபதிகள் இராகுவுடன் கூடி 2ல் இருக்க, செவ்வாய் இலக்கினத்தில் இருக்க, தீயகோள்கள் இதைப் பார்க்க, உடலில் கட்டிப் பிளவையும். புண்களும் உண்டாகிச் சாதகன் துன்புறுவான்.

8ல் சனியும், 3ல் செவ்வாயும் இருப்பின் 30 அல்லது 35 வயதில் பிளவை, புண்கள் உண்டாகிச் சாதகன் துன்புறுவான்.

**வெண்குஷ்ட யோகம்.**

இலக்கினாதிபதி, இராகு, சந்திரன், செவ்வாய், புதன் 1 – 6 ஆம் பாவகங்களில் இருந்தால் வெண்குஷ்டம் வரும்.

**செங்குஷ்டம்**

இலக்கினாதிபதி சூரியன், செவ்வாய், புதன் 6 – 8 ஆம் பாவகங்களில் சேர்ந்து இருந்தால் உடலில் சிவப்பான தடிப்பை ஏற்படுத்தும் செங்குஷ்டம் வரும்.

வெண்குஷ்டம் செங்குஷ்டம் என்பது, தேமல், படை போல் உடலில் உண்டாகும். இரண்டும் தோல் நோய்களாகும். வெண்குஷ்டத்தால் தோலின் நிறம் ஒரு சில பகுதியிலோ, உடல் முழுவதுமோ வெள்ளையாக மாறும், இந்நோய்க்கு செவ்வாயும் இராகுவும் காரகர்கள்.

இலக்கினாதிபதியும், புதனும் இராகு கேதுக்களுடன் கூடி இருப்பின் இந்நோய் உண்டாகும். இவற்றுடன் ஆட்சி, பெற்ற கோள் சேர்ந்திருந்தால் வெளியே தெரியாத மறைவிடங்களில் தோன்றும்.

சந்திரனும், இராகுவும் அல்லது சந்திரனும் சனியும் இலக்கினத்தில் இருந்தாலும் இந்நோய் ஏற்படும்.

6 – ம் அதிபதி இலக்கினத்தில் இருந்து சனி அல்லது செவ்வாயின் தொடர்பு பெற்றாலும் இந்நோய் ஏற்படும்.

**காலில் குஷ்ட நோய் யோகம்**

சனியும், இராகுவும், இலக்கினாதிபதியும் சேர்ந்து 6 – 8 களில் இருந்து நீசம், பகை என வலு இழந்தால் கால்களில் குஷ்ட வியாதி உண்டாகும்.

**காச நோய் யோகம்**

குரு தீயவற்றுடன் சேர்ந்து 2 – 6 – 8 களில் ஒன்றில் இருக்க இவற்றைப் பாவிகள் பார்க்க, இலக்கினத்தையும் பாவிகள் பார்கக காசநோய் உண்டாகும். தேய்பிறைச் சந்திரன் தீயவற்றுடன் சரராசியில் 1 – 6 – 8 களில் ஒன்றில் இருந்தால் இந்நோய் உண்டாகும்.

இராகு 6 இல், சனி கேந்திரத்தில் இலக்கினாதிபன் 8 இல் இருந்தால் 26 ஆவது வயதில் காசநோய் வரும்.

இராகு 6 – இல் இருக்க, சந்திரனும் மாந்தியும் கூட 12, 19 வயதுகளில் காசநோய் வரும்.

இராகு 6 – இல் இருக்க, சந்திரன் மாந்தியுடன் கூட, இலக்கினாதிபதி 8 இல் இருக்க 36 வயதில் காசநோய் வரும்.

6 – இலுள்ள செவ்வாய் புதன்களைச் சுக்கிரனும் சந்திரனும், பார்க்க, புதனும் செவ்வாய் குரு அம்சத்தில் இருந்தாலும் காசநோய் வரும்.

குளிகன், சனி கூடி 6– இல் இருக்க, அவற்றைச் சூரியன், செவ்வாய், இராகு, ஆகியவை பார்க்க காசநோய் வரும்.

**விரைவீக்கம் யோகம்**

விருச்சிகமும், 8 – ஆம் பாவமும் விரையைக் குறிக்கும். இலக்கினத்தில் இராகுவும், 3 – இல் சனியும் இருகக் விரைவீக்கம் உண்டாகும். விரையில் பை போன்ற உறுப்பில் நீர் இறங்குவது வரை வீக்கத்திற்குக் காரணமாகும்.

**தலையில் புண்**

இலக்கினாதிபதியும், சனியும், சேர்ந்து 6 – 8 – 12 களில் ஒன்றில் இருந்தால் தலையில் புண் ஏற்படும்.

**தலை வெட்டப்படும் யோகம்**

குருவும், சுக்கிரனும் 6 – இல் இருந்து அவற்றைச்சனி பார்க்க, இராகு இலக்கினத்தில் இருக்க, அந்த இராகு இலக்கினாதிபதிக்கு நட்பாக அல்லது உறவாகத் தலை வெட்டப்படும்.

6 – ஆம் பாவக அதிபதியும் சுக்கிரனும் இணைந்திருக்க சூரியனோ அல்லது சனியோ, இராகுவுடன் இணைந்து குரூர சஷ்டி அம்சத்தில் இருந்தால் சாதகரின் தலை வெட்டப்பட்டு இறப்பார்.

**வயிற்றுவலி மற்றும் பயயோகம்**

சனியும், இராகுவும் இலக்கினத்தில் இருந்தால் பேய் முதலிய துஷ்ட கிரகங்களால் பீடிக்கப்பட்டுத் துன்பப் படுவான்.

அமாவாசை திதியில் பிறந்து, செவ்வாய் பார்க்க அடிவயிற்றில் நோயுண்டாகும்.

சனி இலக்கினத்தில் இருக்க அதைச் சூரியனும் இராகுவும் சேர்ந்து பார்கக ஆயுதங்களால் காயமுண்டாகி அதனால் வயிற்றில் நோய் உண்டாகும்.

**பல்வலி யோகம்**

இராகுவும், அது உள்ள நட்சத்திரத்தின் அதிபதியும், 6 – ஆம் அதிபதியும். வலிமை பெற்று நிற்க, 2 – ஆம் அதிபதியின் தசாவில் அதற்கு ஏற்படும் புத்தி நாட்களில் அவனுக்குக் கடுமையான பல்வலி உண்டாகும். (மூன்றும் புதன் வீட்டில் இருந்தால் பல்வலி எப்போதும் இருக்கும். அவற்றைச் சுபர் பார்த்தால் பலநோய் குணமாகும்.

**பீனிச நோய் ஏற்படும் யோகம்**

சந்திரன் 6 – இல் சனி, 8 – இல் 12 – இல் தீ கோளில் ஏதேனும் ஒன்று இருக்கப்பிறந்தவருக்கு பீனிச நோய் ஏற்படும்.

**பித்த நோய் யோகம்**

சூரியன் 6 – ஆம் பாவகத்தில் தீய கோளுடன் இருந்து மற்ற தீய கோளால் பார்க்கப்பட்டால் சாதகருக்கு பித்த நோய் ஏற்படும்.

**பால்வினைநோய் யோகம்**

சந்திரன் தீயவர்களுடன் இணைந்து கடக நவாம்சத்திலோ அல்லது விருச்சிக நவாம்சத்திலோ இருக்கப் பெற்ற சாதகருக்கு உடலின் மறைவுப் பகுதியில் நோய் ஏற்படும்.

**கடுமையான நோய் ஏற்படும் காலம்**

ஆறுக்குடையவர் நீசம் அடைந்து ஆறுக்குரியவரின் திறை நடந்து, எட்டாம் அதிபதியின் சாரத்தில் இருந்தால் கடுமையான நோய் ஏற்படும்.

**நரம்புக் கோளாறு நோய் யோகம்**

6 – ஆம் அதிபதியும் இராகுவும் சேர்ந்து 2 – ஆம் வீட்டிலிருக்க, ஜென்ம இலக்கினத்தில் செவ்வாய் இருந்து சூரியன், சனி போன்ற பாவக் கிரகங்களின் பார்வையைப் பெற்றால் நரம்புக் கோளாறு நோய் ஏற்படும்.

**நோயாளி கணவன் அல்லது மனைவி**

குருவும், சுக்கிரனும் 6 – ஆம் வீட்டில் இருக்கக் கணவன் அல்லது மனைவி நோயாளியாக இருப்பார்கள்.

**காம நோய்கள்**

இலக்கினத்தில் புதன் இருந்து அக்கோளுடன் 6, 8 – க்குடைய கோள் இணைந்திருந்தால் காம நோய்கள் ஏற்படும்.

**ஈனநோய் யோகம்**

1 – 2 – 12 களில் சனியும் செவ்வாயும் இருக்க, 8 – இல் இலக்கினாதிபதி இருக்க, கேந்திரத்தில் சுபரும், நட்புக்கோள்களும் இல்லாது இருக்கக் சாதகனுக்கு உடல் முழுவதும் பழுத்த புண்கள் இருந்து அறுவறுக்கத்தக்க ஈனநோய் ஏற்படும்.

**சூலை நோய் யோகம்**

8 – இல் சூரியனும், சனியும், கூடி இருந்தால் மகோதர நோயால் துன்பப்படுவான். 1 – 4 களில் சூரியனும் செவ்வாயும் சேர்ந்திருக்க 10 – இல் சனி இருக்க, தேய்பிறைச்சந்திரன் 2 – இல் இருக்க, 8 –9 களில் இராகு கேதுக்கள் இருக்கச் சாதகன் சூலை நோயால் இறப்பான்.

**காய்ச்சல் நோய் யோகம்**

செவ்வாய் இலக்கினத்தில் இருக்க, புதன் பாவிகளுடனும் சேர்ந்து 2–8 களில் ஒன்றில் இருக்கக் காய்ச்சலால் துன்பமுறுவர். இலக்கினாதிபதி

சுக்கிரனுடன் கூடி 8 – இல் இருக்க, அது அதனுடைய பகை, நீச வீடுகளாக, காய்ச்சல் நோய் வந்து சேரும்.

**பித்த நோய் யோகம்**

எட்டாம் அதிபதி இலக்கினத்திலும் 2 – ஆம் அதிபதி 8 – இலும் இலக்கினாதிபதியுடன் சனி கூட சந்திரன் பாவிகளுடன் கூடி வாத நோய் ஏற்படும்.

சூரியனும் இலக்கினாதிபதியும் இணைந்து 1, 8 களில் ஒன்றில் இருந்தால் பித்த நோய் உண்டாகும்.

**விரை வீக்கம் யோகம்**

குளிகன், இராகு, இலக்கினாதிபதி ஆகியவை கூடி இலக்கினத்தில் இருந்தாலும், குளிகன் திரிகோணம் அல்லது எட்டாம், இடம் பெற்றாலும், குளிகன், செவ்வாய், நான்காம் அதிபதி ஆகியவை கூடி இருந்தாலும். விரைவாதம் எனும் நோயால் விரையானது நாளுக்கு நாள் வீங்கிப் பருத்துக் கொண்டே போகும்.

குறிப்பு

.........................................................................................

.........................................................................................

.........................................................................................

.........................................................................................

.........................................................................................

.........................................................................................

.........................................................................................

.........................................................................................

.........................................................................................

.........................................................................................

.........................................................................................

.........................................................................................

.........................................................................................

.........................................................................................

.........................................................................................

.........................................................................................

.........................................................................................

.........................................................................................

.........................................................................................

.........................................................................................

.........................................................................................

.........................................................................................

.........................................................................................

.........................................................................................

## குறிப்பு

குறிப்பு

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

.....................................................................................

குறிப்பு